9

வசந்தம்

விலை 8 அணா

…ரண - ஆனி

1944 - ஜூன்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில்
நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி
பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம்,
சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:
வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்டிங்,
மல், சதர்,
தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

அஜாக்ஸ் உங்கள் தற்காப்புக்காக



வீட்டிலாகட்டும், ஆபீசிலாகட்டும் அஜாக்ஸ் இரும்புச் சாமான்கள் பாதுகாப்புடன், சோபையுமளிக்கின்றன. உறுதியான அமைப்பும், அழகான தோற்றமு முள்ளவை.

உங்கள் விலையுயர்ந்த பொருள்களைக் காக்க **அஜாக்ஸ்** இரும்பு அலமாரிகளையே தேர்ந்தெடுங்கள். திருடர்கள் முயற்சியை வீணாக்குவதிலும் நெருப்பு, கரையான் முதலிய நாசம் உண்டு பண்ணும் பூச்சிகள் இவைகளால் சேதமடைவதை தடுப்பதிலும் தலை சிறந்தவை

பெருந் தீயையும், பக்காத் திருடர்களையும் எதிர்த்து நிற்க, மிகச்சிறந்த பொருள்களைக்கொண்டு ஏற்ற வகையில் செய்யப்பட்டவை இந்த இரும்புப் பெட்டிகள்.

Ajax

PRODUCTS LTD.

106, ARMENIAN STREET, MADRAS.

AS-K.6

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: ம௵ருகப்பா & சன்ஸ்.

கிளை ஆபீஸ்: நெ. 5, வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்.

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Mssrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

B O C

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.

வசந்தம் வாசகர்களே!
உங்களுக்கு எது தேவை?

சுடர் மிகுந்த வைரங்கள்
தங்க நகைகள்
வெள்ளி சாமான்கள்
எனுமல் மோதிரங்கள்

GOLD & SILVER WARES
K.R. & SONS
(PHONE No. 226) JEWELLERS, COIMBATORE.

முதன்மை ஸ்தானம்
வகிப்பது

சிறந்த
வேலைப்பாடுள்ளது

உத்திரவாத முள்ளது

எல்லோரும்
விரும்புவது

K R
சீல்

PHONE
226

தந்தி
கிருஷ்ணு

கே. ஆர். & சன்ஸ்,

நகை வியாபாரம்

பெரிய கடை வீதி : : கோயமுத்தூர்

MADRAS
4-JUL 1944

KUPPURAJ

JEWELLER, COIMBATORE.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', gents', Children's Underwear Sport Shirts etc.

S. Beemiah Chetty.

"WHITE SHOP" COIMBATORE.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

K. B. R. JWELLARY

BIG BAZAR COIMBATORE.

எல்லா நலங்களும் பெற

எல்லா தேசங்களும் தங்கள் தலைவர்களையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களெல்லாம் யுத்தத்திற்குப் பின் புனர் அமைப்புத் திட்டங்களிலும் எல்லா நலங்களும் பெற, என்ன செய்வது என்ற முக்கிய பிரச்சனையிலுமே சிந்தை லயித்திருக்கிறது.

குடும்பத் தலைவரும் பாதுகாப்பாளருமான உங்களுக்கு உங்கள் மனைவி மக்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வ தெப்படி என்பதிலேயே கவனம் சென்றிருக்கிறது. நீங்கள் எப்போதாவது உங்களுடைய அன்புக்குகந்தவர்கள் எல்லா நலங்களும் பெற என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்க்கை எப்போதுமே உங்களுக்கு இன்பகரமாயிராது. உங்கள் உயிருக் குயிரானவர்களிட மிருந்து விதி திடீரென சதி செய்து பிரித்து விடலாம். அப்போது மரணத்திற்குப் பின் பிரச்சனை எழுகிறது. அப்போது யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய சந்ததியின் நல் வாழ்வுக்காகவும் கல்விக்காகவும் யார் நிதி சேகரித்து வைத்திருக்கிறார்கள்?

எங்களைக் கலந்து ஆலோசித்தால் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்து உதவத் தயாராயிருக்கிறோம்.

★

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

சென்னை கிளை: **4 & 5 முதல் லைன் பீச், சென்னை**

GLUCONATE - D

வைடமின்-D உள்ள கேல்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள். சாக்லேட் பூசப்பட்டு ருசியாயிருக்கும்.

கேல்ஸியம் குறைவு, கர்ப காலம், பாலூட்டல், குழந்தைகள் எலும்புகள் பலப்படுத்த — சிறந்த மருந்து.

இது I. T. L. ப்ராடக்ட்

Government Industrial & Testing Laboratory

Malleswaram P. O., BANGALORE.

OVERSEAS REPRESENTATIONS

FRASER SQUARE.

COIMBATORE.

DEALERS IN ALL KINDS OF

HARDWARE, MILL STORES ETC.

A TRIAL ORDER WILL

CONVINCE YOU.

வசந்தம்

மலர் 3] **பொருளடக்கம்** [இதழ் 2

கனகசபைப் பிள்ளை	...	அ. கி	... 1
மங்கியதோர் நிலவினிலே	...	ரா. நா	... 3
கலைஞனும் சமூகமும்	...	பி. கோதண்டராமன்	... 5
மோஹினி	...	"சுகி"	... 7
கலையும் உருவமும்	...	ஸ்ரீமதி சாஸ்திரி	... 13
பொழுது போக்கு	...	திருலோகன்	... 15
சிலப்பதிகாரம்	...	சர். சண்முகம் செட்டியார்	... 17
குழந்தையுள்ளம்	...	ஸ்ரீமதி அபயம்	... 29
கலைக் கோயில்	...	சுத்தானந்த பாரதி	... 33
கண் கொள்ளாக் காட்சி	...	வித்துவான் அ. கி, பி. ஓ. எல்	... 40
புன்னகை	...	கமலா பத்மனுபன்	... 45
பௌர்ணமி இரவு	...	நாரண-துரைக்கண்ணன்	... 55
புத்தக ஆராய்ச்சி	...	... ...	... 59
எழுத்தாளர் சங்கம்	...	... ...	... 60
சாவித்திரி	...	ஆர். ஷண்முக சுந்தரம்	... 61
வால் நட்சத்திரம்	...	ஸ்ரீமதி சரஸ்வதி	... 67
கல்யாணியின் கனவு	...	கே. விஜயராகவன்	... 76
மலர் மணம்	...	... ...	... 84

★

விளம்பர அட்டவணை

அஜாக்ஸ்	... ...	I
பர்மாஷெல் கோயமுத்தூர்	... ...	II
கே. ஆர். & சன்ஸ்	... ...	III
பீமையச் செட்டி, ஆர்ய வைத்தியர், வசந்தா டையிங் ஒர்க்ஸ், கே. பீ. ஆர்., குப்பு ராஜ்.	...	IV
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்	... ...	V
க்ளுகோனேட், ஓவர்ஸீஸ் ரெப்பிரசன்டேஷன்	...	VI
காமதேனு வனஸ்பதி	... ...	VIII
கொச்சின் டெக்ஸ்டைல்	... ...	IX
கவர்னர் யுத்தநிதி, உம்முடியார்	... ...	X
ஸ்ரீ ராமவிலாஸ்	... ...	XI
அரவிந்த் மில்ஸ்	... ...	XII

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
199796
சென்னை

சமையல் சங்கீதம் ஆரம்பமாகிவிட்டது

நமது சமையலறைகளின் இருளும், நிசப்தமும் ஒழிந்தன. காமதேனு வந்தது; பொரியலும் சமையலும் பரபரவென்று நடக்கின்றன. ஆகா! என்ன ருசியான லட்டு, ஜாங்கிரி, பேணி, உப்புமா, ஸொஜ்ஜி பஜ்ஜி! வாருங்கள் வேண்டியமட்டும் சாப்பிடலாம்! கசிவற்ற, மணமற்ற பொரியல் சாதனமான காமதேனு சமையலுக்கு மிகச்சிறந்தது. ஆரோக்கியமளிக்கும் வைடமின்கள் மிகுந்தது. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ள காமதேனு பரிசுத்தமானது, கைபடாதது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.

சிறந்த சமையற்காரர்கள்

வேண்டுவது

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர்கள்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVH. 2. TM.

மானேஜிங் ஏஜண்டுகள்: சேஷஸாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

விற்பனையாளர்: அல்லீடு இண்டஸ்டிரியல் டிஸ்டிரிபியூட்டர்ஸ் லிமிடெட்.

120, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.



நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

—கம்பர்

கனகசபைப் பிள்ளை

[அ. கி]

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தமிழ் மொழியின் சரித்திரத்திலே மிக முக்கியமானது. அது, இந்நாட்டில் பல்கலைக் கழகங்கள் ஏற்பட்ட காலம்; ஆங்கிலக் கல்வி எங்கும் பரவியகாலம். ஆங்கிலம் கற்றதன் பயனாக அறிஞர்கள், தமிழ் இலக்கியத்தைப் புதிய புதிய முறையில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். புதிய பொருள்களைப் பற்றிப் புதிய நூல்களும் தமிழில் வெளிவரத் தொடங்கின. தமிழ் நூல்கள் அழகிய முறையில் அச்சிடப்பட்டு வெளிவந்தன.

இந்தத் துறையில் தமிழ் நாட்டோடு, யாழ்ப்பாணமும் ஒன்று சேர்ந்து உழைத்தது. சிறிது ஊன்றி நினைத்தால், தமிழ் நாட்டாரை விட, யாழ்ப்பாணத்தார் தமிழுக்குக் காட்டும் மதிப்பு அதிகம்; தமிழ் படிப்பவரும் அப்படியே; ஆங்கிலம் படித்தவரும் அப்படியே. தமிழ் நாட்டை நினைக்கும் போது, யாழ்ப்பாணம் எவ்வளவோ மடங்கு சின்னஞ் சிறிய ஒரு இடம். ஆனால், தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் அது செய்திருக்கும் தொண்டு மிகப் பெரியது. ஆறுமுக நாவலர், நா. கதிரைவேற் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, தி. த. கனக சுந்தரம் பிள்ளை முதலிய பல பெரியோர்களை நெடுநாளைக்கு முன்பே தமிழ் உலகுக்கு அளித்தது யாழ்ப்பாணம். இவர்களைப் போன்ற இன்னொரு பெரியார் திரு. கனகசபைப் பிள்ளை.

இவர்கள் யாழ்ப்பாணத்தாராக இருந்தாலும், எல்லாரும் தமிழ் நாட்டிற்கு வந்து தான், தம்முடைய தொண்டுகளைச் செய்திருக்கிறார்கள். திரு. வி. கனகசபைப் பிள்ளையவர்கள், கல்வித் துறையில் பெரிய உத்தியோகங்களில் இருந்தவரல்ல. புலவராக விளங்கியவருமல்ல. இருந்தாலும், இவர் செய்த வேலை, அவர்கள் செய்யக்கூடிய தொண்டுகளைவிட மேம்பட்டுவிட்டது.

திரு. கனகசபை, சென்னையில், தபால் துறையில் பெரிய உத்தியோகங்களில் இருந்தவர்; ஓய்வு கிடைப்பது அருமை. அந்த நாள் தமிழ் நூல்கள் சரியாக வெளிவராத காலம்; தமிழ் ஆராய்ச்சி பக்குவமடையாத காலம். இளமை முதற்கொண்டு, இவருக்கு நிரம்பிய தமிழார்வம் இயற்கையாக அமைந்திருந்தது. வேலை நெருக்கடியான பெரிய உத்தியோகத்தில் இருந்தபோதுங்கூடத் தமிழ் நூல்களை ஆராய்வது இவருக்கு ஒரு பொழுது போக்கு.

தென்னிந்திய சரித்திரத்தை யார் எழுதத் தொடங்கினாலும், இவர் நூலைத் தொடாமல் இதுவரை யாரும் எழுதியதில்லை. ஒன்று, இதிலுள்ள செய்திகளைக் கடன் வாங்க வேண்டும்; இல்லை, இதன் முறைகளைக் கையாள வேண்டும்; அல்லது, இதில் ஏதேனும் சில செய்திகளை மறுக்க வேண்டும்.

இந்திய சரித்திரப் பேராசிரியரான டாக்டர். வின்செண்ட் ஸ்மித் முதலாக தென்னிந்திய சரித்திரத்தை நேற்று எடுத்து எழுதிய ஆசிரியர் வரையில் உள்ள எல்லோருக்கும் இந்த நூல் பெரிதும் உதவி செய்திருக்கிறது. டாக்டர். வி. ஏ. ஸ்மித், "இந்திய சரித்திரம் தென்னிந்தியாவிலிருந்து தொடங்கி எழுதப்படாத வரையில், அது முற்றுப் பெற்றதாகாது" என்று எழுதுவதற்குக் காரணமாக இருந்த மிகச் சில நூல்களுள் திரு. வி. கனகசபையவர்கள் நூலும் ஒன்று.

மற்ற நூல்களில் இல்லாத பல செய்திகளும் சிறப்பும் இந்த நூலில் இன்னும் நிலைத்திருக்கின்றன. அதனால் தான் இன்றைக்கும் இந்த நூல் சரித்திர ஆசிரியர்களால் பேசப் படுகின்றது. அதுமட்டுமல்ல, இதுவரைக்கும் அவருடைய பெயர் நிலைத்து விளங்குவதற்கும் அந்த நூல் தான் முதற்காரணம். அது தான், "1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்கள்." (Tamils1800 Years Ago.)

தமிழருடைய பழைய நாகரிகச் சிறப்பைச் சரித்திரச் சான்றுகளோடு முதல் முதல் விளக்கிக் காட்டிய நூல் இதுவே. இது, 40 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதல் புத்த வடிவில் வெளி வந்தது.

பரந்த நெற்றி, அகன்ற உருண்டை முகம், குவிந்த கண், பெரிய தலைப்பாகை, கருத்த மீசை, எடுத்த தோற்றம் ஆகிய இவை, பார்த்தவுடன் இவர் ஒரு நல்ல தமிழர் என்பதை நினைப் பூட்டுகின்றன. அவரது கம்பீரமான தோற்றம் போல, அவரது புகழும் ஓங்கி வளருவதாக.

இயற்கை இன்பம்:

மங்கியதோர் நிலவினிலே

[ரா. நா]

நானும் எனது நண்பனும் தினசரி அங்கே போகத் தவறுவதில்லை. மாலையில் அந்த இயற்கைக் காட்சி அவ்வளவு இன்பமாயிருக்கும். அதுவும் நிலா நாளில் அங்கிருந்து திரும்பி வர மனம் வராது. ஆனல் நண்பன் விடுமுறை நாளைத் தன் காதலியுடன் கழிப்பதற்காகச் சென்று விட்டான். நான் மட்டும் தனியே செல்வதா என்று சிந்தித்தேன். வீட்டில், தனிமையுடன் உறவாடுவதை விட இயற்கையுடன் ஒன்றி விடலாம் என்று புறப்பட்டேன்.

எங்கள் ஊருக்கு வெளியே ஒரு சிறு நதி. நதியென்ருல் பிரமாத அகலமுமில்லை. சிறிய ஒடை என்றும் சொல்லி விட முடியாது. அந்த நதிக் கரையின் ஓரமாக தினம் நடந்து செல்வோம். ஒரு புறம் நதி நீர் இரு மருங்கிலுமுள்ள செடி கொடிகளை அணைத்துக் கொண்டு ஜிவ்வென்று ஓடும் காட்சி. மற்றொரு புறம் ஒரே வாழைக் கொல்லை. சற்று தூரம் கடந்து சென்ருல் ஒரே பச்சைப் பசேலென்ற நெற் பயிர். இன்னும் சற்று தூரம் சென்ருல் ஒரே கரும்புக் காடு கம் மென்று வாசனை வீசும். இப்படி ஒரு மைல் தாண்டி விட்டால் நதி பல நூறு கஜங்களுக்குப் பாறை மேல் ஒடி வருகிறது. இயற்கையான நதிக் கரை கிடையாது. இரு புறங்களிலும் தண்ணீர் மட்டத்திற்கு கற் சுவர் உயர்த்தப்பட்டிருந்தது. தண்ணீர் பெருக்கெடுத்தால் கரையை உடைத்து விடாமலிருக்க ஒரு புறத்தில் சுவரில் சிறு துவாரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அவைகள் மூலம் தண்ணீர் வழிந்து பாறைகளைத் துருவிக் கொண்டு கரைக்குச் சென்று சிறு ஓடையாகத் தத்திக் குதித்து ஓடும்.

இந்த கற் சுவர் மீது சில அடிகள் நடந்து போனல் ஒரு காளி கோவில். மனித சஞ்சாரமே இல்லாத இடத்தில் அம்மன் கோயில் கொண்டிருக்கிருள். அம்மன் கோயிலுக்கு எதிரில் பெரிய பாதாளம். கோயிலுக்குப் பின் புறமுள்ள நதியிலிருந்து நீர் அம்மனுக்கு மாலையிடுவது போல் இரு புறங்களிலும் வழிந்து பாதாளத்திற்குப் போகும். என் நண்பருடன் வரும் நாட்களில் அருவியில் நீராடி விட்டு அம்மன் சந்நிதானத்திற் கெதிரில் உட்கார்ந்து கொண்டு பகற் கனவு கண்டு கொண்டு எங்களையும் மறந்து பேசிக் கொண்டிருப் போம்.

* * *

நதி வழி நடப்பதே, அதுவும் நண்பனுடன் நடப்பதே ஒரு தனி ஆனந்தம். ஆனல் அன்று எல்லாம் சூன்யமாகத் தோன்றியது. உள்ளத்தைக் கவரும் பல காட்சிகள் வெறுப்பையே அளித்தன. எனினும் யந்திரம் போல் நடந்து வந்தேன். அருவியில் நீராடினேன். ஜலம் ஜில்லென்றிருந்தாலும் கொதிப்பது போல் இருந்தது. மனம் நிம்மதியாயிருந்தாலல்லவா இயற்கை இன்பந் தரும். ஆகையால் அருவியை விட்டுக் கிளம்பி அம்மன் சந்நதி சென்றேன். அம்மன் இயற்கையாகவே "பயங்கரத்" தோற்ற முள்ளவள். ஆனல் நண்பனுடன் வரு

கையில் அம்மன் தோற்றம் பயங்கரமாக தோற்றுவதில்லை. ஆனல் அன்று ஏதோ அச்சம் மேலிட்டு மெய் சிலிர்த்தேன். உடனே சந்நிதியை விட்டு அகன்றேன். கோயில் தாண்டி நதிக் கரையில் அதற்கு முன் சென்றதில்லை. அன்று மேலே தான் நடந்து பார்க்கலாம் என்று சென்று விட்டேன். கோயிலிலிருந்து கொஞ்ச தூரத்தில் நதி வளைந்து செல்லுகிறது. அந்தத் திரும்பும் இடத்தில் தண்ணீர் மோதுவதால் சலசலப்புச் சத்தம் கேட்டது- இந்தச் சத்தம் வேறு மனதின் அமைதியை மேலும்குலைத்தது. எனினும் மூலையில் அமர்ந்து நதியின் விளையாட்டைக் கவனித்தேன். இதற்குள் சூரியன் அஸ்தமனமாகி விட்டான். அன்று பௌர்ணமி போலிருக்கிறது. பூரணச் சந்திரன் கிளம்பி விட்டான். நானும் எழுந்து இன்னும் சற்று தூரம் செல்வதற்காக இரண்டடி எடுத்து வைத்தேன்.

கொஞ்ச தூரத்தில் நதிக் கரையில் இரு உருவங்கள் உட்கார்ந்து கொண்டு தங்கள் பாதங்களை நீரில் வைத்துக் கொண்டிருந்தன. நிலவொளியில் பார்த்தால் இரண்டில் ஒன்று இளவயது மங்கையின் உருவம். வயது பதினறு இருக்கும். அந்த உருவத்தை அணைத்தவாறே சந்திரனையும் மங்கையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு சௌந்தரியத்தைப் பருகிக் கொண்டிருந்தது மற்ருெரு உருவம். சரி காதலர்கள் என்று அறிந்து கொண்டு வந்த வழியே திரும்பினேன். இவ்வுலகில் வேறு ஜீவராசிகள் இருக்கிருர்கள் என்ற உணர்வு இல்லாத இரு ஆத்மாக்கள். அவர்களுடைய ஆனந்த நிலையில் என் தனிமையைக் கண்டு நகைப்பது போலிருந்தது.

அம்பு பட்ட மான் போல் வந்த வழியே திரும்பினேன். வேகமாக நடந்தேன். வழியில் பழைய காட்சிகள் என் மனதைக் கவரவில்லை. எல்லாம் சூன்யமாகத் தோன்றியது. என் நண்பன் தன் காதலியுடன் களிக்க ஊர் சென்று விட்டான். தனிமையை ஒழிக்க இயற்கைத் தேவியின் உதவியை நாடிச் சென்ற இடத்தில் இணை பிரியாக் காதலர்கள் என் தனிமையைச் சுட்டிக் காட்டுகிருர்கள். இந்தக் கொடுமையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே செல்லுகையில் அந்த விரிந்த வானத்தை நோக்கினேன். சந்திரனும் மேகத்திரைக்குள் மறைந்து அந்தகாரத்தில் ஒன்றி விட்டான். எங்கும் ஒரே இருள், உள்ளும் புறமும்!

கலைஞனும் சமூகமும்

பி. கோதண்டராமன் எம். ஏ; பி. எல்

அபூர்வமான மேதையுடைய கலைஞன் பிரம்மாவைப் போன்று சுயமாகப் படைக்க வல்லவன் என்றும், தன் எழுத்தைப் படிப்போருக்கு இன்பம் பயப்பதைத் தவிர வேறொரு நோக்கும் அவனுக்குக் கிடையாதென்றும், சமூகத்தின் பால் அவனுக்கு யாதொரு பொறுப்புமில்லை யென்றும் சிலர் வலியுறுத்துவர். இது இலக்கியச் சிருஷ்டியைப் பற்றிய ஒரு தவறான கொள்கையாகும். இது வாழ்க்கையிலும் சமூகத்திலும் இலக்கியம் வகிக்கும் இடத்தை அடியோடு புறக்கணிப்பதாகும்.

ஒரு சமூகத்தில் தோன்றிய அதன் உறுப்பினருள் ஒருவனாக வாழும் கலைஞன், கவி அல்லது எழுத்தாளன், சமூகச் சூழ்வு, கால தேச வர்த்தமானங்கள் இவற்றின் தொடர்பின்றி யாதொன்றையும் சுயமாகச் சிருஷ்டிக்க முடியாது. சமூகச் சூழ்வு அவனைப் பாதிக்காமல் விடுவதில்லை. அது அவன் எழுத்தின் நோக்கையும் உருவையும் உருப்படுத்துகின்றது. அவன் வதியும் காலத்தில் நிலவும் சிந்தனைகளும் கருத்துக்களும் அவன் சிருஷ்டியின் போக்கை நிர்ணயிக்கின்றன. அவன் வாழ்க்கையின் உண்மைகளினின்று விலகி நின்று வெறும் கற்பனையில் ஆழ்வானாயின், அவன் சிருஷ்டிக்கும் இலக்கியம் உயர்ந்த, சீவனுள்ள இலக்கியமாகத் திகழாது. சமூகத்தில் வாழும் எழுத்தாளன் சமூக மக்களுடன் ஐக்கியப் பட்டே தன் பணியில் இறங்கி அதை நிறைவேற்றுகிறான். பொது மக்களின் சுவையும், அவன் காலத்தில் நிலவும் கருத்துக்களும் அவன் மீது ஓரளவு ஆதிக்கஞ் செலுத்துகின்றன. தானாக உணர்வுடன் அவற்றின் மீது கவனஞ் செலுத்தாவிடினும், தன்னையும் அறியாமல் அவன் அவற்றின் செல்வாக்குக்கு உட்படுகிறான். அவை அவன் இயல்பையும் அதன் மூலம் அவனது சிருஷ்டியையும் உருப்படுத்துகின்றன. அவனுடைய கற்பனைச் சிருஷ்டிகளுங்கூட, அவன் வாழும் உலக வாழ்க்கையில் காணும் மதிப்பிற்குரிய விஷயங்களின் பிரதி பிம்பங்களேயாம். யாவும் எப்படியோ அவனது சிருஷ்டியில் நுழைந்து விடுகின்றன. அவன் காலத்திய வாழ்க்கை, இன்பதுன்பங்கள், சமூக, பொருளாதார, ராஜீய பிரச்சனைகள் ஆகிய வற்றுடன் அவனது சிருஷ்டி துடிதுடிக்கின்றது. சமூகச் சூழ்வின் சாயை அவன் எழுத்தில் எப்படியோ படிந்து விடுகின்றது. மக்களின் விருப்பு வெறுப்பு ஆர்வம், நிராசை ஆகிய யாவும் எப்படியோ வெளிப்பட்டு விடுகின்றன. ஒவ்வொரு உலக மகா கவியும் தன் காலத்தின் பிரதிநிதியாகவே விளங்கி வந்திருக்கிறான்.

ஆனால், எழுத்தாளன் சமூக வாழ்க்கை, கால தேச வர்த்தமானங்கள் இவற்றின் செல்வாக்குக்கு உட்படுவதோடு நின்று விடுவதில்லை. அவன் தானும் தன் எழுத்தின் மூலமாகச் சமூகம், காலம் ஆகியவற்றின் மீது தன் செல்வாக்கைப் பிரயோகிக்கிறான். தன் சுவையை மக்களுக்கு ஊட்டுகிறான். தன் தனியியல்பையும் சுயரூபத்தையும் பிறர் உணரும் படிச் செய்கிறான். சமூக சம்பிரதாயத்தைப் புதுக்கி அதற்குப் புது சீவன் அளிக்கிறான். சமூகத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை

வெளிப்படுத்திப் புது வாழ்வுக்கு வித்து போடுகிருன். அவன் சிருஷ்டிக்கும் பொருளின் மூலம் சம வாழ்க்கையினின்றே பெறப் படுகிறதாயினும், அவன் அதற்குக் கொடுக்கும் உருவமும் அமைப்பும் அவனுடையனவே யாகும். அவனது அழகிய மொழிவளம், எழுத்துக்கு எழிலும் உயிரும் அளிக்கின்றன. தற்காலத்திய வாழ்க்கையைப் பிரதி பலிப்பதோடு நின்று விடாமல், தானும் வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்க்க வழி காட்டுகிருன். அரசியல் விஷயங்களில் செயலளவில் ஈடுபடா விடினும், தன் நூல்களின் வாயிலாக மக்களின் அரசியல் ஞானத்தையும் சிந்தனைகளையும் தூண்டி விடுகிருன்.

இவ்வண்ணமாக சமூகமும் தனி எழுத்தாளனும் பரஸ்பரம் தம் செல்வாக்கைப் பிரயோகித்துக் கொள்ளுகின்றனர். இதனுல் எழுத்தாளன் தன் தனித் தன்மையை இழந்து விடாமல், அதையும் வெளிப்படுத்துகிருன். சமூக சம்பிரதாயங்களுக்குப் புத்துயிரளிப்பதன் மூலம் தன் கலைக்கும் சீவனளிக்கிருன். சமூக அபிவிருத்திக்கான சீர்திருத்தங்களையும் மறைமுகமாக வலியுறுத்துகிருன்.

தன் உள்ள நெகிழ்ச்சிகளை அழகாக வெளிப் படுத்துவதில் தான் கலைஞன் தன் சாமர்த்தியத்தைக் காட்டுகிருன். அக்கலையழகால் அந்நெகிழ்ச்சிகளின் உருவமே மாறு படுகிறது. அவற்றை அவன் லட்சியம் பொருந்தியனவாகச் செய்து விடுகிருன். அவற்றிற்குக் காலதேச வர்த்தமானங்கடந்ததொரு விசுவமயமாக போர்வையை அளிக்கிருன். அதன் மேல் தனி மனிதன் சாக்காக இராமல், அகிலத் தன்மை வாய்ந்தனவாகின்றன. ஆயினும், அவனது தனியியல்பு அவற்றில் ஓரளவு மறைந்து கிடக்கத்தான் செய்கின்றது.

எழுத்தாளனின் எழுத்து அவன் தனக்கென வெளிப்படுத்தும் ஒரு வெளிப்பாடு அன்று. அந்த வெளிப்பாடு பிறரது வாழ்க்கையிலும் செலுத்தப் படுகிறது.

எழுத்தாளனின் எழுத்து மக்கள் தம் லட்சியங்களை யடைய ஒரு கருவியாகிறது. அது மானிட மனத்தின் மர்மங்களை அனைவரும் உணரும்படிச் செய்கிறது. மக்களின் இயல்பு, அவர்களின் செயலைத் தூண்டும் எழுச்சிகள், விருப்பு வெறுப்புக்கள், கனவுகள், ஆர்வங்கள், நோக்கங்கள் இவற்றையும் புலப்படுத்துகின்றது. இதனுல் மக்களினமே ஒன்ருவதற்கு வழி யேற்படுகிறது.

மானிட வாழ்க்கையில் நிரந்தரமானதும் அபூர்வ மதிப்பு வாய்ந்ததுமான பொருளை எடுத்துக் காட்டுகிருன். அவன் வாழ்க்கையைப் பற்றிச் செய்யும் விளக்கமும் விமர்சனமும் அக்கால மக்களின் உணர்வு, விழிகளை உருப்படுத்தி விழுமிய நிலையடையச் செய்கின்றன. எழுத்தாளனின் சக்தி வாய்ந்த சிருஷ்டி சமூகச் சூழ்வை அடியோடு மாற்றி விடுகின்றது.

இங்ஙனமாக, எழுத்தாளன் வதியும் கால நிலையும் சமூகச் சூழ்வும் அவன் நோக்கையும் போக்கையும் நிர்ணயிப்பது போலவே, அவனும் தன் எழுத்தின் ஆற்றலால் அக்கால நிலையிலும் சமூகச் சூழ்விலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படச் செய்கின்ருன். இந்த அன்னியோன்னியமே அவன் எழுத்துக்குச் சீவகளையும் வலிமையும் தருகின்றது.

நகைச் சுவை

மோஹினி

"சுகி"

காலம் வஸந்த காலம்; நேரம், அந்தி நேரம்: இடம், பொருநை ஆற்றங்கரை. மோஹன் படித்துறையில் இறங்கி வந்து கொண்டிருந்தான். எதிரே, பெண்கள் வர்ணவிஸ்தாரமான ஈரப்புடவைகள் சந்தனக் குழம்பு போல் பொன் மேனியில் அப்பிக் கொள்ள, மயில் போல் ஒயிலாக நடந்து, குயிலாகப் பேசி, சம்மேளமான ராகங்கள் ஸ்வரவரிசை போலக் குடமேந்திச் செல்லுகிறார்கள். வெண் மணற் பரப்பிலே பாலகர்களின் சடு குடு ஆட்டம்: தெளிந் தோடும் பளிங்கு நீரில், சாதம் உண்ணும் குழந்தைகளின் கும்மாளமும், ஊட்டும் பெரியவர்களின் உற்சாகமும் ஒரே கோலாகலம்!

இக்காட்சிகள் மோஹன் மனசைக் கவரவேயில்லை. தனிமையாக இருந்தவன் இயற்கை யின்பத்தில் நெஞ்சு செலுத்தி, மேற்கே வரிசை வரிசையாக நிமிர்ந்தெழுந்த மேகப் படலங்களுக்குள் ஐக்கியமானான். சந்தியா சூரியன் தன் ஒளிக்கிரணங்களுடன் மலைச்சரிவில் ஒளிந்து கொள்ளும் சோக நாடகத்தில் தன் முழு இருதயத்தையும் லயிக்க விட்டுவிட்டான்.

சூரியன் மறைந்தான். மறைந்தும் இருள் சூழவில்லை. வானக் கடலில் வெடித் தெழுந்த வைரங்கள் பூத்துச் சொரிந்தன. அதாவது நக்ஷத்திரங்கள் தோன்றின.

ஆற்றங்கரைப் பூந்தோட்டத்திலிருந்து, பட்டு ரோஜாவின் மணத்தைப் பிள்ளைத் தென்றல் ஏந்தி வந்தது. மோஹன் பெருமூச்சுவிட்டு, ஆகாயத்தை நோக்கினான். அப்போதுதான் வெண் மேகக் கூட்டங்களின் இடையே விரித்திருந்த நீலப் பட்டாடையிலே, திடீரென்று ஒரு சுடர் தோன்றிற்று.

இதற்குள் மந்த மாருதம் மெல்லென ஆடி வந்தது. எங்கோ வகுளமரக் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, பூக்களைச் சொரிந்தன. பசிய வேப்ப மரத்தின் கிளைகள் ஊடாக, நிலா உதயமாயிற்று. குளு குளு நிலாவும், அசைந்து வரும் ஆனந்தத் தென்றலும் அவன் உணர்ச்சியையும் மனதையும் கவர வேண்டுமல்லவா! இயற்கைத் தேவியே வெகு சிரமப் பட்டு, நிலாவையும் நீல வானத்தையும், நெடுந்தரையில் நீரோட்டத்தையும், வெண் மணற் பரப்பையும் ஒன்றுபட அமைத்தும் மோகனின் மனம் நிம்மதி அடையவில்லை.

ஆம், அவன் மனசிற்குள்ளாக நாம் புகுந்து பார்க்கலாம். பார்த்தால், அவன் யாரோ ஒருவர் — ஆமாம் ஒரு ஆடவ்ரின் — வரவிற்காக ஏங்கி இருக்கிறான் என்று உணர்வோம்! ஆற்றங்கரைப் பக்கமாக தன்னிரு கருவிழிகளைச் செலுத்தி, தன் கண்ணையே நம்பிக் கொண்டிருந்தான்.

இயற்கை, எப்போதும் ஒன்று போல் இருப்பதில்லை; அது இயற்கை! அடிக்கடி மாறுந் தன்மை கொண்டது. கூந்தலை முடிக்கிற டேப் நிறம் போல அல்

லது மாந்தர் மனம் போல, இரவைப் பகலாக எரித்த வெண்ணிலவின் சோபையை, கரிய மேகங்கள் மறைத்தன. மாங்குயிலின் குஞ்சொன்று காகத்தின் முகந் தெரியாது கூவிற்று (குயிலின் குஞ்சு காகத்தின் கூட்டில் வளரும் எனச் சொல்ல வேண்டியதில்லை.) மோஹனின் பார்வை வர வர மங்கியது, நிலாவைப் போல் திடீரென, அவன் கண்களைப் பத்து விரல்கள் பொத்தின.

"ஆ, யாரது? என் மோஹினி எங்கே?"

"மோகன், சப்தம் போடாதே மோஹினி வரவில்லை. நான்தான் வந்தேன்."

"மோகினி ஏன் வரவில்லை? சங்கரா, உன்னையா நம்பி இருந்தேன்?"

மோஹன் இதய கமலத்திலிருந்து புறப்பட்ட உஷ்ணம் அப்படியே சங்கரனைத் தகிப்பது போலிருந்தது.

"நான் நம்பிக்கைத் துரோகியல்ல"

பொத்திய கைகளை வாங்கிய சங்கரன், ஏதோ காதோடு சொன்னான். கடோபநிஷத்தைக் கேட்ட சாண்டில்ய முனிவரைப் போல் மோஹன் முகம் ஜாஜ்வல்யமாகத் திகழ்ந்தது.

மோஹனும் சங்கரனும் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். வானக் கடலிலே நிலா ஓடம் விட்டுக் கொண்டிருந்தான். ஆற்றிலே தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காகத்தின் முகத்தைக் கண்ட மாங்குயிற் குஞ்சு கத்திற்று.

இவ்வளவு நல்ல சந்தர்ப்பம் இருக்கும் போது முதல் அத்தியாயம் முடிக்கலாமல்லவா?

சங்கரன் சங்கடம்

கதையின் முற்போக்கைவிட பிற்போக்குத்தான் முக்கியம். எழுத்தாளர்கள் 2–ம் அத்தியாயத்தை, பூர்வோத்திர விளக்கத்திற்கு ஒதுக்கி வைத்துள்ளார்கள். அச்சம்பிரதாயப்படி கதாபாத்திரங்களின் பூர்வோத்திரங்களைக் காணலாம்.

நம்முடைய மர்மம் செறிந்த கதைக்கு மோஹினி முக்கிய பாத்திரமல்ல; இரண்டாம் பக்ஷந்தான். மோஹன் வீட்டிற்கும் சங்கரன் வீட்டிற்கும் ஊடாக உள்ள குட்டிச் சுவர்தான் கதையின் இதயஸ்தானம். இக்குட்டிச் சுவரை நம்பியே இரு வக்கீல்கள் பெரிய பணக்காரர்கள் ஆனார்கள். அந்தக் குட்டிச்சுவர் ஒன்றும் தப்பிதம் செய்யவில்லை. அது இருந்த இடத்திற்கு ஊடாக மோஹன் குடும்பத்தாரும், சங்கரன் குடும்பத்தாரும் குடி வந்தது தான் தப்பு.

குட்டிச் சுவர் யாருக்கென விவாதம் எழுந்தது. விடாப் பிடியாக வக்கீல்கள் குட்டிச் சுவரை அண்டினார்கள். முடிவில் இரு திறத்தாருக்கும் அது பொது என்று தீர்ப்பு ஆயிற்று. உடனே இரு திறத்தாரும் ஒவ்வொரு அடிச் சுவராக எழுப்பினார்கள். அந்த வீட்டுக் காற்று இந்த வீட்டுக்குள் வராது. இந்த வீட்டுத் தாளித்த வாஸனை அந்த வீட்டுக்குள் போகாது. இப்படி இருக்கிற போது, மனிதர்களைப் பற்றி பேசுவானேன்?

ஆனால், மோஹனின் தகப்பனார் அந்த வீட்டை விற்றுவிட்டு அடுத்த ஊரில் குடியேறிவிட்டார். சங்கரன் குடும்பம் அங்கேயிருந்தது.

நமது கதை நடக்கும் நேரத்தில், மோஹனும் சங்கரனும் பரம்பரை குடும்ப விரோதிகளுடைய சந்ததிகள். பள்ளித் தோழர்கள் ஆன படியால், பெற்றோருக்குத் தெரியாது சிநேகமாக இருந்தனர். மோஹினிக்காக, மூன்று மைல் தூரம் நடந்து ஆற்றங்கரைக்கு வந்திருந்தும், சங்கரனோடு மோஹினி—வராமல் ஏமாந்ததும் போன அத்தியாயத்தில் அறிந்த விஷயம்.

இனியுள்ள கதை. சங்கரன், மோஹனிடம் விடைபெற்று வீட்டுக்குள் நுழைந்தான். அவனுடைய தந்தை "ஏண்டா, சங்கரா எங்கே போயிருந்தாய்?" என்றார். சங்கரன் திகைத்துப் போனான். அவன் மனம் ஆடிக் காற்றில் அலை படும் சருகு ஆயிற்று. நெற்றியில் அரும்பிய முத்துக்களைத் துடைத்தான். கண்கள் பதறின. இருதயம் துடிதுடித்து மிலிட்டரி லாரி போல வேகமாக ஓடிற்று.

"ஏன் தம்பி பதறுகிறாய்? என்ன விஷயம்?"

"அப்பா, தாங்கள் மன்னிப்பீர்களா? நான் பெரிய தவறு செய்துவிட்டேன்." என்று இதய விம்மலுடன் ஏங்கினான். அவன் கண்களில் முத்து முத்தாக நீர்த் துளிகள் உதிரவும் வேண்டுமா!

"தம்பி விஷயம் என்ன? ஏன் வீணாக அழுது துடிக்கிறாய்?" என்று பச்சாத்தாபத்துடன் கேட்டார்.

"அப்பா" என்றான். சங்கரனுக்கு அதற்குமேல் பேசமுடியவில்லை. தன் தந்தையின் பூப் போன்ற இளகிய மனம் பாராங்கல்லாக மாறும் என்பதை அறிவான். 'கடமையை மறந்துவிடலாமா!' என்று உட்குரல் கேட்டது. உண்மைக்கும் மனச் சாக்ஷிக்கும் உயர்வு கொடுக்க உயிரையும் கொடுக்கச் சித்தமானன்.

"அப்பா மோஹினியை மோஹனுக்குத் தருவதாக வாக்களித்துவிட்டேன்" என்று சொன்னான், அக்காட்சி போரஸ், மகா வீரன் அலெக்ஸ்ஸாந்தர் முன்னால் பேசிய சரித்திரக் காட்சி போல் இருந்தது.

"எந்த மோஹன்?" என்று சாவகாசமாகக் கேட்டார்.

"அவன்தான், நம்முடைய குடும்ப விரோதி விவகாரம்பிள்ளையின் மகன். வி. மோஹன்" இதைச் சொல்லுமுன் தடாலென்ற சப்தம் கேட்டது. சங்கரன் ஒருதரம் கண் விழித்துப் பார்த்தான். மறுமுறை கூர்மையாகப் பார்த்தான். மூன்றும் முறையாகப் பார்த்த போது தன் தந்தை வெட்டுண்ட வாழையென விழுந்துகிடப்பதைக் கண்டான்.

இச்சந்தடி கேட்டு தாயார் ஓடி வந்தாள். தன் புருஷன் தரையில் மூர்ச்சையாக விழுந்து கிடப்பதையும், பையன் அடியற்ற மரம் போல் அசைவற்று நிற்பதைக் கண்டதும், "என்னடாப்பா, சங்கரா. என்ன சங்கதி?" என்று வினவினாள்.

சங்கரன், "அம்மா, மோகனுக்கு நம்முடைய மோஹினியைத் தருவதாக வாக்களித்துவிட்

டேன்'' என்று சொல்லி முடிப்பதும், அந்த அம்மாள் அடிபட்ட மயில் போல் மூர்ச்சையாகி விழுவதும் ஒன்ருக இருந்தது.

தாயும் தந்தையும் மூர்ச்சையடையும் படியான இந்தக்காரியத்தை சங்கரன் செய்யலாமா? இது தர்மமா? நியாயமா? ஆம் ராமன் செய்யவில்லையோ? ராமன் கானகம் சென்ற மன உத்சாகத்தைவிட, அதிகப்படியான உத்சாகத்துடன் கடமையை நிறைவேற்ற, டெலிபோன் பக்கம் சென்ருன்.

மூர்ச்சைப் படலம்

டெலிபோன் மணி கண கணவென அடித்தது. டாக்டருக்கு கோபம் பொத்துக்கொண்டு வரவே "யாரது?" என்று சள்ளென விழுந்தார். அவருக்கு நல்ல மண்டையிடி. ஆகவே கோபப்பட்டதில் ஆச்சர்யம் இல்லை. சங்கரன், தெளிவான குரலில் தன் வீட்டிற்கு உடனே வரும்படி கேட்டுக் கொண்டான்.

"விஷயம் என்னவோ?"

"அப்பாவும் அம்மாவும் மூர்ச்சையாகி இருக்கிருர்கள்."

"ஏன்! இருவருக்கும் சண்டை சச்சரவு ஏதாவது?"

"இல்லை, நான்தான் காரணம்."

"பரிக்ஷையில் பாஸ் செய்து விட்டாயோ?"

"சீக்கிரம் காரில் வாருங்கள்"

"வியாதியின் தன்மை தெரிந்தால் மருந்து கொண்டு வரலாம்."

"அதாவது மோஹன் — இவன் எங்கள் குலவிரோதியின் மகன். இவனுக்கு மோஹினியைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்து விட்டேன். இதைச் சொல்லவே அப்பாவும் அம்மாவும் மூர்ச்சையாகி விட்டார்கள். டாக்டர், சீக்கிரம் வாருங்கள்." என்று சொல்லி ரிசீவரைக் கீழே வைத்தான்.

சங்கரன், மனம் நிம்மதியாக இருந்தது. அப்போது அவன் அறைக்குள் தந்தை வருவதைக் கண்டான்.

"டேய் பழிகாரா. நம்முடைய குடும்ப விரோதத்தை மறந்து இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்.

சங்கரன் பயப்படவில்லை. "அப்பா தாங்கள் சிந்தனை செய்யுங்கள். உலகத்தில் விரோதம், போட்டி, பொருமை இருந்தால் சுபிட்சம் நிலவுமா? நம்முடைய வீட்டில் மோஹினி இருப்பதால் யாருக்கு என்ன லாபம்?......" என்று முடிக்குமுன்பே, "டேய் லாபமோ, நஷ்டமோ என் மனோரதத்திற்கு நீ முட்டுக்கட்டை போடாதே. என் மனப் போக்கிற்கு குறுக்கே நில்லாதே. மோஹனுக்கு-நம்முடையகுடும்ப விரோதியின் குலக் கொழுந்திற்கா இருந்திருந்து மோஹினியைக் கொடுப்பேன்?..." என்று கண்கள் சிவக்க, கோபம் ஜொலிக்கச் சொன்னர்.

சங்கரன், தான் வாக்களித்து விட்டதை நினைப்பூட்டினன்.

மூர்ச்சை தெளிந்த தாயார் மெல்ல மெல்ல அந்த அறைக்குள் வந்தாள். புருஷன் கடிந்து சொல்வதையும் பிள்ளை நிமிர்ந்து நிற்பதையும் கண்டு தாயுள்ளத்

திற்கும் சதியுள்ளத்திற்குமாக மாறி மாறி துடித்துக் கொண்டிருந்தாள்.

"நீ மோஹினியைக் கொடு. பிறகு இந்த வீட்டில் உனக்கு செல்லாத தம்பிடி கூடச் சொந்தமில்லை. எல்லாம் ஆற்றங்கரைப் பிள்ளையாருக்குத்தான். ஜாக்கிரதை" என்றார்.

இப்படி எதிர்பாராமல் ஆற்றங் கரைப் பிள்ளையார் தன் வாழ்வுக்குக் குறுக்கே வந்து விடவே, சங்கரன் அப்படியே பேச்சு மூச்சின்றிப் பிரக்ஞை இழந்தான்.

தாயார் 'ஐயோ மகனே' என்றலறினாள். தகப்பனார் டெலிபோன் பக்கம் ஓடி டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டிருந்த சமயம், காலடி ஓசை கேட்டது. அங்கே டாக்டர் வந்து கொண்டிருந்தார். தம் சொந்தக் காதால், "பையன் சங்கரன் மூர்ச்சையாகி விட்டான் உடனே வரவும்" என்று கூப்பிடுகிறதைக் கண்டு டாக்டருக்கு ஒன்றும் புலப்படவில்லை. தாயும் தகப்பனேயும் மூர்ச்சை தெளிவிக்கக் கூப்பிட்ட சங்கரன் மூர்ச்சையாகக் கிடந்தது விந்தையாக இருக்கவே, அவர் ஆச்சர்ய வேதனை தாங்க முடியாமல் மூர்ச்சை யுற்றார்.!

இருளும் பொருளும்

நாட்கள் கழிந்தன; வருஷங்கள் ஆகவில்லை. 24ல் ஒரு பங்கு வருஷம் மட்டுமே கழிந்தது. அதாவது பதினைந்து நாட்கள் சென்றன. பௌர்ணமி வந்த நேரே பதினைந்தாம் நாள் அமாவாசை தினம். எங்கும் கரிய இருட்டு. கிள்ளி விட்டுக் கிட்டே நின்றாலும் தெரியாத கன்னங் கரிய இருள்.

சங்கரன் தோட்டத்தில் நின்று எட்டி எட்டிப் பார்த்தான். ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மோஹன் இறங்கினான். அவன் மனம் இன்ப வெள்ளத்தில் மூங்கி மூழ்கி ஆழ்ந்து அமிழ்ந்து கரை காணாது தத்தளித்துக் கொண்டிருந்தது. மோஹினிக்காக ஏங்கி அங்கு வந்திருக்கிறான். வாகை மரம் அசைந்தது; வாழையும், பக்கத்து மருத மரமும் அசைந்தது. மெதுவாக வேப்பமரம் அசைவுற்றது. மெல்லெனக்காற்று வீசி மோஹனின் மனதை இன்ப லோகத்துக்கு இழுத்துச்சென்றது.

இருட்டிலே, காலடிச் சப்தம் கேட்டது. வந்தது யாரென மோஹனுக்குத் தெரியவில்லை. காலடி யோசை அவன் இதயத் துடிப்புக்குத் தாளம் போடுவது போல இருந்தது,

'மோஹன்' என்று குரல் கொடுத்தான் சங்கரன்.

'மோஹினி எங்கே?' எனக் கேட்டான் தயக்கத்தோடு மோஹன்.

"உஷ், சப்தம் போடாதே." என்று எச்சரிக்கை செய்து விட்டு, தோட்டத்துள் போய் விட்டான்.

ஒரு நிமிஷம் ஒரு யுகமாகக் கழிந்தது. ஐந்து யுகம் நிமிஷங்கள் சென்றன. சங்கரன் தழுதழுத்த குரலில் "உனக்கு கால் கட்டாக இருக்கும்." என்றான்.

மோஹினியோடு, வண்டிக்குள் மோஹன் ஏறினான். "அப்பா, நீ தியாகி, நம் குல விரோதத்தை மறந்து எனக்கு மோஹினியைக்

கொடுத்தாய்; மோஹினி கிடைத்தது பெரும் பாக்யம். உன் தன்னலமற்ற காரியத்தை .... மறவேன்-'' என்ருன்.

சங்கரன் "மோஹினியை!'' என்ருன்.

"மறக்கத்தான் முடியுமா?'' என்று சொல்லும் போதே வண்டி நகர்ந்தது.

சங்கரன் பெரு மூச்சு விட்டபடியே, தோட்டத்தின் வழியாக வீட்டுக்குள் நடந்தான். மோஹினியைப் பிரிந்த துயரம் ஒரு பக்கம்; ஆனலும் தன் தியாக உணர்ச்சியை வியந்த படியே வீட்டுக்குள் நடந்தான்.

வண்டி இருளைப் பிளந்து போய்க் கொண்டிருந்தது.

மோஹினி யார்?

விண்ணில் கார் ஓடிற்று; தழைத்த மரங்களின் புன்னகையையும், பூ நகையையும் முத்தமிட்டு வந்தது வஸந்த காலத் தென்றல். அறையில், மோஹன் நுழைந்தான். திடீரென 'கால் கட்டாக இருக்கும்' என்ற சங்கரன் வார்த்தைகள் நினைவிற்கு வரவே, சிரித்தான்.

மோஹினியின் பார்வை கெஞ்சுதலாக இருக்கவே, எடுத்து மார்போடு தழுவிக் கொண்டான்.

மோஹினி கீழே குதித்துத் தன் வாலை யாட்டிற்று.!

கலையும் உருவமும்

ஸ்ரீமதி சாஸ்திரி

உலக சிருஷ்டியில் எதற்கும் ஒரு உருவம் இருக்கிறது. கலைகளும் இயற்கையை ஒட்டியே உண்டானதாகையால் கலைகளுக்கும் அதற்குத் தகுந்த ஒரு உருவம் இருக்கத்தான் செய்கிறது.

சித்திரத்தில் உருவ அமைப்பை நாம் பார்த்தவுடன் தெரிந்து கொள்கிறோம். ஏனென்றால், நாம் இயற்கையைப் பார்த்துப் பழகியிருப்பதால் அதிலுள்ள நுட்பங்களை உடனே தெரிந்து கொள்ளுகிறோம். ஒரு தென்னை மரத்தையோ அல்லது மலை, ஆறு, குளம், பட்சி, முதலியவைகளையோ உருவ அமைப்பால் உடனே தெரிந்து கொள்ளுகிறோம். இப்படி எதற்கும் ஒரு உருவம் நம் மனத்தில் பதிந்து கிடக்கிறது. இதனால் ஓவியக் கலையை எளிதில் உணரவும் படிக்கவும் ரசிக்கவும் முடிகிறது.

சிற்பத்தில் இதை ரசிக்க கொஞ்சம் சரித்திர ஞானமும், பழக்கமும் வேண்டும். ஏனென்றால் உருவத்தோடு ஒரு நோக்கமுமிருக்கிறது. முகபாவம், உடல் நிலை, இவைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அதைப் பூரணமாக ரசிக்க முடியும். சிற்பக் கலைக்குத் தமிழகம் பேர் போனதாக இருந்தும் இவைகளை தற்காலம் யாருமே சிரத்தை எடுத்து ஆராய்ந்து வளர்ப்பதில்லை. அதனால் இந்தக் கலையையும் அதன் பூர்ண உருவத்தையும் தெரிந்து கொள்ளும் இயல்பு தற்காலம் குறைந்து விட்டதென்றே சொல்ல வேண்டும்.

இலக்கியம், இதன் உருவத்தை நாம் முதலில் மனதிற்குள்ளேயே கட்டுகிறோம். பிறகுதான் அது வெளிப்படுகிறது. ஒரு கவியோ, கதையோ, கட்டுரையோ எதுவானாலும் மனதிலே ஒரு உருவம் அமைத்துக் கொண்ட பிறகுதான் அது வெளிவருகிறது. இது மேலே சொன்ன கலைகளை விட சிரமமானது. கண்ணினால் பிசகுகளை அறியமுடியாதது உள்ளத்திலேயே உருவாய் வெளிவருகிறது. அதனால் சரியான அளவுகள் கொடுப்பது சிரமம். பலர் நல்ல எழுத்தாளர்கள். ஆனால் எடுத்த விஷயத்துக்குத் தகுந்த உருவம் கொடுக்கிறதில்லை. பெரியார் ஒருவருடைய கட்டுரையில், "இலக்கண விதிகளைக் கவனித்து எழுதினால் நல்ல அளவுகள் கிடைக்கும்" என்று எழுதி இருந்தார்கள். விஷயத்திற்கு ஏற்ற உருவமும் அளவும் கொடாததினால் தான் பல கதைகளும் கட்டுரைகளும், நாம் ரசிக்க முடியாமல் போகிறது. என்ன சொல்வதென்று கூட தெரியாமல் போகிறது. உருவ அமைப்பு தாறுமாறாக கண்ணால் காண முடியாவிட்டாலும், ஏதோ தவறிருப்பதாக மட்டும் மனப் பழக்கத்தால் அறிகிறது. கதை கட்டுரை எழுதுகிறவர்கள் இந்த உருவ அமைப்பை நன்றாக கவனித்து விஷயங்களுக்குத் தகுந்த ரூபமும், அளவுகளும், கொடுத்தால் எதுவும் நன்றாகவே அமையும்.

சங்கீதம் என்ன என்று கவனிப்போம். வெறும் இலக்கியம் எழுதி திருத்துவதிலேயே, உருவம் கண்டு

பிடிப்பது சிரமமாயிருக்கிறது என்ருல் அரைக்கணம் காதில் விழுந்து மறைந்து போகும் இசையில் தவறுகளுக்கு கணக்கே கிடையாது. இதைக்காதிலே கேட்டுக்கேட்டுத்தான் சுர பேதங்களைத் தெரிந்து கொள்ளுகிருேம்.

ஒரு இழை குறைந்தாலும் கூடினலும் நமக்கு விரசமாயிருக்கிறது. சங்கீதக்கலை ஆச்சரியமும் நுட்பமும் கொண்டது. உணர்ச்சிகளைக் குரலிலேயே காட்டி விடுகிறது. ஒருவர் கண்ணுக்குத் தெரியாத இடத்திலிருந்து கத்துகிருர், அல்லது அழுகிருர். அந்த சப்தத்தைக் கொண்டு இன்ன பாவம்; ஆணு பெண்ணு, குழந்தையா, என்று சொல்லிவிடலாம். இப்படிப்பட்ட அருமையான சப்த சேர்க்கைகளை வைத்து சங்கீதக் கலையை உண்டாக்கியிருக்கிருர்கள் பெரியோர். பாடுகிறவர்களுடைய உள்ளத்திலும், கேட்பவர்களுடைய உள்ளத்திலும் ஒரேவிதமான உணர்ச்சியை எழுப்புவது தான் சங்கீதத்தின் தத்துவம். சங்கீதத்திற்கு பாவம் (பாஷை மூலம் தான் வரும்) அதற்கேற்ற ராகம், நடை, தாளம், இவைகள் அளவுகளுடன் அமைந்திருந்தால் அப்படிப்பட்ட பாட்டை யார் பாடினலும் ரசிக்க முடியும். கச்சேரிகளிலும், ராகவிஸ்தாரங்கள் பல்லவி, கீர்த்தனைகள் இவைகளைப் பாடுவதும், பொறுக்கி எடுப்பதும் அதற்கு ஏற்பட்ட அளவோடு நிறுத்திக் கொண்டால் நாம் எவ்வளவோ சுலபமாக அனுபவிக்கலாம்.

எதிலும் போல கலைகளையும் மூன்று பிரிவுகளாக்கலாம்! சித்திரக் கலையில், ஒரு முறை, அப்படியே தத்ரூபமாக இயற்றுவது. இன்னெரு முறை (கார்டூன்) அளவுகள் சரியாயிருக்காது. ஆனல் பாவம் ததும்பி நிற்கும். இவைகளைத்தவிர இரண்டும் சேர்ந்து நிற்பது தான் கலைத்திறம். அதைத் தான் நாம் ஓவியங்களாக மதிக்கிருேம்.

இலக்கியத்திலும் அப்படியே, விஷயங்கள் தான் முக்கியம். வெறும்வார்த்தைகளைக்கோத்தோ பொருத்த மற்ற வர்ணனைகளைப் புகுத்தியோ எழுதும் கதைகள் கட்டுரைகள் நமக்கு ரசிப்பது இல்லை. அதை இலக்கியமாகவும் கொள்ள முடியாது. விஷயம், பாவம், உண்மைக்கேற்றவர்ணனை விஷயத்திற்கேற்ற கம்பீரமான நடை, இவைகளெல்லாம் அளவுடன் வருவதைத்தான் நாம் மதித்து கவியாகவும் காவியமாகவும், போற்றுகிருேம்.

சங்கீதக் கலையில் இது இன்னும் அவசியம். இப்பொழுது பலரும் பாடுகிருர்கள். அனேகர் சுருதி தாளம் போகாமல் பாடினலும் ஏதோ குறை இருப்பதாகத் தோன்றுகிறது. காரணம் பாடுபவர் உள்ளத்தில் உருவமோ பாவமோ, உணர்ச்சியோ இல்லாதது தான். பாடுவதின் நோக்கம், தானே அனுபவிக்கும் திறம், இவைகள் பாடுகிறவர்கள் உள்ளத்தில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பாட்டுகள் உயிருடனும் ஒளியுடனும் வரும். இலக்கணப்பிழைகளிருந்தாலும் அதைப் பொருட்படுத்தத் தோன்ருது. எந்தக் கலையைப் படித்தாலும் அதற்கு ஏற்ற ரூபம், அளவு, உணர்ச்சி, பாவம்முதலியவைகளை முதலில் கவனித்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

"செய்வினைதிருந்தச் செய்" என்பதை ஏட்டிலல்லாமல் வழக்கத்திலும் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொள்வது நமது கடமை.

பொழுது போக்கு

"திருலோகன்"

அருமை நண்பனுக்கு,

இன்று காலை என்னிடம் நீ விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட பிறகு, மாலையிலேயே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். அனேகமாக நீ ஊர் போய்ச் சேர்ந்ததும் இந்தக் கடிதம் உன் பின்னலேயே வந்து நிற்கும்.

இந்த ஒரு வாரமும் நீ என்னுடன் இங்கு தங்கியிருந்த போது பொழுது போனதே தெரியாமல் கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தோம். நீ புறப்பட்டுப் போன பிறகு எண்ணி எண்ணிப் பார்த்தேன். எங்கேயோ ஒரு கண் காணாத மாய உலகத்தில் சுற்றிக் களைத்து விட்டு திடீரென்று பூலோகத்தில் குதித்தது போன்ற உணர்ச்சி தான் என் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறது.

ஊருக்கு வடக்கே யுள்ள ஏரியில் தண்ணீர் இல்லாத காலம் இது. அடிப்பரப்பில் குப்பென்று நிறைந்திருந்த பசும் புல் வெளி, ஏரியின் தளத்திற்கு அளவெடுத்து தைத்துப் போட்ட மரகதப் பாய் போல ஜிலு ஜிலுத்துக் கொண்டிருந்தது. அந்தப் புல் திட்டுகளின் மீது சாய்ந்து ஒவ்வொரு நாளும் மாலையிலே விண்ணில் எத்தனை விந்தைகளைக் கண்டோம். அந்தி வானின் வர்ண ஜாலங்களைக் கவிதைத் தூரிகையிலே தோய்த்தெடுத்து உள்ளத் திரையிலே நீ தீட்டி விட்ட எழில் ஓவியங்கள்... ......அடடா! என்னவென்று வர்ணிப்பேன்!

இதற்கு முன்பும் இதே காட்சிகளை நான் தினமும் கண்டிருக்கிறேன். ஆனால் வானப் பரப்பின் வர்ண விஸ்தாரங்களும் அந்தி வானத்துச் சொக்கழகும் என் உள்ளத்தைத் தொட்டதில்லை.

கொல்லி மலையும் பச்சை மலையும் இன்று எனக்கு உயிருள்ள மோனக் கவிதைகளாகக் காட்சியளிக்கின்றன.

கலையை அனுபவிக்கக் கலையுள்ளம் வேண்டும் என்று சொன்னாய். வாஸ்தவம் தான். கண்ணெதிரே சிந்திக் கிடக்கும் எழிலை அனுபவிக்கத் தெரியாமல் என் வாழ்க்கையில் எத்தனை வருடங்கள் வீணாகிவிட்டன வென்பதை நீ எடுத்துக் காட்டிய போது தான், உண்மையிலே என் உள்ளத்திலே, உறங்கிக் கொண்டிருந்த 'ரஸிகன்' கண் விழித்துக் கொண்டான். நாளெல்லாம் பொருளுக் கலையும் நேரம் போக மற்ற வேளைகளிலே பொழுதுபோக்க வழி தெரியாமல் வரண்ட உள்ளத்திலே, உறங்கிக் கிடந்த கலையுணர்ச்சியைத் தொட்டு எழுப்பிவிட உன்னைப் போன்ற கலைஞனுடைய தூண்டுகோல் தேவையாக இருந்திருக்கிறது.

ஆம்! ரஸிகனுடைய இதயப் பூங்காவிலே அரும்பும் எழில் மொட்டுக்கள் கலைஞனுடைய சக்தித் தென்றல் பட்டுத்தான் மலர வேண்டும்.

கலையைப் பற்றி நாம் எவ்வளவோ யோசிக் கொண்டிருந்தோம். 'ஆடம்பர வாழ்க்கை தானே கலையின் பிறப்பிடம்' என்று நான் கேட்டதற்கு நீ கூறிய பதில் இன்

னும் என் செவிகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'வாழ்க்கை ஆடம்பரமாக இருந்தால் மட்டும் கலையை அனுப வித்துவிட முடியாது. எழ்மை யான வாழ்விலே கலையுணர்ச்சியே கிடையாதென்பதும் சரியல்ல. கலாரஸனேக்கு உள்ளப் பண்பாடு தான் தேவை. நல்ல கலாரஸனே எந்த சமூகத்தில் செழித்து வளரு கிறதோ அந்த சமூகத்தில் வாழ் வின் புற அந்தஸ்துக்களின் ஏற்றத் தாழ்வுகள் மறைந்து விடுமென் றும், அங்கு மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ முடியும் என்றும் நீ சொன்னது எனக்கு உடனே அர்த்தமாகவில்லை. பின்பு நீ விளக்கிச் சொன்னுய்.

"சாந்திமயமான அருணேதய வேளையிலே இயற்கைத் தேவி கண் மலரும் போது, கலப்பையை தோளில் சுமந்து, எருதுகளை புலத் திற்கு ஓட்டிச் செல்லும் உழவன் பூமியைப் பார்த்துக் கொண்டு நடக்கிருன். அன்று முடிக்க வேண்டிய வேலையில் தான் அவன் கவனம். சுற்றிலும், காலைக் கதி ரொளியில், தவழும் தென்றலில் இயற்கை தோகை விரித்தாடுவதை அவன் ரஸிக்கவா போகிருன்? அவனுடைய வாழ்வின் சுமை யைச் சமாளிக்கத் திட்டமிட்டு நாளெல்லாம் அவன் உழைக்கத் தான் நேரமிருக்கிறது. இல்லை. அவனுக்கு நேரம் போதவில்லை.

"புற அந்தஸ்துக்களிலே உயர்ந்து உல்லாச வாழ்விலே ஈடுபட்டுள்ள வர்களுக்குப் பொழுது போக மாட்டேன் என்கிறது. உண்மை யிலேயே, ஒரே கதியில் தளராமல் ஓடிக் கொண்டிருக்கும், காலம் ஒருவனுக்குத் தேங்கி நிற்பது போலவும், மற்றவனுக்கு அது போகிற வேகத்தில் ஓடுவது போ லவும் தோன்றுவது விசித்திர மாகத் தோன்ற வில்லையா? இதற் குக் காரணம் இருக்கிறது.

"வாழ்வின் லட்சியமே இன்பத் தின் எல்லையைக் காண்பது தான். அதற்காகத்தான் உயிர்த் தோணி ஏறி மனிதன் கலைக் கடலிலே உல் லாச யாத்திரை செய்யப் பிறந் திருக்கிருன்.

"உயிர்த் தோணி பழுதில்லாமல் ஓடுவதற்கு உணவும், உடையும் மற்ற வசதிகளும், வாழ்க்கை யாத்திரையின், பிரயாண முஸ்தீப் புகள்; அதைத் தயார் செய்து கொள்ள மனிதன் உழைக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் வஞ்சனையின்றி உழைத்தால், யாத்திரைக்கு வேண் டிய நேரம் வாழ்விலே கிடைக்கும். இன்பக் கரையை எட்டி விடலாம்.

"பொழுது போக்கு என்பது தான் உண்மையிலே வாழ்வை அனுபவிப்பது. அதை அனுப விக்கத் திறமை தருவதுதான் கலை. கலையுணர்ச்சி ஏற்பட்டால் தான் பொழுது போக்க முடியும். அதா வது, வாழ்வின் நேரத்தை இன் பம் காண்பதில் செலவிட முடியும். மனிதன் ஒவ்வொருவனும் இப் படிப் பொழுது போக்க வேண் டும். பொழுது போக்க ஒவ்வொ ருவனுக்கும் வசதி தரவேண்டும். அதுவே நோக்கம்.''

என் உள்ளத்திலே நீ ஊறச் செய் திருக்கும் உணர்ச்சிகளைப் பற்றி எவ்வளவோ எழுதவேண்டியிருக் கிறது. அது என்னைப் போன்ற எத்தனையோ பேருக்கு உபயோக மாக இருக்கலாம். இருக்கட்டும், கனவு போன்ற அந்த இனிய நினைவுகளை, சாவகாசமாகப் பிறகு சொல்ல முயல்கிறேன்.

இப்படிக்கு
அன்புள்ள
திருலோகன்

6. கடலாடு காதை

(1—110)

இந்தக் காதை புகார் நகரத்திலுள்ள மக்கள், இந்திர விழா முடிவில், கடலுக்குச் சென்று, நீராடுவதைக் கூறுவது.

(1—34) இமயமலையின் வடபக்கம், தேன் மலர்ச் சோலைகள் நிறைந்த சேடி என்னும் பெயருடைய ஒரு இடம் உண்டு. அது தேவ குலத்தைச் சேர்ந்த வித்தியாதரர் வசிக்கு மிடம். இவ்விடத்திலுள்ள ஒரு வித்தியாதரன், தன் மனைவியுடன் காமக் கடவுளுக்கு விழாக் கொண்டாடும் போது, புகார் நகரத்தில் இந்திர விழா நடக்குங் காலம் அதுவே, என்று அவன் நினைவுக்கு வந்தது. புகார் நகாத்தின் சிறப்பு, அக்காலத்தில் அவ்வளவு தூரம் பரவி யிருந்தது. தேவமக்களும் கண்டு களிப்படையக் கூடிய இந்திர விழாவைக் காண விரும்பியவனாய், அவன் தன் மனைவியைப் பார்த்துச் சொல்லுகிறான்: "தெற்கே, தமிழ் நாட்டில், காவிரிப்பூம் பட்டினத்தில், சித்திரை மாதத்தில் இந்திரனுக்குத் திருவிழா நடைபெறும். அதைப் போய் நாம் பார்ப்போம். அந் நகரில், அருமையான காட்சிகளுமுண்டு. சோழ மன்னனின் மூதாதையாகிய முசுகுந்தன் என்பவன், ஒரு காலத்தில், இந்திரனுக்குச் செய்த உதவியால், முசுகுந்தனுக்கு மெய்க் காவலாக, ஒரு பூதத்தை இந்திரன் அவனுக்குக் கொடுத்தான். அப்பூதம் இன்றைக்கும் புகார் நகரத்தைக் காவல் செய்கின்றது. அதை நாம் காணலாம். இதல்லாமல், அந்நகரத்தில் அதிசயமான ஐந்து மன்றங்கள் உள்ளன. அந்த ஐவகை மன்றத்தின் சிறப்பையும் நாம் காண்போம். இன்பத்தைத் தரும் வேறு காட்சிகளையும் கண்டு விட்டு, அங்கே இந்திரனை நாமும் வழிபடுவோம்."

இவ்விதமாகத் தன் மனைவிக்குச் சொல்லி, அவளுடன் இமயமலையிலிருந்து, தென் திசையை நோக்கி, வித்தியாதரன் புறப்பட்டான். இமயமலையைக் கடந்து, வழியிலுள்ள காட்சிகளைத் தன் மனைவிக்குக்

காண்பித்துக் கொண்டே பிரயாணஞ் செய்தான். செழுநீர்க் கங்கை பாயும் நாடுகளையும், உச்சயினி நகரத்தையும், விந்திய மலையின் அருகிலுள்ள பெரிய காடுகளையும், திருவேங்கட மலையையும் கடந்து, காவிரி பாயும் சோழ நாட்டை யடைந்து, கடைசியாகப் பூஞ்சோலைகள் நிறைந்த காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்து சேர்ந்தனர். சேர்ந்து, நகரில் நடைபெறும் விழாவைக் கண்டு மகிழ்ந்து, இருவரும் அவ்வூரிலுள்ள கோவில்களில் வழிபாடு செய்தார்கள்.

இந்திர விழாக் காண வித்தியாதரனும் மனைவியும்

வெள்ளி மால்வரை வியன் பெருஞ் சேடிக்
கள் அவிழ் பூம் பொழில் காமக் கடவுட்குக்,
கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னொடு
விருந்தாட்டு அயரும் ஓர் விஞ்சை வீரன்
"தென்திசை மருங்கின் ஓர் செழும்பதி தன்னுள்
இந்திர விழவு கொண்டு எடுக்கும் நாள் இது வெனக்
கடுவிசை அவுணர் கணங்கொண்டு ஈண்டிக்
கொடுவரி ஊக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழல் மன்னற்குத் தொலைந்தன ராகி,
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்,
திருந்துவேல் அண்ணற்குத் தேவன் ஏவ,
விருந்து பலி உண்ணும் இடனும் காண்கும்
அமராபதி காத்து அமரனின் பெற்றுத்
தமரின் தந்து, தகைசால் சிறப்பின்
பொய்வகை இன்றிப் பூமியின் புணர்த்த
ஐவகை மன்றத்து அமைதியும் காண்குதும்;
நாரதன் வீணை நயம் தெரி பாடலும்,
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்காளாகி,
'மங்கலம் இழப்ப வீணை, மண் மிசைத்
தங்குக இவள்' எனச் சாபம் பெற்ற,
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய,
அங்கு அரவு அல்குல் ஆடலும் காண்குதும்;
துவர் இதழ்ச் செவ்வாய்த் துடியிடையோயே!
அமரர் தலைவனை வணங்குதும் யாம்" எனச்
சிமையத்து இமையமும், செழுநீர்க் கங்கையும்,
உஞ்சையம் பதியும், விஞ்சத்து அடவியும்,
வேங்கட மலையும், தாங்கா விளையுள்
காவிரி நாடும் காட்டிப் பின்னர்ப்,
பூவிரி படப்பைப் புகார் மருங்கு எய்திச்,
சொல்லிய முறைமையின் தொழுதனன் காட்டி,
மல்லல் மூதூர் மகிழ் விழாக் காண்போன்;

பதவுரை

[வெள்ளி மால்வரை — வெள்ளி போன்ற உயர்ந்த இமயமலையில்; வியன் பெருஞ் சேடி — அகன்ற பெருஞ் சேடி என்னுமிடத்தில்;

கள் அவிழ் பூம் பொழில் — தேன் ஊறுகின்ற பூக்கள் நிறைந்த சோலையில்; காமக் கடவுட்கு — காம தேவனுக்கு; கரும் கயல் நெடுங்கண் — கரிய கயல் மீன் போன்ற நீண்ட கண்ணையுடைய; காதலி தன்னொடு — தன் காதலியுடன் இருந்து; விருந் தாட்டு அயரும் — புதிதாகச் செய்யும் விழாவைக் கொண்டாடுகின்ற; ஓர் விஞ்சை வீரன் — ஒரு வித்தியாதரன்; தென் திசை மருங்கின் — தெற்குத் திசையில்; ஓர் செழும்பதி தன்னுள் — ஒரு செழிப்பான நகரத்தில்; இந்திர விழவு கொண்டு எடுக்கும் நாள் — இந்திர விழாவினைக் கொண்டாடும் நாள்; இது என — இது தான் என்று;

கடுவிசை அவுணர் கணம் கொண்டு இண்டி — மிக விரைந்து செல்லும் அரக்கர்கள் கூட்டமாகத் திரண்டு: கொடு வரி ஊக்கத்து — புலி போலும் ஊக்கத்துடன்; கோ நகர் காத்த — இந்திரனுடைய நகரைக் காவல் செய்த; தொடு கழல் மன்னற்கு — கட்டிய வீரக் கழல் அணிந்த முசுகுந்த மன்னனுக்கு; தொலைந்தனர் ஆகி — முன்னர்த் தோற்று ஓடிப் போய்; (பிறகு, அவனுடைய) நெஞ்சு இருள் கூற — உள்ளமும் அறிவும் இருண்டு போகுமாறு; நிகர்த்து மேல் விட்ட — தாங்கள் அனைவரும் ஒத்து அவன் மேல் விடுத்த; வஞ்சம் — மாயமான அம்பை; பெயர்த்த — தன் மந்திரத்தைக் கூறித் தடுத்த; மாபெரும் பூதம் — மிகப் பெரிய பூதம்; திருந்து வேல் அண்ணற்கு — அழகிய வேலையுடைய முசுகுந்தனுக்குப் பணி செய்யும்படி; தேவ்ன் ஏவ — இந்திரன் ஏவுதலால், வந்து; விருந்து பலி உண்ணும் — புகார் நகரில் புதிய பலிகளை உண்ணுகின்ற; இடனும் காண்கும் — நாளங்காடி யிடத்தையும் காண்போம்.

அமராபதி காத்து — விண்ணுலகத்தைக் காவல் செய்து; அமரனின் பெற்று — தேவேந்திரனிடத்தில் பெற்று; தமரின் தந்து — தனக்குத் தன் குடியினரால் தரப்பட்டு; தகைசால் சிறப்பின் — அழகு மிக்க சிறப்பினையுடைய; பொய் வகை இன்றிப் பூமியின் புணர்த்த — பொய்க்கும்படி இல்லாமல், இவ்வுலகிலேயே நிலைபெறும்படி வைக்கப் பட்ட; ஐவகை மன்றத்து — ஐந்து வகைப்பட்ட மன்றங்களின்; அமைதியும் காண்குதும் — பெருமையையும் காண்போம்.

நாரதன் வீணை — நாரத முனிவனின் வீணையில் உண்டாகின்ற; நயம் தெரி பாடலும் — எழிசையும் வெளிப் படுகின்ற பாடலையும்; தோரிய மடந்தை — தோரிய மடந்தை என்னும் ஆடி முதிர்ந்த நாடகப் பெண் பாடுகின்ற; வாரம் பாடலும் — வாரம் என்னும் ஒரு வகைப் பாடலையும்; ஆயிரங் கண்ணோன் — இந்திரனின்; செவியகம் நிறைய — செவிகள் நிறையும் படி; நாடகம் உருப்பசி நல்காளாகி — நாடகமாடும் உருப்பசி என்னும் தேவ தாசி ஆடிப் பாடி மகிழ்ச்சி யூட்ட விரும்பாளாகி; வீணை மங்கலம் இழப்ப — அவள் வீணை மங்கலப்பொலிவை இழக்க; மண் மிசைத் தங்குக இவள் என — இவள் நிலவுலகிலே வீணையோடு சென்று தங்குவாளாக என்று; சாபம் பெற்ற — இந்திர சபையிலிருந்த அகத்தியனால் சபிக்கப்பட்டு, இச்சாபத்தால் இங்கு

வந்து பிறந்த; மங்கை மாதவி — மங்கையாகிய மாதவியின்; வழி முதல் — குடி வழியில்; தோன்றிய — ; அரவு அல்குல் ஆடலும்— பாம்பின் படம் போன்ற இடையை யுடைய மாதவியின் ஆடலையும்; அங்குக் காண்குதும் — அவ்விடத்தே காண்போம்; துவர் இதழ்ச் செவ்வாய்த் துடி இடையோயே — பவளம் போலச் சிவந்த உதட்டை யுடைய வாயினையும், உடுக்கைப் போன்ற இடுப்பினையும் உடைய வளே!; அமரர் தலைவனை வணங்குதும் யாம் என — இந்திரனை நாமும் வணங்குவோம் என்று; (தன் மனைவிக்குக் கூறி)

சிமயத்து இமயமும் — கொடுமுடிகளையுடைய இமயமலையையும்; செழுநீர்க் கங்கையும் — வளம் மிக்க நீரையுடைய கங்கை யாற்றை யும்; உஞ்சயம் பதியும் — அழகிய உச்சயினி நகரத்தையும்; விஞ்சத்து அடவியும் — விந்தியமலைக் காடுகளையும்; வேங்கட மலையும் — திரு வேங்கட மலையையும்; தாங்கா விளையுள் — அடங்காத விளைச்சலை யுடைய; காவிரி நாடும் — காவிரி பாயும் சோழ நாட்டையும்; காட்டி — அவளுக்குக் காட்டி; பின்னர் — ; பூவிரி படப்பை — பூக் கள் விரிந்த சோலைகளையுடைய; புகார் மருங்கு எய்தி — காவிரிப் பூம் பட்டினத்தின் பக்கத்தே வந்து; சொல்லிய முறைமையின் — புறப்படு முன் தன் மனைவிக்குச் சொல்லிய முறையிலே; தொழுதனன் காட்டி— மன்றம் முதலான எல்லா இடங்களையும் வணங்கி, அவற்றின் சிறப்புக் களையும் விளக்கிக் காட்டி; மல்லல் மூதூர் — வ்ளமிக்க பழைய ஊரா கிய அவ்விடத்தில்; மகிழ் விழாக் காண்போன் — களிப்புத் தரும் திரு விழாவைக் காணும் அவன்;

மால் — உயர்ச்சி. விருந்து — புதுமை. விஞ்சை வீரன் — வித்தி யாதரன், தேவர் குலத்தைச் சேர்ந்தவன். தகை — அழகு.

இந்திரன் நகரைக் காத்த முசுகுந்தனிடம் தோற்று ஓடிய அசுரர் கள் மீண்டும் வந்து ஒன்ருகத் திரண்டு, மாய அம்புகளை ஏவினர். அதனல், அவன் கண்ணும் மனமும் இருண்டு மயங்கி நின்ருன். இந்தி ரனுடைய பூதம் ஒன்று, ஒரு மந்திரத்தை அவனுக்குக் கற்பிக்க, அவன், அம்மயக்கந் தீர்ந்து தன் போர் வலியால் அசுரர்களை வென்ருன். துணை புரிந்த சிறப்புடைய அப் பூதத்தை இந்திரன் அவனுக்கே தந்து விட, அது அவனேடு வந்து புகாரில் தங்கிற்று. அது தங்கியது, நாளங் காடியில்.

★

(35—71) மாதவி, பேரும் புகழும் பெற்ற ஒரு நாட்டியப் பெண் இந்திர விழாவின் போது, ஊரார் எல்லாரும் கண்டு களிக்கும்படி மாதவி நடனமாடிக் கொண்டிருக்கிருள். முதலில், திருமாலையும் நான்கு வருணத்தாருக்கும் உள்ள பூதங்களையும், எல்லா உயிர்களுக் கும் நலங் கொடுக்கும் சிறப்பினையுடைய நிலாவையும் புகழ்ந்து பாடிப் பிறகு, தாளத்தின் இயல்புகள் நன்கு விளங்க, மாதவி பதினெரு வகைக் கூத்துகளையும் ஆடினள். அவள் ஆடிய பதினெருவகைக் கூத்துக் களாவன:—

1. கொடுகொட்டியாடல். 2. பாண்டரங்கக் கூத்து. 3. அல்லியத் தொகுதி. 4. மல்லாடல். 5. துடிக் கூத்து. 6. குடைக் கூத்து. 7. குடக் கூத்து. 8. பேடியாடல். 9. மரக்காலாடல். 10. பாவைக் கூத்து. 11. கடையம் என்பன. இந்தப் பதினொரு ஆடல்களையும் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான அணி, கொள்கை, நிலை, அபிநயம் இவைகளுடன் விதி முறைப்படி ஆடி, அவற்றிற்கு ஏற்ற இசைகளையும் பாடிய மாதவியை, வித்தியாதரன், தன் மனைவிக்குச் சுட்டிக் காட்டி, "இவள் தான், ஊர்வசியின் குலத்தில் தோன்றிய மாதவி என்னும் நாடகக் கணிகை." என்று சொல்லி, இருவரும் ஆடல் பாடல்களை அநுபவித்து மகிழ்ந்தார்கள்.

மாதவியின் ஆடலில் வித்தியாதரன் மகிழ்ச்சி

மாயோன் பாணியும், வருணப் பூதர்
நால்வகைப் பாணியும், நலம் பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப், பின்னர்ச்
சீர்இயல் பொலிய, நீர் அல நீங்கப்,
பாரதி ஆடிய பாரதி அரங்கத்துத்,
திரிபுரம் எரியத் தேவர் வேண்ட,
எரிமுகப் பேர் அம்பு ஏவல் கேட்ப,
உமையவள் ஒரு திறன் ஆக, ஓங்கிய
இமையவன் ஆடிய கொடு கொட்டி யாடலும்;
தேர் முன் நின்ற திசைமுகன் காணப்,
பாரதி யாடிய வியன் பாண்டரங்கமும்;
கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக,
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்,
அல்லியத் தொகுதியும்; அவுணன் கடந்த
மல்லின் ஆடலும்; மாக்கடல் நடுவின்,
நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன் நின்ற
சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்;
படை வீழ்த்து அவுணர் பையுள் எய்தக்
குடை வீழ்த்து அவர் முன் ஆடிய குடையும்;
வாணன் பேரூர் மறுகிடை நடந்து,
நீள் நிலம் அளந்தோன் ஆடிய குடமும்;
ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி யாடலும்;
காய்சின அவுணர் கடுந்தொழில் பொறா அள்,
மாயவன் ஆடிய மரக்கால் ஆடலும்;
செருவெம் கோலம் அவுணர் நீங்கத்,
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்;
வயல் உழை நின்று, வடக்கு வாயிலுள்
அயிராணி மடந்தை ஆடிய கடையமும்;
அவரவர் அணியுடன், அவரவர் கொள்கையின்
நிலையும், படிதமும் நீங்கா மரபின்,
பதினோ ராடலும், பாட்டின் பகுதியும்,

விதிமாண் கொள்கையின் விளங்கக் காணுய் ;
தாது அவிழ் பூம்பொழில் இருந்து. யான் கூறிய
மாதவி மரபின் மாதவி இவள் '' எனக்,
காதலிக்கு உரைத்துக், கண்டு மகிழ்வு எய்திய
மேதகு சிறப்பின் விஞ்சையன் அன்றியும் ;

பதவுரை

[மாயோன் பாணியும் — திருமாலைப் பாடுகின்ற தேவபாணியும்; வருணப் பூதர் — நால் வகை வருணங்களுக் குரிய நான்கு பூதங்களை யும் பாடுகின்ற; நால் வகைப் பாணியும் — நான்கு வகைத் தேவ பாணியும்; நலம் பெறு கொள்கை — பல உயிரும் தன்னால் நலம் பெறும் சிறப்பினையுடைய; வான் ஊர் மதியமும் — வானத்தில் ஊர்ந்து செல்லும் சந்திரனையும்; பின்னர்,

சீர் இயல் பொலிய — தாளத்தின் இயல்புகள் நன்கு சிறப்புற; நீர் அல நீங்க — தாள இயல்புக்கு மாறானவை நீங்க; திரிபுரம் எரியத் தேவர் வேண்ட — முப்புரங்களும் அழிய வேண்டித் தேவர்கள் கேட் டுக்கொள்ள; எரி முகப் பேர் அம்பு ஏவல் கேட்ப — தன் முகத்தி லிருந்து தீயைக் கக்குகின்ற பெரிய அம்பானது, "புரங்களை எரிப்பா யாக" என்ற வளவிலே, அங்ஙனமே அழித்து நிற்க; (அப்படி அழிக் கப் பட்ட சாம்பல் மேல்)பாரதி ஆடிய — பைரவி என்னும் தெய்வம் நின்று கூத்தாடிய; பாரதி அரங்கத்து — பாரதி என்பவள் ஆடிய தால், பாரதி அரங்கம் எனப் பெயர் பெற்ற உலகமாகிய சுடுகாட்டில்; உமையவள் ஒரு திறனுக — உமாதேவி ஒரு பகுதியில் நின்று துணை செய்ய; ஓங்கிய இமயவன் — தெய்வங்களுள் உயர்ந்த சிவபிரான்; ஆடிய — விரும்பி யாடிய; கொடு கொட்டியாடலும் — கொடு கொட்டி என்னும் ஆடலும்,

தேர் முன் நின்ற — தேரின் முன்பாகத் தேரைச் செலுத்தி; திசை முகன் காண — பிரமன் காணும்படி; பாரதி ஆடிய — ; வியன் பாண்ட ரங்கமும் — பெரிய பாண்டரங்கமும் என்ற ஆடலும்;

கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக — கஞ்சன் என்பவனுடைய வஞ்ச மான மாயச் செய்கையைக் கடந்து வெல்லுவதற்காக; அஞ்சன வண்ணன் — மைபோலும் கரிய நிறமுடைய திருமால் (கண்ணன்) ஆடிய ஆடலுள் — ஆடிய பத்துவகை ஆடலுள் ஒன்ருகிய; அல்லியத் தொகுதியும் — அல்லியத் தொகுதி என்னும் ஆடலும்;

அவுணன் கடந்த — திருமால், வாணன் என்னும் அசுரனை வென்ற மல்லின் ஆடலும் — மல்லாடுதல் என்னும் கூத்தும்;

மாக்கடல் நடுவண் — கரிய கடலின் நடுவில்; நீர்த்திரை அரங் கத்து — அலைநிரம்பிய கடலை மேடையாகக் கொண்டு நின்று; நிகர்த்து முன் நின்ற சூர்த்திறம் கடந்தோன் — தன்னை எதிர்த்துத் தனக்கு

முன்பாக நின்றவனாகிய சூரபன்மனின் வஞ்சத்தை வென்ற முருகன்; ஆடிய துடியும் — அப்பொழுது ஆடிய துடிக்கூத்தும்;

படை வீழ்த்து அவுணர்பையுள் எய்த — போரிலே தோற்றுப் படைக் கருவிகளைக் கீழே எறிந்து, அரக்கர்கள் துன்பப்பட்டபோது; குடை வீழ்த்து அவர் முன் ஆடிய குடையும் — அவர் முன்பாகத் தனது குடையைத் தாழ்த்தி, முருகன் ஆடிய குடைக்கூத்தும்;

வாணன் — வாணன் என்னும் அசுரனின்; பேர் ஊர் மறுகிடை கடந்து — பெரிய நகரத்தின் வீதியிற் சென்று; நீள்நிலம் அளந்தோன் — பெரிய இவ்வுலகத்தை அளந்தவனாகிய திருமால்; ஆடிய குடமும் — குடத்தைக் கையில் கொண்டு ஆடிய குடக்கூத்தும்;

ஆண்மை திரிந்த — ஆண்மைத் தன்மையினின்றும் மாறுபட்ட; பெண்மைக் கோலத்து — பெண்மை வேடத்தோடு; காமன் ஆடிய — காமன் கூத்தாடிய; பேடியாடலும் — பேடு என்னும் கூத்தும்;

காய்சின அவுணர் — கொதிக்கும் கோபத்தையுடைய அசுரர்களின்; கடும் தொழில் பொறு அள் — கொடுஞ்செயல்களைப் பொறுக்காதவளாகி; மாயவள் ஆடிய — துர்க்கை ஆடிய; மரக்கால் ஆடலும் — மரத்தால் ஆகிய காலைக் கொண்டு, அதனாலாடிய கூத்தும்;

அவுணர் செருவெம்கோலம் நீங்க — அசுரர்களின் கொடிய போர்க்கோலம் நீங்கும்படியாக; திருவின் செய்யோள் — திருமகளாகிய சிவந்த நிறமுடைய இலக்குமி; ஆடிய பாவையும் — கொல்லிப்பாவை வடிவாய் நின்று ஆடிய பாவைக் கூத்தும்;

வயல் உழை நின்று — வயலிடத்தில் நின்று; வடக்கு வாயிலுள் — முற்கூறிய வாணன் என்னும் அசுரனுடைய நகரத்தின் வடக்கு வாயிலில் நின்று; அயிராணி மடந்தை — இந்திராணியாகிய பெண்; ஆடிய கடயமும் — ஆடிய கடயம் என்னும் கூத்தும்;

அவரவர் அணியுடன் — அங்ஙனம் கூறப்பட்ட கூத்தாடியவர்களின் அணியுடனும்; அவரவர் கொள்கையின் — அவரவருடைய கோட்பாட்டுடனும் ஆடிய; நிலையும் — நின்ற நிலையில் ஆடலும்; படிதமும் — சாய்ந்த நிலையில் கிடந்து ஆடலும் ஆகிய முறைகள்; நீங்கா மரபின் — நீங்காத சிறப்பினையுடைய; பதினோராடலும் — பதினொரு வகைப்பட்ட ஆடல்களையும்; பாட்டின் பகுதியும் — அவ்வவ்வாடல்களுக்கேற்ற பாடல் வகைகளையும்; விதிமாண் கொள்கையின் — விதி முறைகள் மாட்சிமைப்படும் கொள்கையோடு; விளங்கக் காணாய் — நன்கு புலப்படும்படிப் பார்ப்பாயாக;

தாது அவிழ் பூம் பொழில் — மகரந்தப் பொடி சிந்துகின்ற பூக்கள் நிறைந்த சோலையில்; இருந்து யான் கூறிய — தங்கியிருந்து என்னால் உனக்குக் கூறப்பட்ட; மாதவி மரபின் — மாதவி என்னும் தேவ

தாசியின் குடிவழியில் வந்துதோன்றிய; மாதவி இவள் என — அம் மாதவி இவள் தான் என்று; காதலிக்கு உரைத்து — தன் காதலிக் குக் கூறி; கண்டு — அவற்றையெல்லாம் அவளோடு தானும் கண்டு; மகிழ்வு எய்திய — களிப்படைந்த; மேதகு சிறப்பின் — உயர்ந்த தகுதிகள் வாய்ந்த சிறப்பினையுடைய; விஞ்சையன் அன்றியும் — விஞ்சையனாகிய அத்தேவனை அல்லாமலும்;

பொன், வெள்ளி, இரும்பு என்ற மூவகைப் பொருளால் ஆன மூன்று கோட்டைகளில் தங்கி, அரக்கர்கள் தமக்குப் பகைவரான தேவர்களை அழித்து வந்தனர். தேவர்கள் சிவபிரானிடம் முறையிட அவர் தீயை ஏவி, அவர் கோட்டைகளை அழித்து, அழித்த சாம்பல் மீது தாம் நின்று தாண்டவ மாடினார். அங்ஙனம் இரக்க மில்லாது அழித்து ஆடினதால், இவ்வாடலுக்குக் "கொடுகொட்டியாடல்" எனப் பெயர் வந்தது; (கொடு — கொடுமையான; கொட்டியாடுதல்) கஞ்சன் — கண்ணனின் மாமன். கொல்லிப்பாவை — கொல்லி மலை யின் மேற்குத் திசையில் உள்ள ஒரு தெய்வப் பதுமை. அது அளவு கடந்த பேரழகு உடையது, கடையம் — கடைசிக் கூத்து.]

★

(72—110) மாதவியின் ஆடல் பாடலைக் காணத் தேவர்களும் மாறு வேடத்துடன் புகார் நகரத்தில் வந்து, ஊர் மக்களுடன் காட்சி யைக் கண்டு, மகிழ்ச்சியடைந்தார்கள். புகார் நகரில் நடைபெறும் இந்திரவிழாவும் மாதவியின் ஆடலும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தமை யால், தேவலோகத்தில் உள்ளவர்களுங்கூட, இவ்வாறு மனித உரு வ்த்துடன் புகார் நகருக்கு வந்தார்கள். கோவலனும், மாதவியின் ஆட்டத்தைக் கண்டு, பரவசமடைந்தான். ஆட்டமும் முடிந்தது. முடிவு பெற்ற சமயத்தில், பெரிய களிப்பிலே மூழ்கியிருந்த கோவல னுக்குச் சினமும் வெறுப்பும் உண்டாயிற்று. தன்னுடைய காதலி யின் ஆடல் பாடல் அழகு — இவைகளைத் தான் மட்டுமல்லாமல், ஊர் மக்க ளெல்லாரும் கண்டு களிக்கின்றார்களே என்ற பொறாமை இவன் மனதில் உண்டாயிற்று.

இவ்விதம் கலக்கம் அடைந்திருந்த கோவலன் மனதைக் களிப் படையும்படிச் செய்ய, மாதவி, அலங்காரம் செய்து கொள்ளுகிறாள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன், தமிழ் நாட்டுப் பெண்கள், தங் கள் மேனியை அழகு படுத்தும் கலையை எவ்வளவு நன்றாக அறிந்திருந் தார்கள் என்பதையறியும் போது, அது, இக்காலத்திலும் வியப்பையுண் டாக்கும். மேல்நாட்டுப் பெண்கள், தங்கள் மேனியின் அழகைச் சிறப்பிக்கச் செய்யும் "டாய்லட்" என்னும் முறைகளைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். தமிழ் நாட்டுப் பெண்கள், முன்காலத்தில், எவ் வளவு அருமையான "டாய்லட்" முறைகளைக் கையாண்டார்கள் என் பது சிலப்பதிகாரத்தில் நன்கு தெரியவரும். கூந்தலை அழகு செய்யும் முறையைப் பார்ப்போம். நெல்லி, அத்தி, கருங்காலி, மாந்தளிர் முதலிய பத்துத் துவர்களையும்; அகில், சந்தனம் முதலிய ஐந்து விரை

களையும் இலவங்கம், பச்சிலை, ஏலம், நன்னாரி, கஸ்தூரி, இலாமிச்சம், நறுந்தாது, கொடுவேரி முதலிய முப்பத்திரண்டு ஓமாலிகைகளையும் நீரில் ஊறவைத்து, அவைகளிலிருந்து எடுத்த தைலத்தைக் கூந்தலுக்குப் பூசிக் கழுவினாள். பிறகு கூந்தலை அகிற் புகையில் உலர்த்தி, கஸ்தூரிக் குழம்பு பூசி, ஐந்து சடையாகப் பின்னினாள். கூந்தலை இவ்வாறு அழகு செய்தபின், மாதவி, பலவிதமான அணிகளைப் பூட்டினாள். கால் விரல்களுக்குப் பீலி முதலிய அணிகளையும், காலுக்குப் பாடகம், சதங்கை, பாதசாலம் முதலிய அணிகளையும் அணிந்தாள். தனது திரண்ட துடையில், துடையணி என்னும் ஆபரணத்தைப் பூட்டி, நீல நிறமான பூஞ்சேலையை உடுத்தி, அதன் மேல் முப்பத்திரண்டு முத்து வடங்களால் செய்யப்பட்ட மேகலாபரணத்தை அணிந்தாள். தோளுக்கு அழகிய தோள் வளைகளையும்; சிறு மயிர் உள்ள முன் கையில் சித்திர வேலை செய்த சூடகம், செம் பொற்கைவளை, வால் வளை முதலிய அணிகளையும்; மெல்லிய விரல்களில் வாளை மீன் போன்ற நெளி, மணி மோதிரம், வைரமோதிரம் முதலியவைகளையும்; கழுத்தில் நுட்பமான வேலைப்பாடுள்ள வீரசங்கிலி, சரப்பளி, மணியாரம் முதலிய அணிகளையும் அணிந்தாள். கழுத்தணிகளின் கொக்கிகளில் வைத்த ஒரு அழகிய முகப்பு மெல்லிய பிடரியை மறைத்தது. தன்னுடைய அழகிய காதின் அழகு மிகும்படி, இந்திர நீலத்தின் இடையே வைரங்கள் பதிக்கப்பட்ட நீலக் குதம்பை என்னும் அணியைப் பூட்டினாள். கருங் கூந்தலில் சீதேவி, தென்பல்லி, வடபல்லி, தலைப் பாழை, செழுநீர்வலம்புரி — என்ற இவைகளால் தொடுக்கப்பட்ட தலையணிகளையும் அணிந்தாள். இவ்விதமாக, ஆபரணங்களை அணிந்து தன்னை அழகு படுத்திக் கொண்டு, ஊடல் பெற்றிருந்த கோவலனுக்கு, இன்பத்தைக் கொடுத்துப் பள்ளியறையில் இருந்தாள், மாதவி.

மாதவி அலங்காரமும் கோவலன் மனக்களிப்பும்

அந்தரத் துள்ளோர் அறியா மரபின்;
வந்து காண் குறூஉம் வானவன் விழவும்,
ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள,
ஊடற் கோலமோடு இருந்தோன் உவப்பப்,
பத்துத் துவரினும், ஐந்து விரையினும்,
முப்பத் திருவகை ஓமாலிகையினும்
ஊறின நன்னீர், உரைத்த நெய் வாசம்,
நாறு இரும் கூந்தல் நலம்பெற ஆட்டிப்;
புகையின் புலர்த்திய பூமென் கூந்தலை,
வகைதொறு மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி;
அலத்தகம் ஊட்டிய அம்செம் சீறடி,
நலத்தகு மெல்விரல் நல் அணி செறீஇப்;
பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை
அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து;
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்;
பிறங்கிய முத்து அரை முப்பத் திருகாழ்
நிறம் கிளர் பூம்துகில் நீர்மையின் உடீஇக்;
காமர் கண்டிகை தன்னொடு, பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக்கு அணிந்து;

மத்தக மணியொடு, வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம், செம்பொன் கைவளை;
பரியகம், வால்வளை, பவழப் பல்வளை,
அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து;
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்,
கேழ்கிளர் செங்கேழ் கிளர் மணி மோதிரம்,
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள் செறி,
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து;
சங்கிலி, நுண்தொடர், பூண்ஞாண், புனைவினை,
அங்கழுத் அகவயின் ஆரமோடு அணிந்து;
கயில்கடை ஒழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையின் சிறுபுறம் மறைத்து ஆங்கு—
இந்திர நீலத்து இடையிடை திரண்ட,
சந்திரபாணி தகைபெறு கடிப்பிணை
அங்காது அகவயின் அழகுற அணிந்து;
தெய்வ உத்தியொடு, செழுநீர் வலம்புரி,
தொய்யகம், புல்லகம், தொடர்ந்த தலைக்கு அணி
மைஈர் ஓதிக்கு மாண்புற அணிந்து;
கூட்டும் ஊடலும் கோவலற்கு அளித்துப்
பாடு அமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்;

பதவுரை

[அந்தரத்துள்ளோர் — வானத்திலுள்ள தேவர்கள்; அறியா மரபின் — நிலவுலகத்தார் அறியாத வடிவத்தோடு; வந்து காண்குறூஉம் வானவன் விழவும் — இங்கு வந்து காணுகின்ற இந்திரனுடைய விழாவும்; ஆடலும் கோலமும் — மாதவி ஆடுதலும், அவள் ஆட்டத்திற்கேற்ற கோலமும்; அணியும் — அங்ஙனம் ஆடுதலால் பிறந்த அழகும்; கடைக்கொள — முடிந்துபோக, (அதனால் பிறந்த); ஊடற் கோலமோடு — வெறுப்பான தோற்றத்தோடு; இருந்தோன் உவப்ப— இருந்த கோவலன் களிப்படையும்படி;

பத்துத் துவரினும் — பத்துவகைப்பட்ட துவர்ப்பான பொருளிலும்; ஐந்து விரையினும் — ஐவகைப்பட்ட மணமுள்ள பொருள்களிலும்; முப்பத்து இருவகை ஓமாலிகையினும் — முப்பத்திரண்டு வகையான ஓமாலிகை என்னும் வாசனைப் பொருள்களிலும்; ஊறின நன்னீர் — கிடந்து ஊறின நல்ல நீரினால்; உரைத்த நெய் வாசம் — பூசப்பட்ட தைலத்தின் வாசமானது; நாறு — நாறுகின்ற; இருங் கூந்தல் — கரிய கூந்தலை; நலம் பெற ஆட்டி — நன்கு நிறம்பெறும்படியாக நீராட்டி; புகையின் புலர்த்திய — அகிற்புகையால் உலர்த்திய; பூமென் கூந்தலை — பூக்களணிந்த மெல்லிய கூந்தலை; வகைதொறும் — ஐந்து வகையாகப் பகுத்து, ஒவ்வொரு வகையிலும்; மான்மதக் கொழுஞ்சேறு — கஸ்தூரியாகிய கொழுமையான சாந்தினை; ஊட்டி — நன்கு பூசி;

அலத்தகம் ஊட்டிய அம் செம் சீறடி — செம் பஞ்சுக் குழம்பு ஊட்டப்பட்ட அழகிய சிவந்த சிறிய அடிகளில்; நலத்தகு மெல்

விரல் — அழகு விளங்கும் மெல்லிய விரல்களுக்கு ஏற்ற; நல் அணி செறீஇ — நல்ல அணிகளைப்பூட்டி;

பரியகம் — பாதசாலம் என்னும் ஒருவகைக் காலணியையும்; நூபுரம் — சிலம்பையும்; பாடகம் — பாடகம் என்னும் அணியினை யும்; சதங்கை — சதங்கையையும்; அரியகம் — காற்சரி என்னும் ஒரு வகை அணியையும்; காலுக்கு அமைவுற அணிந்து — அடிக ளுக்குப் பொருந்தும்படியாக அணிந்து;

குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து — குறங்குசெறி என் னும் அணியைத் திரண்ட துடைகளில் பூட்டி;

பிறங்கிய முத்து அரை முப்பத்திருகாழ் — இடுப்பில் கட்டப்படு கின்ற பெரிய முத்துக்களால் முப்பத்திரண்டு கோவைகளாகச் செய்த மேகலாபரணத்தை; நிறம்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ — நீல நிறம் விளங்குகின்ற பூத்தொழிலையுடைய சேலையின் மேல் அழகு பெற உடுத்து;

காமர் கண்டிகை தன்னேடு — காமத்தைத் தருகின்ற மாணிக்க வளையுடன்; பின்னிய — பொற் சங்கிலியில் பின்னப்பட்ட; தூமணி— தூயமுத்து மணிகளான; தோள்வளை — தோளுக்கு அணியும் முத்து வளைகளை; தோளுக்கு அணிந்து — தோள்களில் அணிந்து;

மத்தக மணியொடு—உச்சியில் வைக்கப்பட்ட மாணிக்கத்தோடு; வயிரம் கட்டிய — வயிரமும் பதிக்கப்பட்ட; சித்திரச் சூடகம் — சித்திரத் தொழில் அமைந்த கடகமும்; செம்பொன் கைவளை — செம் பொன்னல் செய்யப்பட்ட கையிலணியப்படும் வளையலும்; பரியகம்— நவமணிகள் அழுத்திய வளையலும்; வால்வளை — சங்கு வளையலும்; பவழப் பல்வளை — பவளங்களால் ஆன பலவளையல்களும்; (ஆகிய இவற்றை); அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து — மெல்லிய மயிர்களையுடைய முன் கையில் அழகு பொருந்த அணிந்து; வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம் — வாளை மீனின் பிளவுபட்ட வாய் போல வளைக்கப்பட்ட மோதிரத்தையும்; கேழ்கிளர் — ஒளி வீசு கின்ற; செங்கேழ்கிளர் — செந்நிறம் விளங்குகின்ற; மணி — மாணிக் கத்தாலான; மோதிரம் — மோதிரத்தையும்; வாங்கு — வளைந்து ஓடு கின்ற; வில் — ஒளியையுடைய; வயிரத்து — சுற்றிலும் வயிரத்தை யுடைய; மரகதத்தாள்செறி — மரகதம் பதிக்கப் பட்ட தாள்செறி என்னும் மோதிரத்தையும்; காந்தள் மெல்விரல்—காந்தள் பூப்போன்ற மெல்லிய விரல்கள்; கரப்ப அணிந்து — மறையும்படியாக அணிந்து;

சங்கிலி — வீரசங்கிலியையும்; நுண் தொடர் — நுண்ணிய சங் கிலியையும்; பூண்ஞாண் — அணியப்படும் வேறு வடங்களையும்; புனை வினை — அழகு செய்து வேலைப்பாடு நிறைந்த பிற அணிகலங்களையும்; அம் கழுத்து அகவயின் — அழகிய கழுத்தின் கண்; ஆரமோடு அணிந்து — முத்து மாலையோடு அணிந்து;

கயில் கடை — நகையின் முகப்பிலே; ஒழுகிய — தொங்கவிடப் பட்ட; காமர் — விருப்பந்தருகின்ற; தூமணி செயத்தகு — தூய ஒன்பது மணிகளாலும் செய்த சிறப்பினையுடைய; கோவையின் — வடங்களால்; சிறுபுறம் மறைத்து — பிடரியை அழகு செய்து மூடி; ஆங்கு — பின்பு;

இந்திர நீலத்து இடையிடை திரண்ட — இந்திர நீலம் என்னும் மணியின் இடையிடையே பதிக்கப்பட்ட; சந்திரபாணி — வயிரங் களால்; தகைபெறு கடிப்பிணை — அழகு பெற்ற நீலக் குதம்பை என் னும் அணியினை; அம்காது அகவயின் — அழகிய காதிடத்தில்; அழ குற அணிந்து — அழகு மிகும்படி அணிந்து;

தெய்வ உத்தியொடு — சீதேவி என்னும் அணியுடன்; செழுநீர் வலம்புரி — வளம் நிறைந்த தன்மையுடைய வலம்புரிச் சங்கையும்; தொய்யகம் — தொய்யகம் என்னும் அணியும்; புல்லகம் — வடபல்லி தென்பல்லி என்னும் அணிகளுமாகிய; தொடர்ந்த — இவையெல்லாம் ஒன்றோடொன்று அழகுபெறச் சேர்ந்த; தலைக்கு அணி — தலைக்கு அணியும் அணிவகையை; மை ஈர் ஓதிக்கு — மேகம் போன்ற குளிர் ந்த கூந்தலுக்கு; மாண்புற அணிந்து — அழகு மிகும்படி அணிந்து;

கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்து — புணர்ச்சியையும் ஊடலையும் கோவலனுக்கு மாறி மாறித் தந்து; பாடு அமை சேக்கைப் பள்ளியுள் — படுக்கை அமைந்த இருவரும் சேர்கின்ற பள்ளியுள்; இருந்தோள் — இருந்தவளாகிய மாதவி;

(தொடரும்)

விதி

விதியே, தமிழச் சாதியை எவ்வகை
விதித்தா யென்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்?
ஏனெனில்,
சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
"எல்லை யொன்றின்மை" என்னும் பொருள் அதை
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழச்
சாதியை 'அமரத் தன்மை வாய்ந்தது" வென்
றுறுதி கொண்டிருந்தேன்.................
இப்பெருங் கொள்கையை இதயமேற் கொண்டு
கலங்கிடாதிருந்த வெனைக் கலக் குறுத்தும்
..............இங்கிவ் விருதலைக் கொள்ளியி
னிடையே நம்மவர் எப்படி உய்வர்?
விதியே, விதியே! தமிழச் சாதியை
என் செயக் கருதி இருக்கின்றாயடா?

—பாரதி

குழந்தை உள்ளம்

(ஸ்ரீமதி அபயம்)

"அம்மா, எனக்கு அந்த ஊதி."

"அது நல்லாயில்லே, வேற வாங்கித் தாரேன்."

"அம்மா, மிட்டாயி வாங்கித் தா."

"அந்த மிட்டாய் தித்திப்பில்லே. தூர வச்சிருக்கானே அங்கே, அது நல்லாயிருக்கும். அங்கே வாங்கித் தாரேன்."

"இது என்னம்மா இது?"

"அது என்னமோ தெரியாது."

இதுதான் சமயமென்றிருந்த 'ஜவ்வு' மிட்டாய்க்காரன் தன் பாட்டை ஆரம்பிக்கிறான்:

"ஜில் ஜில் மிட்டாய்
ஜிவ் ஜிவ் மிட்டாய்,
பார்த்த வாயிலே பாலு ஊறும்,
தின்ன வாயிலே தேனு ஊறும்
வாங்கிப் பார், தின்னுபார்
ஜில் ஜில் மிட்டாய்..........."

"அம்மா, எனக்கு ஜில் ஜில் மிட்டாய்"

குழந்தையின் எண்ணத்தை மாற்ற, பொன்னி வெகு தூரத்தில் காணப்படும் தேரைச் சுட்டிக் காண்பிக்கிறாள். ஆனால் குழந்தையின் கவனத்தைக் கவர வெகு சமீபத்தில் எத்தனை பொருள்கள் இருக்கின்றன? காற்றாடிக்காரன் ஒரு பெரிய குச்சியில் வைக்கோல் வைத்துக் கட்டி அதில் நூற்றுக் கணக்கான காற்றாடிகளைச் சொருகி வைத்திருக்கிறான். லேசான காற்று அவைகளின் பேரில் படும் போது அவை கரகரவென்று சுற்றுகின்றன. அக்காற்றாடிகளில் தான் எவ்வளவு வர்ணங்கள்! அவை குழந்தையின் கண்களையும் மனதையும் கவராதிருக்குமா?

"இங்கே பாரு கண்ணு, தேரு தெரியல்லே?" என்று வற்புறுத்துகிறாள் தாயார். குழந்தையின் பார்வை காற்றாடிக்காரனை விட்டு நீங்க சற்று திரும்புகிறாள். ஆனால் அவள் எதிர் பார்க்கும் பலன் கிடைப்பதில்லை. குழந்தையின் பார்வை காற்றாடிகளிலிருந்து அடுத்தாற்போல் கிடக்கும் மாம்பழக் குவியலின் பேரில் விழுகிறது.

"அம்மா, அம்மா, மாம்பழம்" என்று கத்துகிறது குழந்தை. குதூகலம் நிறைந்த முகத்துடன்.

எவ்வளவுதான் தட்டிக் கழிக்க முடியும்? ஒரு மாம்பழத்தை வாங்கிக் குழந்தையிடம் கொடுக்கிறாள். மாம்பழக்காரனுக்குக் காசு கொடுக்க வேண்டுமே. தன் அருமைச் சுமையை கீழே இறக்கி விட்டு, 'இங்கேயே நில்' என்று எச்சரித்து விட்டு பணப் பையை இடுப்பிலிருந்து எடுக்கிறாள். ஜன நெருக்கடியில் வரும்போது கூட்டத்தில் முடிச்சுக் கத்திரிப்பவன் எவனாவது இருந்தால் பின்பு ஊர் திரும்ப முடியாது!

அது என்ன சப்தம்! ஏன் ஜனங்கள் அப்படி ஓலமிடுகிறார்கள்? அடெடே! இதென்ன ஜனத்திரள், பொன்னியை நோக்கியல்லவா வருகிறது! முரட்டு மனிதர்கள்! இவர்களுக்குக் கண் இல்லையா? ஏன் இப்படித் தள்ளு

கிறுர்கள்? "ஐயோ! குழந்தை! ஐயோ! என் குழந்தை!......"

ஒரு கணத்தில் தாயும் குழந்தையும் பிரிக்கப்பட்டு விட்டனர். குழந்தை இருக்கும் இடமே தெரிய வில்லை.

* * *

காடையூர் தேர் என்றுல் கூட்டத்திற்குக் குறைச்சலேது? ஐம்பது மைல் வட்டாரத்திற்குள் வேறு எந்த ஊரிலும் இவ்வளவு பிரமாதமான உற்சவம் கிடையாது.

கடை கண்ணிகள் தான் எத்தனை வந்திருந்தன! அவைகள் வரிசை வரிசையாக வைக்கப் பட்டிருந்ததே ஒரு அலாதி அழகு. ஒரு சிறு கிராமாந்தரத்தில் என்ன அழகு என்று கேட்கிறீர்கள்? மிட்டாய்க் கடைகளில் தித்திப்புப் பண்டங்கள் துணிக் கூரைவரை வளர்ந்திருந்தன. கலர் கலரான பர்ப்பிகளில் தான் எத்தனை வகை! தட்டை முறுக்கு முதல் ஜிலேபி வரை நூற்றுக் கணக்கான தினுசுகள். அவைகளைப் பார்க்கும் போதே நாக்கில் ஜலம் ஊறும். அத்தனை பக்ஷணங்களும் நான்கு நாட்களுக்கு முன்னரே தயாரிக்கப்பட்டு, பல சுற்றுப் புற கிராமங்களிலிருந்து வந்திருந்தன. பொம்மைக் கடைகள் அடுத்தபடியாக கவனத்தைக் கவருகின்றன. எல்லாம் சுத்த சுதேசிச் சரக்கு; மண்ணினுல் தயார் செய்யப் பட்டவை சில. மரத்தினுல் செய்யப் பட்டவை சில. இவைகள் பழங்கால மனிதர்களைப் போலவே நெடு நாள் உழைக்கக் கூடியவை. ஒரே நாளில் ஒடிந்து போகும் ஜப்பான் பொம்மைகள் அல்ல. இவை தவிர ஊது குழல், கடலை பொரி, தேங்காய் பழம், கண்ணுடி, வளையல், கலர் குங்குமம், கண்ணுடி, சீப்பு, இன்னும் இத்தியாதி. ஊசி முதல் உலக்கை வரை ஆயிரக் கணக்கான வஸ்துக்கள்.

பெரிய நகரங்களிலுள்ள கடை வீதிகளுக்கும் இத் தேர் விழாக் கடைகளுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. நகரங்களில் பேராசை பிடித்த மனிதர் வாழ்க்கைப் போரில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருப்பர். அவர்கள் தெருக்களில் நடமாடும் போதும் கவலைக் குறி தான் தோன்றும். எளியவர்களுக்குப் பணமில்லையே என்ற கவலை.

சாதாரண மனிதர்களுக்குப் பணம் போதவில்லையே என்ற கவலை. பணக்காரர்களுக்குத் தான் இன்னும் அதிகமான கவலை. இன்னும் பணம் திரட்டுவதிலேயே கருத்து. இப்பேர்ப் பட்ட ஜனங்களுக்கு வாழ்க்கையில் நிம்மதி கிடையாது. சந்தோஷம் எங்கிருந்து வரும்? ஏங்கிய முகங்களே எங்கும் தென்படும். ஆனுல், இக் கிராமாந்தர ஜனங்களைப் பார்க்கும் போது எவ்வளவு வித்தியாசம்! கவலையற்ற பிராணிகள். உண்ண உணவும் இருக்க இடமும் இருந்தால் போதுமானது. மேற்கொண்டு தேவையும் சொற்பம்; அதுவும் லகுவில் கிடைத்து விடுகிறது. இயற்கையாகவே சந்தோஷத்துட னிருப்பவர்களுக்குத் திருவிழா என்றுல் சொல்ல வேண்டுமா? குதூகலம் தாண்டவமாடும்.

திருவிழாவுக்கு வந்திருந்தவர்கள் அணிந்திருந்த ஆடைகளில் தான் எத்தனை வர்ணங்கள்! வான வில்லில் ஏழுவர்ணம் தான் இருக்கின்றன என்றுல் அங்கே எழுநூறு வர்ண ஜாலங்கள் கண்ணைப் பறிக்கின்றன.

* * *

திருவிழாக் கூட்டம் சொல்லி முடியாது. மாம்பழத்தைக் கையில் வாங்கிய குழந்தை உடனே அதை ருசி பார்க்க ஆரம்பித்தது. ஒரு கடி; கசக்கிறது. ஆனாலும் அதில் கொஞ்சம் தித்திப்பு. தூ வென்று துப்புகிறது. மறுபடியும் கடிக்கிறது. ஆ! இப்பொழுது தசை கடிபட்டு நாக்கில் ருசி உரைக்கிறது. மறுபடியும் இரண்டு மூன்று கடி. ருசியை அனுபவித்துச் சாப்பிடுகிறது.

அதற்குள் மேலே கூறிய கலவரம்; குழந்தை இருக்கிறதே என்று கூடப் பாராமல் ஜனங்கள் தள்ளுகின்றனர். அவர்களா தள்ளுகின்றனர்? அவர்களுக்கு அப்பால் யாரோ; அவர்களும் தள்ள வில்லை. இன்னும் அந்தப் புறத்தில் தள்ளுகிறார்கள். உண்மையாகப் பார்க்கப் போனால் ஒருவரும் தள்ளுவதில்லை. எப்படியோ எல்லோரும் சேர்ந்து தள்ளப் படுகின்றனர். இதன் ஆரம்பஸ்தானமே மர்மம் நிறைந்தது.

குழந்தையின் கையிலிருந்த மாம்பழம் கீழே விழுந்து விட்டது. அதைக் குனிந்து எடுக்க வேண்டுமென்ற எண்ணம் குழந்தைக்கு. ஆனால் அதை எப்படி எடுக்க முடியும்? ஜன நெருக்கடியில் குனிந்து எடுப்பது முடியாத காரியம். அதுவுமல்லாமல் ஜனங்கள் தள்ளிக் கொண்டே போனதில் பழம் விழுந்த இடத்திற்கும் குழந்தை அப்பொழுது நின்ற இடத்திற்கும் இருபதடி தூரத்திற்கு மேலிருக்கும்.

குழந்தைக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மா எங்கும் காணப் படவில்லை. "அம்மா" என்று அழத்தொடங்கியது.

பெண் பிள்ளைகளே இல்லாத இடத்தில் "அம்மா" என்று அழும் குழந்தையை ஒருவர் கவனித்தார். "அடடே, குழந்தை இதெப்படி இங்கு வந்தது? நகருங்கள் நகருங்கள்" என்று கூறி ஜனங்களை சற்று விலக்கினார்; "யாருடைய குழந்தை இது?" என்று அவர்களைக் கேட்டார்.

"எனக்கு தெரியாதே" ஒரு பதில்.

"குழந்தையை எடுத்திட்டு வந்தா ஜாக்கிரதையா இருக்க வாண்டாம்? இப்படியா உட்டுட்டு போவா ஒரு பொம்பளை!" இது மற்றொரு ஆசீர்வாதம்.

"குழந்தை உங்க அம்மா எங்கே?"

ஒருவர் குழந்தையிடம் நெருங்கிக் கேட்கிறார். குழந்தையின் அழுகை பலமாகிறது. சுற்றிலுமுள்ளவர்கள் தங்களுக்குத் தோன்றிய படியெல்லாம் பல விதமாகத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றனர். அவர்களின் அபிப்பிராயங்கள் சற்றேனும் குழந்தைக்கு ஆறுதலளித்தால் தானே.

சற்று எட்டி நின்ற ஒருவர் தனக்குத் தெரிந்த உபாயத்தைக் கையாளுகிறார். "இந்தா குழந்தை, ஊதி இந்தா" என்று தன் கையிலிருந்த ஊதியைக் குழந்தையிடம் நீட்டினார். ஆனால் குழந்தை அதைப் பார்த்து விட்டு "அம்மா" என்று மேலும் அழுகிறது.

"கொஞ்சம் மிட்டாய் வாங்கிட்டு வாங்கோ" என்கிறது ஒரு குரல்.

"இந்தா, மிட்டாய் தித்திப்பு மிட்டாய்" என்று ஒருவர் கொடுக்கிறார்.

"ஊஹூம்" என்று தலையை அசைக்கிறது குழந்தை. அழுகை நின்றபாடில்லை. ஜில் ஜில் மிட்

டாய்க்காரனின் பாட்டு சமீபத்தில் கேட்கிறது. "ஜில் ஜில் மிட்டாய் வேணுமா? என்று கேட்கிருர் ஊதி மனிதர். குழந்தை அதைக் காதில் போட்டுக் கொண்டால் தானே.

பையனெருவன் இதைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறன். குழந்தையின் பேரில் அனுதாபமடைகிறன். தன் கையில் ஒரு காற்ருடியை வாங்கிக் கொண்டு குழந்தை அழுகையை நிறுத்தி விடுமென்பது அவன் நம்பிக்கை. மெதுவாக அந்தக் கும்பலிடம் வந்து காற்ருடியை நீட்டுகிருன், குழந்தை அதைக் கவனிக்கிறது. ஆனல் அதற்கு காற்ருடியின் பேரில் கண் இல்லை.

"ஊஹூம்" மறுபடியும் அழுகை உச்சஸ்தானத்தை அடைகிறது.

அந்த சமயத்தில் பொன்னி எங்கிருந்தோ ஓடிவருகிருள். அவள் தோற்றம் அலங்கோல மாயிருந்தது. குழந்தையை சுற்றியிருந்த ஜனங்களை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாகத்தள்ளி விட்டு, "என் கண்ணே" என்று கூவிக் கொண்டு குழந்தையை வாரியெடுத்து அணைத்து அதன் வீங்கிய கன்னத்தில் ஒரு முத்தமிடுகிருள். நூறு மல் கோவா மாம் பழத்தின் ருசியைப் பருகிய மாதிரி குழந்தையின் முகம் மலருகிறது. கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறுகிறது!

ஆனந்தம்

அழகே கண்ணின் மணியே
    அன்பே சின்னப் பாப்பா!
குழலின் இன்பப் பண்ணில்
    குதலை பாய்ச்சும் கிள்ளாய்
சிலையின் எழிலே! தெய்வச்
    சிற்பி வடித்தான் உன்னைக்
கலையின் பயனைக் கூட்டிக்
    கண்ணில் ரவைகள் உருட்டிக்
குமுதத் திருவாய் ஊதிக்
    குளிர் சேர் உயிரும் பெய்தான்
அமுதம் இதுவே என்று
    அன்னை மடியில் சேர்த்தாள்
மழலை இன்பக் குரலின்
    மற்ருென் றறியாள் மண்ணில்
கன்னம் தீண்டும் பயனைக்
    கனியில் மலரில் காணுள்
புத்தம் புதிய உயிரிற்
    போந்தாய் எழிலின் பூவே
சித்தம் இன்ப வெறியில்
    சிலிர்க்கும் உன்னைக் காணில்.

"இசை"

4-JUL 1944
MADRAS



கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

சிங்கம் தட்டை நேற்றுவாங்கி வந்தார். நாவிருந்திற்குப் பிறகு செவி விருந்து அன்று நண்பர் கூட்டத்திற்குப் பேரின்ப மளித்தது. "சபாஷ் ராமநாதன்" என்று ஒவ்வொருவரும் தமிழ் மணி முதுகில் தட்டிக் கொடுத்தனர். இதேமாதிரிப் பல பாடல் களைத் தட்டெடுக்க வேண்டுமென் றனர். "அதற்குப் பக்குவம் வர வில்லை; இப்போது நான் அரை குறை" என்று ராமநாதன் அடக்கமாக பதிலளித்தான். உடனே மற்றொரு கேள்வி எழுந்தது. இராமநாதன் குரலுக்குச் சரியாக வீணை வாசித்தது யார்? ஆணா பெண்ணா? ....

இந்த விவாதத்தில் கூட்டம் இரண்டானது. சிலர் பெண் என்றனர். சிலர் ஆண் என்றனர். விவாதம் முற்றியதும் சிங்கம் "நீதான் சொல்லேன் ராமு" என்றார். "நண்பர்களே வீணைக்கும் பாட்டுக்கும் ஆண் பெண் ஏது? யார் பாடினாலென்ன? இனிமையாயிருந்தால் சரி" என்று தமிழ்மணி மௌனமானான். "குட்டை அடக்குகிறான் பேர் வழி. கல்கத்தா கிராமபோன் கம்பெனி சாமிநாதன் எனது நண்பன். அவனுக்கு எழுதிக் கேட்கிறேன்" என்றார் சிங்கம். அதற்கும் தமிழ்மணி ஒன்றும் பேசவில்லை. அவன் மனம் இப்போது இங்கில்லை—பிறகு? அது வாணியிடம் போனது. வாணியை வாசகர் மறந்திருக்க மாட்டார்கள். மணியின் மனம் சிலநாட்கள் வாணியின் கனவிலேயே சுழன்று கொண்டிருந்தது. இதற்கிடையே நடந்த ஒரு சம்பவத்தைக் கேளுங்கள்.

28. புகழ்

புகழ் ஓர் இனிய சுமை; அமைதியைக் கெடுக்கும் ஒரு விளையாட்டுக் குழந்தை; அது நம்மேல் தனது தங்கக் கரங்களையும் கால்களையும் போட்டு எறி விளையாடும்; நம்மை மேடைக்கு மேடை மாளிகைக்கு மாளிகை இழுத்தடிக்கும். பத்திரிகைப் பத்திகளில் நமது

பெய்ரைத் துவையல் அறைப்பது போல் வைத்துருட்டும். "புகழ்" என்ற மோகினி வந்த போதே முன் மனிதன் மாறிப் போகிருன். அவனுக்கு ஒரு செருக்குண்டாகிறது; குல்லா குலாமிப் பேர்வழிகள் சிலர் சுற்றி வந்து உனக்குச் சமானம் உண்டா என்று தூக்கி விட்டுத் தலையைத் தடவுகின்றனர். எதிரிடையாகச் சிலர் கிளம்புகின்றனர் — இவர்கள் எந்த ஆளிடமும் குற்றம் கண்டு பிடித்து ஒன்றை ஒன்பதாக்கி, ஐந்தை ஐம்பதாக்கித் தூற்றும் அற்பர் கூட்டம். புகழை இவர்கள் தூற்ற, சிலர் போற்ற — இரண்டு கட்சிகள் உண்டாகின்றன; இரண்டிற்கும் இடையே சில நயவஞ்ச நரிகள் புகுகின்றன — கோள் சொல்லி குண்டர்கள், "கேட்டீரோ செய்தி அந்தப்பயல் உம்மைப் பற்றி இப்படிப் பேசினன். அப்படிப் பேசினன்" என்று இங்கே மெல்ல வெடித்தல், எதிரியிடம் போய், "அவன் என்ன மனிதன்? உனக்குச் சமானமா? உன்னை அவன் மதிக்கவேயில்லை" என்று கொஞ்சம் ஊசி குத்தல். பிறகு இரண்டு பேருக்கும் குடுமி முடித்துக் கைதட்டல், இது இவர்கள் வேலை. வேறு சில மஹானுபவர்களுக்குப் பிறர் முன்னுக்கு வருவதே பிடிக்காது — இவர்கள் மூக்கைப் பார்த்தாலே தேள் கொடுக்கைப் போல் இருக்கும்; வாய் பொருமை விஷம் கக்கும்; வயிற்றெரிச்சலால் இவர்களுக்குத் தூக்கங் கூட வராது; ஆளை எப்படியாவது கெடுக்க இவர்கள் தெரிந்தும் மறைந்தும் வேலை செய்து கொண்டிருப்பார்கள்.

கெஸ்டாபோ (**Gestapo**) என்ற வார்த்தை எல்லாருக்கும் தெரியும் கெஸ்டாபோ என்றால் நாஜி ஒற்றன். அவர்களுக்குத் தலைவன் ஹிம்லர். பூனை மாதிரி பதுங்கிச் சென்று ஆளைப் புலிமாதிரி பிடித்து ஒழிப்பது இவர் வேலை. இதே வேலையைத்தான் மனித சமுதாயத்தில் பொறுமை செய்கிறது. பொருமை ஒரு கெஸ்டாபோ ஹிம்லர்; அது பேராசையின் கெஸ்டாபோ. ஐயோ அவன் முன்னுக்கு வருகிருனே — அவன் காலை வாரிவிட்டு நான் முன்னேற வேண்டும், எனக்குச் சமானமாக யாரும் இருக்கக் கூடாது என்று பேராசை ஜபம் செய்கிறது. பேராசையின் மாய வலைதான் புகழ் பேராசை — புகழ் பொறுமை — இந்த மூன்றுதான் உலக வரலாற்றின் திருப்பு மையங்கள். ஒரு பெரிய கல்லைப் புரட்டி மேலே ஏற்றிக் கோபுரம் கட்ட வேண்டுமானுல் சரியான படி சாரம் கட்டி அதன் சாய்வில் நெம்புகோல் போட்டு திருப்பு மையத்தில் உந்திக்கல்லை "ஏலேலோ" என்று மேலேற்றுகிருர்கள். அந்த வேலையைத்தான் போட்டியுலகில் பொருமை செய்கிறது; அது ஆளை உந்தி அபாயத்தின் உச்சியில் ஏற்றி உருட்டி விடுகிறது. தனது மனக் கோபுரத்தைக் கட்டப் பிறர் மாளிகையை இடிக்கிறது.

உலகக் கதைகளில் சிக்கல்களை உண்டாக்கி நவரசமும் ஊட்டுவது பொருமை — பேராசை. கைகேசியின் பேராசையில்லாவிட்டால் இராமாயணம் ஏது? சூர்ப்பனகை சீதையின் அழகில் பொருமைப் படாதிருந்தால் இலங்கைப் போர் ஏது? இராமாயணம் சீதாராமரால் இல்லை; அவர்கள் அமைதியாக வாழ்ந்து சென்றிருந்தால் வால்மீகிக்கு வேலையில்லை; இடையே ஒரு கைகேசியும், சூர்ப்பனகையும் வந்து கதையைத் தூண்டி நடத்துகின்றனர். அதனாலே தான் நமக்குக் கம்பனும் துளஸிதாஸரும் கிடைத்தனர்.

நமது கலைக் கோயிலிலும் இந்தச் சிக்கல்கள் வருகின்றன. அதற்கே கொஞ்சம் முன்னுரைத்தேன். இனி ஓட்டந்தான். நேராக உல்லாச மாளிகைக்குச் செல்வோம்.

29. உல்லாசமாளிகை

உல்லாசமாளிகை ஓர் சிற்றின்ப நரகம். பளிச்சிடும் இருள்; வாலிபரைப் பாழ்படுத்தும் வசீகரம். அதோ தெரியும் மூன்றடுக்கு வீடுதான் உல்லாச மாளிகை. அது நாடகக் கொட்டகைதான்; முன்புறம் தகரக் கொட்டகை; பச்சைச் சாயத்தால் மினுக்குவது — அலங்கார வாசலில் உல்லாச மாளிகை; கவலை தீர வாருங்கள் என்று பகட்டான பலகை போட்டிருக்கும். இரண்டு அழகான பெண்கள் இருபுறமும் பலகையைத் தாங்குவது போல் படம் தோன்றும்; படத்தில் பெண்கள் முகம் வசீகரமான புன்னகையுடையது. வாசலுக்கு இடது புறம் சுவரில் ஒரு சிறு சன்னலுண்டு; அதன் வழியாகச் சீட்டு வாங்கிக் கொண்டே உள்ளே போக வேண்டும். வாசலைத் தாண்டியதும் ஒரு அலங்காரத் தட்டி தோன்றும்; அதைத் தாண்டிச் சென்றால் நாடகக் கொட்டகைதான். அங்கே அழகான சித்திர வேலைகள் கண்ணைக் கவரும்; அலங்காரத் திரைகள் போட்ட அரங்கம் தோன்றும்; அரங்க மேடை விசாலமானது; அதில் ஐம்பது பேர் நடிக்கலாம்; பாட்டு, சதுர், நாடகம் ஆகிய மூன்றிற்கும் அது தக்கபடி அமைந்திருந்தது; அரங்கில் சுமார் பத்துத் திரைகள் ஒன்றின் பின் ஒன்றாகக் காணும். அரங்கின் இடது பக்கம் பின்பாட்டுக்காரர் உட்காரலாம்; வலது புறம் ஒரு நீண்ட அறையுண்டு; அதிலேதான் வேடங் கட்டுவார்கள். அதில் ஒரு தட்டி வைத்துத் தடுத்துள்ளார்கள்; தட்டியின் அப்புறம் பெண்கள் வேடங் கட்டுவார்கள்; இப்புறம் ஆண்கள். திரைகளுக்குப் பின்னால் ஒத்திகை ஹால் இருக்கிறது. அதிலேதான் நடிகரும் நடிப்புக்கலை பழகுவார்கள். இந்த ஹாலிலிருந்து முதல் மாடிப் படிகள் மேலே செல்லுகின்றன; ஏறிச் சென்றால், நடிகரும் நடிகையரும் வசிக்கும் அலங்கார அறைகளைக் காணலாம்; அங்கிருந்து மூன்றாவது மாடிக்கு ஏறிச் சென்றால் இந்திரலோகந்தான். அங்கேதான் உல்லாச மாளிகையின் உல்லாச ராணி பிஜிலிதேவி தர்பார் நடத்துகிறாள்.

பிஜிலியம்மாள் தர்பார் ரகசியம் மூடு மந்திரம்; அதை வாயு பகவான் கூட அறிய முடியாது; அவள் மனம் அவளுக்கே தெரியும்; ஆனால் அவள் ராங்கியும் அல்லி தர்பாரும் எல்லாருக்கும் தெரியும். ஆதலால் ஆணாதி ஆண்களும், பெண்ணாதி பெண்களும் அவள் முன் பெட்டிப் பாம்பாக அடங்கித்தான் போக வேண்டும். ஏன்? அவளை எதிர்த்தால் எமலோகந்தான்? ஏன்? எமன் காலன் தூதன் இவர்களைவிடக் கொடிய குண்டர் படை அவள் கையில் இருக்கிறது. பிஜிலியம்மாளை நினைத்தாலே குண்டர்களுக்கு குண்டோதர ஏப்பம் வரும். அப்படித் தீனிபோட்டுக் காட்டெருமைகள் மாதிரி அவர்களை வளர்த்திருக்கிறாள். கள்ளுக்கடை கசாப்புக்கடை கால்வாசி அவள் குத்தகைதான். அத்தனை குண்டர்களுக்கு அவள் சலிக்காமல் இரை போட்டாள். வயிறே பெரிதென வாழும் குண்டர்கள் அவள் சொன்னபடி ஆடுவார்கள்; அவளே அவர் தெய்வம்; கொள்ளை, கொலை, பொய்சாட்சி,

அடிதடி, பகல் வேஷம், இரா வேஷம் எதுவானாலும் சரி அவள் வாயால் இட்டகட்டளையை குண்டர்கள் அப்படியே நிறைவேற்றி விடுவார்கள். ஆனால் குண்டர்கள் அவளை அபூர்வமாகவே பார்க்க முடியும். குண்டர் தலைவன் குண்டோதரனே பிஜிலியம்மாள் கட்டளையை அவர்களுக்கு இரகசியமாகச் சொல்லுவான், குண்டோதரனை ஏவுவது குப்பையா (பையா) குப்பையாதான். பிஜிலியிடம் எப்போதும் இருப்பவன். அவள் இவனைச் சரியான படி மயக்கி அடிமைப்படுத்தியிருக்கிறாள். அவள் அடித்தாலும் ஆசீர்வாதம்; வைதாலும் வாழ்த்து என்று நினைப்பான். குப்பையா (பையா) குப்புவுக்கும் மேலே ஒரு ஆசாமி உண்டு. அவனை அவள் "டுணுக்கேசா'' என்றழைப்பாள்.

பலே எத்தன்; தந்திரப்புலி; அந்தப்புலியிடம் பிஜிலிக்கு ஒரு மோகம்; அவனுக்கு அவளிடம் உயிர். ஆதலால் இருவரும் ஒருவருக்கொருவர் அடிமை. இந்த இரட்டை அடிமையிலிருந்து உல்லாசமாளிகை ஒரு பெரிய அடிமைச் சிறையாகவே நடந்து வருகிறது. டுணுக்கேசருக்கும் பிஜிலிக்கும் நடக்கும் பேச்சு வார்த்தைகள் மூச்சுவளியாகக்கூட வெளிவர இடமில்லை. பத்தாண்டுகளாக இருவரும் பிரியாத ஜோடியாகச் சேர்ந்து புரியாத செயலில்லை. ஒருவர் பழக்கம் மற்றொருவருக்கு ஒட்டிக் கொண்டு இருவரும் கெட்டனர். எத்தனையோ பேரைக் கெடுத்தனர். அவள் என்ன செய்தாலும் அவர் ஏன் என்று கேட்க மாட்டார். ஆனால் இவள் உத்தரவின்றி அவர் உண்ண உடுக்க, உறங்க, உரைக்க, நடக்க, உட்காரக்கூட முடியாது. அவருக்கு அவளே கதி; அவள் சித்தமே அவர் பாக்கியம். இருவரும் ஆடல் பாடல் நடிப்பு படிப்பு அனைத்திலும் வல்ல கலையாளர். இருவரும் சேர்ந்தே உல்லாச மாளிகையை நடத்துகிறார்கள். கலையின் பெயரால் அதற்கொரு கவர்ச்சியுண்டு; அக்கவர்ச்சி வலையில் விழுந்த இளங்காளைகளும் யுவதிகளும் பலர்; அநேகர் ஊரில் வசிக்கிறார்கள். சிலர் மாளிகை அறைகளிலே வசிக்கிறார்கள். இந்த இளம் பெண்கள்தான், பிஜிலியின் வெற்றிப் படைகள். தாய் நாட்டிலிருந்து இளம்மனைவியரைப் பிரிந்தவர்களும், கலியாணமாகாத காளைகளும் பர்மாவில் வந்து வேலை பார்க்கிறார்கள். அவர்களில் பணச் செழிப்புள்ளவர்களை யெல்லாம் பெரும்பாலும் இந்த உல்லாச மாளிகையில் மனம் பறிகொடுத்து அலைவதைக் காணலாம். பிஜிலி எல்லாருக்கும் நல்ல தீனிபோட்டு அழகான அணிமணிகள் தந்து அவர்களுடைய மினுக்கழகைப் பொன் செய்கிறாள். இந்த அழகிகள் போகவர இரகசியப் பாதைகள் உண்டு. பூமிக் கடியிலும் பாதையுண்டு. அப்பாதை நூற்றைம்பது கஜத்திற்கு அப்பால் உள்ள ஒரு வீட்டில் போய் முடியும். அது இரகசியப்பாதை பிஜிலிக் கூட்டத்திற்கே தெரியும்.

இந்தப் பாதை வழியாகச் சென்றால் ஒரு மாடி வீட்டிற்குச் செல்லலாம். அங்கிருந்து ஒரு பாதை வழியே மற்றொரு மாடி வீட்டிற்குச் செல்லலாம். அந்த வீடுதான் முன்னே சுடலையாடிச் சாமி சிவநேசத்தை மிரட்டிய வீடு, இந்த வீட்டில் செல்வரைத் தந்திரமாக மிரட்டிப் பணம் பறிக்க குண்டர் எல்லா வேஷமும் போடுவார்கள். அதில் நல்ல பயிற்சியுண்டு. இதற்கு அடுத்த வீடு வாலிபர் சுடுகாடு தான். உல்லாச இளம் ராக்ஷஸிகள் அங்கிருந்தே வாலி

பரை வசப்படுத்தி, பலத்தையும் பணத்தையும் உறிஞ்சி வந்தார்கள்.

இரண்டு வீடும் எப்போதும் மூடியே இருக்கும். வாடகைக்கு இருப்பதாகச் சில குண்டர் வேசம் போட்டு அதில் வசிப்பர். அல்லது இளங்காமுகர் வசிப்பர். இந்த இரண்டு வீடுகளில் நடக்கும் திருவிளையாடல்களின் விசை உல்லாசமாளிகையிலே தான் இருக்கிறது. ஆனால் யாருக்கும் தெரியாது. இன்றுவரை உல்லாச மாளிகை நாடக சபை என்பது தான் ஊரார் நம்பிக்கை. திரைகளைத் தாண்டி யாரும் செல்ல முடியாது; இரகசியமும் வெளி வராது. திரையைத்தாண்டி ஒரு யுவனோ யுவதியோ உள்ளே சென்றால் சென்றதுதான்; பிறகு அவர்களைப் பற்றிய செய்தி எதுவும் வெளிவராது.

உல்லாச மாளிகையில் பகிரங்கமாக நடப்பவை ஆடல் பாடல் நாடகம், படக்காட்சிகள் முதலியன. இவற்றை உள்ளிருந்து இயக்குவோர் டுணுக் — பிஜிலிகள்; வெளியிருந்து ஆடம்பரமாக நடத்துவோன் குப்பையா (பையா) மற்றவர்கள் அனைவரும் வேடம் போட்டுக் கூட நடப்பவர்கள். ஐம்பது யுவரும் யுவதிகளும் பிஜிலியுடன் அரங்கில் விளையாடும் விதவிதக் காட்சிகள் கண்ணிற்கு விருந்துதான். அரங்கேற்றும் கதை, பாட்டு எல்லாம் பிஜிலி — டுணுக், குப்பையா தயாரிப்புகளே — மூவரும் நன்ருகப் பாடுவார்கள். உணர்ச்சியுடன் நடிப்பார்கள், ஆனால் டுணுக்கேசர் மேடைமேல் வருவதில்லை; பிஜிலிதான் மேடைத் தலைவி, "பையா" தலைவன். நாடக அரங்கை அமைத்து முதல் போட்டவன் குப்பையாதான்.

அவனை மயக்கி அடிமையாக்கி ஆதிக்கம் செலுத்துகிறவள் பிஜிலி. இந்தப் பிஜிலியார்? அவள் பர்மாவுக்கு வந்ததேன்? அவளிடம் இத்தனை பேர் மயங்கியதேன்? எனக்குத் தெரிந்த மட்டும் சொல்கிறேன்.

30. பிஜிலி நடனம்

நமது தொடர் கதை சாதிமத விவகாரங்களைக் கடந்தது. ஆதலால் பிஜிலி எச்சாதி எம்மதம் என்று நான் சொல்லப் போவதில்லை. அவளுக்கும் சாதிமத விவகாரம் பிடிக்காது; கடவுள் என்ருலும் கல்தான்.

தாராமணி என்ற புகழ் பெற்ற நடிகை இருந்தாள்; அவள் நல்ல குலத்தில் பிறந்தவளே; ஆனால் பெற்ருேர் அவளை ஒரு கிழவனுக்குக் கட்டினர். கிழவன் காசத்தால் இறந்தான். தாராமணி விதவையானள். உறவினர் முக்காடு போட்டுப் பலகாரத் தீனி போட்டுச் செக்குமாடு மாதிரி வேலை வாங்கினர். இளம் பெண் வயதிற்குரிய ஆசை அவளை விடவில்லை. அடுத்த வீட்டில் ஒரு சங்கீத வித்வான் — அழகன், மனைவியிழந்த விதவன் இருந்தான். அவனுக்கும் இவளுக்கும் கண்ணுறவு கையுறவு எல்லாம் ஆகித் தாராளமாகப் போக்கு வரவு நடந்தது. இரகசியமாகத்தான் தாராமணி கருத்தரித்தாள்.

வீட்டார் அறிந்து கொண்டனர். "முண்டை எங்காவது குளத்தில் கிணற்றில் விழுந்துசா" என்று வைதனர் அடித்தனர். தாராமணி ரோசம் தாங்காமல் இரவில் குளத்தங்கரைக்குச் சென்று தண்ணீரில் குதிக்கக் காலெடுத்தாள். சங்கீத வித்வான் இவளைத் தடுத்து "அசடே கவலையேன்; வா

என்னுடன்" என்றான். தாராமணி உடனே அவனைத் தொடர்ந்தாள். ராமு அவளைக் கும்பகோணத்திற்கு இட்டுச் சென்றான். அக்காலம் பாலாமணி நாடகக் கம்பெனி அமோகமாக நடந்தது. அதில் இருவரும் சேர்ந்து நடித்தனர். தாராமணிக்கு ராமு முறையாகச் சங்கீதமும், பரத நாட்டியமும், நாடகக் கலையும் தமிழும், சமஸ்கிருதமும் பயிற்றினான். பத்து மாதங்கழித்துத் தாராமணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு மின்னற் கொடி என்று பெயரிட்டு இருவரும் செல்வமாய் வளர்த்தார்கள்.

மின்னல் கொடி மின்னற் கொடிதான், பொன்னிறம், முகத்தில் நல்ல களை. அழகு அழகு அப்படி அழகு; மின்னற் கொடி ஐந்து வயதில் ஆடல் பாடல் தமிழ்க் கல்வி மூன்றும் கற்கத் தொடங்கி பன்னிரண்டு வயதில் அருங்கலைச் செல்வியானாள். பிறகு ஆங்கிலமும் கற்றாள். இப்பெண்ணின் குணமும் அறிவும் பாலாமணியை வசீகரித்தன; அவளே இவள் படிப்பிற்கு வேண்டிய பணந்தந்தாள். தன் மகள் போலவே செல்வமாக வளர்த்தாள். இச்சமயம் தாராமணிக்கு ஒரு பாரிஸ்டர் சிநேகிதம் கிடைத்தது. அவர் சீமைப் பழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர். நமது நாட்டு நாகரிகம் எதுவாயினும் மூடக் கொள்கை என்பவர், அவருக்கு ஓமப் புகை வெறுப்பு; சுருட்டுப்புகை விருப்பு; இலை போட்டுப் புதிய உணவு உண்பது பழைய அநாகரிகம்; மேஜை போட்டு, தட்டுணவும் புட்டியுணவும் டப்பா உணவுகளும் வரவழைத் துண்பது நாகரிகம்; கோயிலுக்குப் போவதும் சாமி கும்பிடுவதும் மூடக் கொள்கை. குடிப்பதும் குச்சு நுழைவதும் கொண்டாட்டம். ஆனால் ஆள் திடமாயிருப்பார்; தமாஷ் பேர்வழி; தாராளமாகச் செலவிடுவார். அவர் இரண்டு மனைவிகளை மணந்து கொண்டார்.

ஒருவள் அவர் கொடுமையால் இறந்தாள்; மற்றொருவளை அநாகரிகம் என்று தள்ளி வைத்து மாதம் இருபது ரூபாய் ஜீவனாம்சம் அனுப்பி வந்தார். அதன் முக்கியமான காரணம் தாராமணி மேல் அவருக்கிருந்த மோகமே. மின்னற் கொடியிடம் இவருடைய பாசம் பலமாகப் பின்னிக் கொண்டது; அவளைச் சொந்த மகளைப்போல் வளர்த்தார் தன் வழியிலே தான். அவளுக்கு அவரே ஆங்கிலம் நன்றாகப் பயிற்றி அதையே பேசும்படி செய்தார். ஒருதரம் பாரிஸ்தர் ஒரு பிரிவி கௌன்ஸில் அப்பீலுக்காகச் சீமைக்குச் சென்றார்; மின்னற் கொடியையும் அழைத்துச் சென்றார். அங்கே அவளை ஒரு லண்டன் கலாசாலையில் சேர்த்து நன்றாகப் படிக்க வகை செய்தார். மின்னற் கொடியும் எளிதாகப் பரீட்சைகளில் தேறி உயர் பள்ளிக் கல்வி முடிந்ததும் கேம்ப்ரிட்ஜ் கிங்ஸ் காலேஜில் சேர்ந்து படித்தாள். ஆங்கில இலக்கியம் சங்கீதம், நடனம், சரித்திரம் ஆகிய நான்கு பாடங்களிலும் அவள் புலமை பெற்றாள். இதற்குள் அவள் அழகான பருவ மலராகிப் பல வண்டுகளை வசீகரித்தாள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இச்சமயம் ஊரில் அவள் தாய் இறந்து போனாள்; அத்துடன் பாரிஸ்தர் ஆதரவும் போய்விட்டது. மின்னற் கொடி இன்ஸ் — ஆப் — கோர்டில் பாரிஸ்தருக்காகப்

படித்த ஒரு வடநாட்டு வாலிபனை வசப்படுத்திக் கொண்டாள். அவன் உறவால் ஹிந்துஸ்தானி பாஷை கற்ருள். படிப்பு முடிந்ததும் வாலிபன் ஊருக்குத் திரும்பினுன்; அத்துடன் அவள் ஆசையும் ஒழிந்தது. மின்னற்கொடி ஓர் நடனக் கம்பெனியில் சேர்ந்தாள்; அதிலிருந்த ஒரு பாடகன் அவள் நேசத்தைப் பெற்ருன். நேசமும் பாசமும் ஒரு மாதமே; மின்னற்கொடி ஆட்களை அளந்து தான் நெருங்குவாள்; பெரிய புள்ளிகளையே நேசிப்பாள்; அவர்களிடம் பெற வேண்டியதெல்லாம் பெற்றுக் கொண்டு தந்திரமாக நழுவி இன்னெருவரிடம் செல்வாள். அவள் நடன கோஷ்டியுடன் ஐரோப்பாவைச் சுற்றினுள்; அதற்குள் எத்தனையோ நேசரைப் பெற்ருள்; கைவிட்டாள்.

அவளுக்கு நடனக் கலையில் நல்ல தேர்ச்சி யிருந்தது; அதில் மேன் மேலும் பயிற்சி பெற்ருள். ஐரோப்பிய நடனமும், பரத நாட்டியமும் கற்ற பிறகு மணிபுரி நடனம் பழக வேண்டுமென்றிருந்தது. அந்த நடனத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு வங்க வாலிபனை அவள் சிநேகம் செய்து கொண்டாள். அவனுடனே தான் அவள் கல்கத்தாவிற்கு வந்தாள். அங்கே மணிபுரி நடனத்தில் தேர்ச்சி பெற்று ஒரு நடனக் கோஷ்டியைத் தயாரித்தாள். பெயர் மின்னல் நடனக் கோஷ்டி Lighteing dance troop மின்னலுக்கு ஹிந்தி, பிஜிலி; பொது ஜனங்கள் மின்னல் கொடியை பிஜிலி என்றே அழைத்தனர்; அப்பெயரே நிலைத்து விட்டது. இனி நாமும் அவளை அப்படியே அழைப்போம். பிஜிலிக்குத் தன் கலையால் உலகையே வெல்லும் பேராசை பலமாகப் பற்றியது. பெரிய யோசனைகள் செய்தாள். உலகமே பிரமிக்கும்படி ஒரு கலை மாளிகை எழுப்ப ஆசைப் பட்டாள். அதற்காக ஏராளமான பணம் சேர்க்கத் தலைப் பட்டாள். ஆனல் அவள் கை தாராளம் பணம் தங்குவதில்லை. பண மோகமும் அதிகரித்தது. அவள் வட இந்தியாவைச் சுற்றிக் கலைப் புகழ் பெற்ருள். தில்லியில் அவள் நடனமாடுங் காலத்தில் ஒரு சம்பவம் நடந்தது.

31. மதன் பாபா

தில்லியின் பெயரைக் கேட்டாலே எத்தனையோ சரித்திர சம்பவங்கள் நம்முன் படலம் படலமாக ஓடும். பாரத நாட்டுச் சரித்திரத்தின் மூலஸ்தானம் அந்நகர். இராமன், தர்மன், அர்ச்சுனன், பிரிதிவிராஜன், அக்பர் முதல் ஏழாம் ஜார்ஜ் வரையில் எத்தனையோ மன்னர் அதை ஆண்டனர். கஜினி, கில்ஜி, லோடி, துக்ளக், முகல் ஆட்சிகளின் நிலயம் இதுவே; பிறகு மாராடியர் இங்கே ஹிந்து சாம்ராஜ்யம் நாட்டினர். உமாயூன் — அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கஜேபு, ஷா ஆலம், பஹதூர்ஷா முதலியோர் அமர்ந்த அரியணை முடிவில் ஹிந்துக்களுக்கே திரும்பி வந்து விட்டது; அச்சமயம் ஆங்கிலேயர் புகுந்து அதைக் கைப்பற்றிக் கொண்டனர். இவர்கள் ஆட்சி செய்த இடமெல்லாம் வெறும் காட்சி செய்யும் இடமாயிருக்கின்றன.

அசோகர் தூண் அங்கிருக்கிறது; ஆனுல் அதன் மேல் காலத்தின் சோகப் பாசி படர்ந்திருக்கிறது. குட்மினர் என்னும் உருக்குத் தூண் இருக்கிறது. ஆனுல் அதன் மேல் இந்தியக் கொடி ஆடவில்லை.

(தொடரும்)

சரித்திரக்காட்சி:

கண் கொள்ளாக் காட்சி!

வித்துவான் அ. கிருஷ்ணமூர்த்தி பி. ஓ. எல்

நல்ல ஒரு இரவு. பட்டப் பகல் போல வீசுகின்ற நிலாவொளி. நடுக்கடலில் பெரிய கப்பலின் உச்சியில் நின்று கொண்டு நாலு பக்கத்திலும் விரிந்து கிடக்கிற நீலக் கடல் மேல் நம் கண்களை ஓட்டியிருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். காட்சியின் இன்பம் எப்படி இருக்கும்? கண்ணுக்கு மட்டுமா? கருத்துக்கு எவ்வளவு இனிமை! அந்த மகிழ்ச்சியில் உடலிலேயே ஒரு புதுமை உண்டாகுமல்லவா? இனி, ஓங்கி உயர்ந்த மலை மேல் ஏறி, மாலைக் காலத்தில் சூரிய ஒளி மறைந்தும் மறையாமலும் இருக்கிற நேரத்தில், படுபாதாளமாகப் போகிற பள்ளத்தாக்கில் பட்டுக் கம்பளம் விரித்ததுபோல் பச்சைப் பசேரென்று விரிந்து கிடக்கும் வெட்ட வெளியின் அழகையும், செவ்வானத்தின் வனப்பையும் பார்த்தால் உள்ளத்தின் மகிழ்ச்சி அந்த மலை போலப் பூரிக்குமல்லவா?

ஆம்; முன்னே சொன்ன கடலின் காட்சியும், பின்னே சொன்ன மலையின் காட்சியும் கண்ணையும் கருத்தையும் அள்ளி விடக் கூடியவை. ஆனல், அதற்கு விரோதமாக இன்னென்றும் நினைப்போம். கப்பலிலிருந்து கடலில் தொப்பென்று விழுந்து விடுவதாக வைத்துக் கொள்வோம்; மலையுச்சியிலிருந்து தலைகீழாக விழுந்து, கீழே உருண்டு சரிந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். இப்பொழுது இன்பக்கடல் துன்பக்கடலாகிறது. இன்பத்தின் சிகரம், துன்பத்தின் சிகரமாக மாறுகிறது.

சரி; ஏன் இன்பத்தை யெல்லாம் இப்படித் துன்ப மயமாக மாற்றிக் கொள்ள வேண்டும்? இது குதர்க்கந்தானே? என்று சிலர் கேட்கலாம். கேட்டாலும், நான் சொன்னது இயற்கைக்கு மாறுபட்டது என்று யாராவது சொல்ல முடியுமா? கடலின் காட்சியையும், மலையின் மாண்பையும் கண்டு சொக்கிப் போய், அழகை அப்படியே வருணித்து விட்டால் மட்டும் போதாது. வேறு பல வழியிலும் அந்தக் காட்சிகளைச் சிந்தனை செய்ய வேண்டும். அப்பொழுது தான், நமது காட்சியறிவு உண்மையான ஒரு அறிவாக மாறுகிறது. இயற்கை எவ்வளவுதான் இன்ப மயமாக இருந்தாலும், சிலசமயம் அது பயங்கரமாக மாறி விடுகிறது. இயற்கையில் இனிமை மட்டுமல்ல; அந்த இனிமைக்குள் கொடுமையும் கலந்திருக்கிறது என்பதை யாரும் ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

இனி, இயற்கைக்கு அடுத்த படியாகவுள்ள விலங்குகளிடம் செல்வோம். குரங்குதான் மனி

தனுடைய மூதாதை என்பது 80 ஆண்டுகளுக்கு முன்பே முடிவாகி விட்டது. மனிதனோடு பழகி அறிவு வளர்ச்சி பெற்ற பூனை, நாய், மாடு, குதிரை முதலிய விலங்குகளில் யானையும் ஒன்று. யானையின் தோற்றத்தில் கடலின் காட்சியைக் காணலாம். மலையின் பெருமையையும் பார்க்கலாம். புலி, சிங்கம் முதலிய விலங்குகளின் வீரம், வலிமை, மானம் ஆகியவை யானையிடத்தில் உண்டு. ஆனால், அவற்றின் கொடுமை, பயங்கரம் ஆகியவை யானையிடத்தில் அவ்வளவாகக் கிடையாது. அவைகளைப் போல் இரத்த வெறி கிடையாது யானைக்கு; இறைச்சியும் தின்பதில்லை அது. இன்னும் சிறிது பார்ப்போம். சிம்மம் போல ஆசனம் பண்ணி சிம்மாசனம் ஏறுகிறார்கள் அரசர்கள். ஆனால் சிம்மத்தின் மேல் ஏறியதைச் சரித்திரத்தில் படித்ததுண்டா? (கதைகளில் கடவுள்களும், அவர் வார்சுகளும் ஏறுவதைத் தவிர) ஆனால், யானை மேல் நம் வீட்டுச் சிறுவர்களும் ஏறி ஆசை பார்க்கிறார்கள். சிறிது நேரம் அவர்கள் அரச குடும்பப் பிள்ளைகளாகவே ஆகிவிடுகிறார்கள். போகட்டும்; புலியும், சிம்மமும் ஓட்டுவார் உண்டா? புலிப்பாகர், சிம்மப் பாகர் என்று காதால் கேள்விப் பட்டதாவது உண்டா? இல்லை! ஆனால் யானைப் பாகர் என்பது யானையை அறிந்த எல்லாருக்கும் தெரியும். இவ்வாறு, சிம்மம் புலிகளை விட எவ்வளவோ மேம்பட்டு, தோற்றம், பெருமை, வலிமை, வீரம், மானம், தூய்மை, அறிவு, நாகரிகம் எல்லாமுடையது தான் யானை! ஆனால், அதற்கு மதம் பிடித்து விட்டால், அகப் பட்டவர் கதி என்னவது? ஒரு சின்ன மனிதனுக்குப் பைத்தியம் பிடித்தால், அவன் என்ன பாடு படுத்தி வைக்கிறான்?

என்ன வானாலும், இயற்கையிடத்தில் அகப்பட்டவரைப் போல, யானையிடத்தில் அகப் பட்டவரைக் கைவிட்டுவிட வேண்டியதில்லை. இயற்கைக்கு அறிவு கிடையாது. அதைத் திருத்த முடியாது. அகப்பட்டவர் தம் முடைய அறிவால் தான் தப்ப வேண்டும். யானைக்கோ அறிவுண்டு. அதன் அறிவைத் திருத்துவதோடு, தன்னுடைய அறிவாலும் மனிதன் தப்ப வழியுண்டு.

தற்காலத்தில் 15 வயதான பிறகு கூட, யானை பார்க்காத மாணவர், 20, 25 வயதான பிறகும் கடல் பார்க்காத மாணவர் (படத்தில் பார்த்திருப்பார்கள்! ஆகியவர்களில் ஒருவர் இருவரையாவது ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தவறாமல் பார்க்கலாம். அக்பர் சக்ரவர்த்தி இவர்களுக்குத் துணை செய்பவராக இருக்கலாம். ஏன்? சிறுவயதில் யானைகளோடு விளையாடினாலும், அவர் கடலைப் பார்த்தது முப்பதாவது வயதில் தானே! யானைகள் தற்காலத்தில் பெரிய கோயில்களிலும், சமஸ்தானங்களிலும் தவிர மற்ற இடங்களில் அடிக்கடிக் காணப் படுவதில்லை. (சர்க்கஸ் கூட மறைந்து போயிற்று) யானை என்றால், அது நம் மக்களுக்கு ஒரு அதிசயம்; ஒரு வேடிக்கையாகி விடுகிறது. பட்டிக் காட்டான் யானையைக் கண்டது போல் என்று சொல்வதில்லையா? இனி, அது பொருட் காட்சிச் சாலைக்கே போய்விடுமோ என்னவோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், பழங்காலத்தில், யானைகள் நாடெங்கும் மலிந்திருந்தன. காட்டில் யானைகளை வீரர்கள் பிடிப்பதும், அதற்குச் சைகைகள்

பழக்குவதும், யானை யேற்றம் செய்வதும், யானைப் போர் செய் வதும், யானையைப் பரிசு வழங்கு வதும், வீதி வலம் வருவதும், அதற்கு மதம் பிடிப்பதும், மதத்தை அடக்குவதுமாகச் சரித்திரத்திலும், கதைகளிலும் யானையைப் பற்றி எவ்வளவோ குறிப்புகளைப் படிக்கிறோம்; கேட் கிறோம்.

இங்கே, ஒரு சரித்திரக் குறிப் பைக் கவனிப்போம். ஒரு சோழ மன்னன்; அவன் பெயர் பெரு நற்கிள்ளி. அவன் தலையில் அணிந் திருந்த மணிமுடி மிகப் பெரியது. அருச்சுனன் மிகப் பெரிய "கிரீ டத்தை" அணிந்திருந்ததால், அவ னுக்குக் கிரீடி என்று ஒரு பெய ருண்டு. அதுபோல, நமது சோழ மன்னன் அணிந்திருந்த முடி மிகுந்த எடுப்பும், பெருமையும், உயரமும் உடையதாக இருந்த தால், முடித்தலைக் கோப் பெரு நற் கிள்ளி என்று அவன் பெயர் அடைமொழியோடு சிறப்பித்து வழங்கப் பட்டது.

சோழன், ஏதோ ஒரு காரண மாகச் சேர மன்னனைக் காண நினைத்துச் சேரனுடைய தலைநகர் கருவூருக்குச் செல்லப் புறப்பட் டான். அரசன் புறப்படுகிறான் என்றால், நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் யானையும், குதிரையும், வீரரும் அவனைச் சுற்றிப் போவது, பார்க்கப் பார்க் கத் தெவிட்டாத ஒரு காட்சி யல்லவா? அரசன் அமர்ந்திருப் பது பட்டத்து யானை. பட்டத்து யானை என்பது, யானைக்குரிய எல்லாவித இலக்கணங்களும் நிரம்பி யிருக்கும். பொன்னாலும் மணியாலும் அணிகலங்கள் பூட்டி அம்பாரி வைத்து, நெற்றிப் பட் டங் கட்டி, கொடி பறக்க விட்டு, மணியோசை அதிர, அது நகருவதைப் பார்த்தால், பாய் மரம் கட்டிய ஒரு கப்பல் ஓடுவதுபோல் இருக்கும். அதைச் சுற்றிக் குதிரைகள் செல்வது கடலில் அலைகள் புரளுவது போல இருக்கும். யானைகள் கும்பல் கும்பலாகப் போவது, மலைகள் நடைகற்பது போல விளங்கும். இவ்வாறு யானைகளோடும் குதிரைகளோடும், தேர்களில் வீரர்கள் நிறைய, கொட்டு முழக்கு ஆரவாரத்துடன், சோழன் புறப்பட்டுப் போ கிறான் கருவூருக்கு.

உறையூரிலிருந்து முன்பாகவே சேரனைக் காண வந்த ஒரு புலவ ரோடு, சேரமன்னன் அளவளாவி இருக்கிறான். அரண்மனையைச் சேர்ந்த ஒரு மாளிகையின் உச்சி மாடியில் சேரனும் புலவரும் நகர்க் காட்சியைப் பார்த்த வண் ணம் நிற்கிறார்கள். சோழன் வருவதால், சேரனுடைய தலை நகரம் எங்கும் அலங்கரிக்கப்பட்டு, அரசமரியாதைகளுடன் சோழனை வரவேற்க வேண்டிய எல்லா ஏற் பாடுகளும் நிரம்பி யிருந்தன.

ஒரு முடி வேந்தன், இன்னொரு முடிவேந்தனோடு ஒற்றுமையாக இருக்கிறான்; அதுவும் ஒருவன் ஊருக்கு இன்னொருவன் விருந் தாகச் செல்லுகிறான் என்றால், அந்தக் காட்சி, எல்லாத் தலை முறையிலும் எல்லாருக்கும் காணக் கிடைக்காது. குடி மக் களுக்கு இதைக் கண்டு களிப் பதில் அளவில்லாத ஆர்வம் என் பதைச் சொல்லவும் வேண்டுமா? ஒரு கவர்னரைப்பார்க்க நம் மக் கள் என்ன பாடு படுகிறார்கள்? சோழன் வருவதையும், நகர் அல ங்கரிப்பையும், விழாச் சிறைப்பை யுங் கண்டு களித்து மூலையும், சந் தும், முடுக்கும், வீதியும் தெருத்தெ ருவாக மக்கள் நடமாடுகிறார்கள்.

சோழன் நகருக்குள் நுழைகிற நேரம். சோழனைச் சேர்ந்த பரிவாரங்கள் சுற்றிலும் வருகின்றன. திடுமென்று எதிர் பாராத ஒரு மாறுதல். சோழன் ஏறிய யானை, திடு திடென்று நகருக்குள் வெகு வேகமாக நடந்தது; விரைந்தது; ஓடிற்று. மக்கள் தப்பித் திசை கெட்டு ஓடுகிறார்கள். வீட்டிற்குள் ஓடுவோர் சிலர். ஒதுங்கி நிற்பவர் சிலர். பதுங்க வழி தெரியாமல் நடுங்கிக் கிடப்பவர் சிலர். சிலர் அகப்பட்டு மடிந்தனர். மருண்டவர் சிலர்; சிலர் ஓடினர், விழுந்தனர், விழுந்து எழுந்தனர். கொடியும், மரமும், தோரணமும், கம்பமும் முதலாக எதிர்ப் பட்டவெல்லாம் மடமட வென்று முறிந்தன. என்ன நடந்தது? சோழன் ஏறிய பட்டத்து யானை மதங்கொண்டு விட்டது.



யானை பின் பக்கமாகத் திரும்பி ஓடினால், அதைத் தெரிவித்து மக்களை விலகச் சொல்வதற்கு வீரர்கள் யானையின் பின்னால், யானைப் பறைகளை அடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து சிலர் நெருஞ்சி முள்ளைப் போல, இரும்பாலான முள்ளுக் குண்டுகளை நெடுக வீசிக் கொண்டே ஓடுகிறார்கள். இப்படி வீசினால் அவைகளை மிதித்துத் தாண்டி, மதம் பிடித்த யானை நடக்கமுடியாது. என்ன செய்தும் பயனில்லை. வீரர், பாகர், பரிவாரம் எல்லாம் சிதறிப் போயின. பின்னால் வந்த படைகள் நகருக்கு வெளியிலேயே நிறுத்தப் பட்டன. சோழனால் யானையைக் கட்டுப் படுத்த முடியவில்லை. மக்கள் நடுங்கித் தவிக்கிறார்கள். யானை நின்றது. சுழன்றது, துதிக்கையால் அடித்தது. எட்டியதை யெல்லாம் தாவிப் பிடித்தது. தெருத் தெருவாகச் சுற்றி ஓடியது; அது கடல் நடுவே கப்பல், காற்றால் அடிபட்டுச் சுழலுவது போல் இருந்தது. அதன் மேல் இருந்த கொடி முறிந்தது. மணி அறுந்தது. சோழனுடைய உயிருக்கே உலை! ஒரு முடிவு! வரும் போலிருந்தது. (இவ்வளவு வீரர்கள் இருந்

தும் ஒரு யானையை அடக்க முடிய வில்லையா என்று நண்பர்கள் எண்ணலாம். தன்னுடைய ஊரிலேயே சில சமயம் இப்படி மதம் பிடித்த யானையை அரசன் அடக்க முடியாமல், அடக்குவாருக்குப் பரிசு கொடுப்பதாகப் பறையடித்துப், பிறகு, அடக்கினவனுக்குப் பட்டம், பதவி, பரிசுகள் (சில சமயம் திருமணமும் செய்து) கொடுத்ததாகப் பழைய சரித்திரம், கதைகளில் நண்பர்கள் படித்திருப்பார்கள். உண்மையில் சில சமயம் எதிர் பாராத விதமாக இப்படிக் குழப்பம் ஏற்பட்டுக் கட்டுக் கடங்காமல் போவதுண்டு.)

யானை சேரன் இருந்த மாளிகைப் பக்கமாக வந்தது. புலவர் அவன் பக்கத்தில் நிற்கிறாரே! அவர் சோழனுடைய உறையூரிலிருந்து வந்தவரல்லவா? தமது மன்னன் தவிப்பது அவருக்குப் பொறுக்குமா? அதுவும் ஒரே ஊரிலிருந்து சென்றவர், அயலான் நாட்டில், ஆபத்தில் அகப்பட்டால், ஒருவர்க் கொருவர் தம்மையறியாமல் உதவ நினைப்பது இயற்கைதானே! அந்த இருவர், "புலவரும், அரசனுமாக" இருந்தால்.........!

புலவர் மனம் பல விதத்தில் தடுமாறியது. விருந்தினன் போல் வந்து, சோழன் கருவூரை அழிக்க நினைத்தான் என்று சேர மன்னன் தப்பாக நினைத்து விட்டால்...... என்று நினைத்தார். இல்லை, யானை மதங்கொண்டு விட்டது என்பதைத் தூதுவர் மூலமாகவும், நேரில் பார்த்தும் சேரன் தெரிந்து கொண்டான் என்ற இன்னொரு நினைப்பு அவருக்கு ஆறுதல் செய்தது.

சோழனுடைய உயிர் பிழைக்க வேண்டுமே! அவன் வந்த இடத்தில் விபரீதம் நடந்து விட்டதே! காட்சியைக் காண்பது போய் மக்கள் மருண்டு வெருண்டு ஓடுகிறார்களே! ஐயோ! சோழன் ஒரு தீங்கு மில்லாமல் தப்பிப் பிழைத்துத் தனது நகருக்குப் போக வேண்டுமே! என்று கலங்குகிறார் புலவர். சேரன் சில கடுமையான நடவடிக்கைகளின் மேல் விரைந்து செல்லுகிறான். இருந்தாலும், புலவர் மனம் திகைக்கிறது. திகைத்துக் கலங்குகிறது. கலங்கி இரக்கத்தோடு ஒரு பாட்டும் பாடினார். பாட்டில் ஒரு முக்கியக் குறிப்பை மட்டும் சுட்டிக் காட்டி விடுகிறேன். தடுக்க முடியாத ஒரு துன்பம் என்றால், உடனே அந்தக் கடவுள் இந்தக் கடவுள் என்று கடவுளுக்குப் பலவிதப் பெயரைச் சொல்லி, அவர் காக்க வேண்டும்; அருள வேண்டும் என்று முறையிடுவது இன்றும் வழக்கம். ஆனால் புலவர் அப்படி ஒன்றும் வேண்ட வில்லை. இன்னும் இது போல், எவ்வளவோ துன்பமும் துயரமும் பின்னிக் கிடக்கிற சமயங்களிலும் கடவுளை உதவிக்கு அழைத்ததாகச் சங்க கால நிகழ்ச்சிகளில் காணப்பட வில்லை. சங்கப் பாடல்க்ளில் பல பெரும் பாட்டுகள் இவ்வாறுள்ளன.

நமது புலவ்ரும், "எமது சோழன், ஒரு தீங்குமில்லாமல் தனது நாட்டுக்குப் போவானாக" "நோயிலனாகிப் பெயர்கதில் அம்ம" என்று ஆற்றாமையோடு கூறுகிறார். ஆற்றாமை தீர்ந்து அரசன் உறுதியாகப் பிழைத்திருக்கவே வேண்டும்.

★

சிறுகதை:

புன்னகை

கமலா பத்மனாபன்

வனிதா பரிமாறிக் கொண்டிருந்தாள். கேசவனும் கல்யாணமும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். வனிதா உள்ளிருந்து, நிமிஷத்திற்கு கொருதரம், பாத்திரத்தில் ஏதாவதொரு உணவு வகையை எடுத்துக் கொண்டு வந்து இவர்கள் சாப்பிடும் கலத்தின் கீழ் குனியும் பொழுதெல்லாம் கேசவனுடைய கண்கள் அவ்வெழில் மங்கையின் வதனத்தை விழுங்கி விடுவன போல் நோக்கும். வனிதா குனிந்த தலை நிமிராமல் கொண்டு வந்த பதார்த்தத்தை இலையில் போட்டு வெகு அடக்க வொடுக்கமாய் திரும்பி சமயலறைக்குள் புகுந்து விடுவாள். ஒரே ஒரு தடவை மாத்திரம் வனிதாவின் கண்கள், அகஸ்மாத்தாய், கேசவனுடைய ஊடுருவிப் பார்க்கும் நேத்திரங்களைச் சந்தித்து விட்டன. உடனே இருவரும் ஏதோ மகத்தான குற்றத்தை செய்து விட்டவர்கள் போல், தமது செய்கைக்கு வெட்கி, சரேலென்று வேறு புறம் பார்வையை திருப்பினர். ஒரு வழியாய் சாப்பாடு முடிந்தது. எழுந்து கையலம்பிக் கொண்டு நண்பர்கள் இருவரும் முன் புறத்துக் கூடத்திற்கு வந்தனர். கூடத்திற்கு வருவதற்கு முன்பு கல்யாணம் மட்டும் சற்று பின் தங்கி, தன் சகோதரியைப் பார்த்து, "வனிதா, நீயும் சாப்பிட்டு விட்டு, சீக்கிரம் சமயலறை வேலையை முடித்துக் கொண்டு வருகிறாயா? என் சிநேகிதர் கேசவனுக்கு சங்கீதம் என்றால் உயிர். சிறிது நேரம் நீ வீணைவாசித்தால் நாங்களிருவரும் கேட்டு மகிழ்வோம். என்ன?" என்றான்.

வனிதா சமையல் அறை வாசற்படியின் மேல் நின்றபடி லேசாக புன்னகை செய்து அப்படியே ஆகட்டும் என்பதற்கடையாளமாக தன் தலையை அசைத்து விட்டு சாப்பிடப் போனாள்.

கல்யாணம் கேசவனை பரிச்சயம் செய்து கொண்டு இன்னும் நான்கைந்து மாதங்கள் கூட ஆகவில்லை. ஆனால் இவ்வளவு குறுகிய கால அளவிலேயே இருவர்களுடைய நட்பும் வெகு உறுதியாகி விட்டது. கல்யாணம் வக்கீல் தொழில் செய்து வந்தான். நல்ல வருமானம் உண்டு. பத்திரிகை உலகிலும் அவனுக்கு நல்ல பெயர். சிறந்த எழுத்தாளர்களில் ஒருவன்என்ற பட்டத்தையும்பெற்றிருந்தான். கேசவன் ஒரு உயர்தர தமிழ் பத்திரிகையின் உதவி ஆசிரியன். சாதாரண சம்பளம் தான். ஆனால் அவன் ஒருவனுடைய ஜீவனத்திற்கு அதுவே போதும். கல்யாணத்தின் அரிய கதைகளும் கட்டுரைகளும் மேற்சொன்ன மாதப் பத்திரிகையில் அடிக்கடி வெளி வருவதுண்டு. ஆரம்பத்தில் பத்திரிகாசிரியன், விஷயதானம் செய்பவன் என்ற முறையில் கடிதப் போக்குவரத்து மூலம் தொடர்பு வைத்துக்கொண்டிருந்த இவ்விருவரும், ஒரே ஊரிலேயே வசித்து வந்தபடியால், நேரிலேயும் சந்தித்துப் பேசத் தொடங்கினார்கள். பிறகு சில மாதங்களுக் கெல்லாம் பரஸ்பர விசுவாஸமும் நட்பும் அதிகமாகி

உண்மைச் சிநேகிதர்களாகி விட்டார்கள்.

அன்று வருஷப்பிறப்பு ஆனபடியால் கல்யாணம் கேசவனை தனது இல்லத்திற்கு சாப்பிட வரும்படி அழைத்திருந்தான். கேசவன் ஒண்டிக்கட்டை. ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு அங்கேயே ஒரு அரையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதில் வசித்து வந்தான். கல்யாணத்தின் அன்பு நிறைந்த அழைப்பிற்கிணங்கி பண்டிகைக்கு அவன் வீட்டில் சாப்பிட வந்திருந்தான். சுவை மிகுந்த உணவை உண்ட அவன் வயிறு அச்சமயம் சந்துஷ்டியினால் குளிர்ந்திருந்தது. அது மாத்திரமா? அன்றென்னவோ, என்றைக்குமில்லாதபடி, அவனுடைய உள்ளத்தில் கூட ஒருவித உத்சாகமும் உவகையும் நிரம்பி 'ஜில்' லென்று இருப்பதை அவன் உணராமலில்லை.

கூடத்தில் போடப் பட்டிருந்த சோபாவில் உட்கார்ந்து நண்பர்களிருவரும் உலக விஷயங்களைப் பேசிக் கொண்டே, வெற்றிலை போட்டுக் கொண்டார்கள். வனிதாவும் தன் வேலைகளை முடித்துக் கொண்டு வந்து, கூடத்தை ஒட்டினாற் போலிருந்த அறைக்குள் சென்று வாசற்படியில் தொங்கிய திரையை சரியாய் இழுத்து விட்டாள். ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் அந்த அறையிலிருந்து வீணையின் இனிமையான நாதம் கணீரென்று கிளம்பியது. முதலில்ஸ்ரீராகத்தை சிறிது ஆலாபனம் செய்து விட்டு ஒரு கீர்த்தனத்தை வெகு அற்புதமாய் வாசித்தாள் வனிதா. கேசவன் ஏதோ மந்திர சக்தியினால் கட்டுண்டவன் போல் வனிதாவின் வீணா கானத்தை ஆர்வத்துடன் ரசித்த வண்ணம் அசைவற்று தனது ஆசனத்தில் வீற்றிருந்தான்.

அந்தப் பாட்டு முடிந்ததும் தன் நண்பனைப் பார்த்து, "அபாரம்! எவ்வளவு நேர்த்தியாய் வாசிக்கிறார் உன் சகோதரி! ஒரு கைதேர்ந்த வைணிகனுக்குரிய சிறந்த அம்சங்கள் எல்லாம் குறைவில்லாமல் கூடியிருக்கின்றனவே அவருடைய வாசிப்பில்! இன்னொரு விசேஷம் கூட நான் கவனித்தேன். அகில இந்திய ரேடியோவில் சென்ற நாலைந்து வருஷங்களாக ஒரு பெண்மணி அவ்வப்பொழுது வீணைக் கச்சேரி செய்கிறார். வெகு அற்புதமாய் வாசிக்கிறார். அவருடைய பெயரையோ அவர் யார் என்பதையோ இது வரையில் யாருமே அறிந்ததில்லையாம். 'இன்றைக் கச்சேரியில் ஒரு சகோதரி வீணை வாசிப்பார்' என்று மாத்திரமே அவர் வாசிக்கும் பொழுதெல்லாம் அன்னௌன்ஸ் செய்யப் படுகிறதே தவிர அவர் பெயரை ரேடியோ நிலயத்தார் வெளியிட்டதே இல்லை. இப்பொழுது உன் சகோதரியின் வீணா கானத்தைக் கேட்டதில் அந்த மர்ம சகோதரியின் வாசிப்பில் உள்ள உயர்தர பாணி அப்படியே உரித்து வைத்திரு[ப்]பதை அறிந்தேன்" என்று புகழ்ந்து பாராட்டினான் கேசவ[ன்].

கல்யாணத்தின் முகத்தில் தன் நண்பன் வார்த்தையைக் கேட்டவுடன் பெருமிதம் பொங்கிற்று. மகிழ்ச்சி துள்ளும் குரலில், "அந்த 'ஒரு சகோதரி' என் சொந்த சகோதரி வனிதா தான். வேறு யாருமில்லை. என்னுடைய உண்மைச் சிநேகிதனாயிற்றே என்று உன்னிடம் இந்த ரகஸ்யத்தை வெளியிட்டேன். வனிதாவுக்குத் தெரிந்தால் என்னைக் கோபிப்பாள்" என்றான்.

"நான் அப்படித்தான் இருக்க வேண்டுமென்று நினைத்தேன். என் யூகம் சரியாகி விட்டது. உன் சகோதரிக்கு சிரமம் இல்லா விட்டால் இன்னொரு பாட்டு வாசிக்கச் சொல்லேன்" என்றான் கேசவன்.

"வனிதா, இன்னொரு பாட்டு வாசியேன் அம்மா" என்று உரக்கச் சொன்னான் கல்யாணம். அப்படியே அவளும் வாசித்தாள். நாட்டைக் குறிஞ்சி ராகத்தை விஸ்தாரம் செய்ய ஆரம்பித்தாள். மிகுந்த சுவாரசியத்துடன் ரசித்து ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்த கேசவன் கல்யாணத்தின் பக்கம் திரும்பி, "இந்த இடத்தில் வாயினால் பாடிக் கொண்டே வாசித்தால் நன்றாய்ச் சோபிக்கும். உன் சகோதரி வீணையுடன் பாடுவதில்லையா?" என்றான்.

கல்யாணத்தின் முகம் சட்டென்று வாட்ட மடைந்தது. அவன் கண்களில் மளமள வென்று கண்ணீர் பெருகியது. நீண்டதோர் பெரு மூச்செறிந்து துக்கத்துடன், "வனிதா ஊமை" என்று பதிலளித்தான்.

"ஹா! என்ன சொன்னாய்? உன் சகோதரி ஊமையா? நிஜமாகவா? நிஜமா!" என்று வியப்போடும் பதட்டத்தோடும் கல்யாணத்தின் தோளைப் பற்றி பலமாய் குலுக்கிக் கொண்டே வினவினான் கேசவன்.

"நிஜம் தான் கேசவா! இதில் பொய் என்ன? அவள் ஒரு ஊமை தான். ஆனால் பிறவி ஊமையல்ல. நடுவாந்திரத்தில் ஏற்பட்ட ஊமை தான் அது. அவளுக்கு பத்து வயதில் ஒரு பயங்கரமான வலிப்பு வியாதி வந்தது. அந்த சமயத்தில் நாக்கு இழுத்துக் கொண்டு பேசும் சக்தியையே பூர்ணமாய் இழந்து விட்டாள். நாங்களும் பார்க்காத வைத்தியர்கள் இல்லை, செய்யாத சிகிச்சைகள் இல்லை! பலன் பூஜ்யந்தான்!" என்றான். அவன் நெஞ்சு தாங்க வொண்ணா துயரத்தினால் அடைத்துக் கொண்டது.

பிறகு சிறிது நேரம் நண்பர்கள் இருவரும் பேச்சு வார்த்தை யில்லாமல் தத்தம் யோசனைகளில் ஈடு பட்டவராய் உட்கார்ந்திருந்தனர். வீணையின் இசை நின்றவுடன் இருவரும் ஒரே சமயத்தில் சிந்தனைத் துயிலிலிருந்து விழிப்படைந்தவர் போல் நிமிர்ந்து உட்கார்ந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கேசவன் எழுந்து நின்று கல்யாணத்தின் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு "கல்யாண், மாடி அறைக்குப் போவோமா? உன்னோடு சில விஷயங்கள் அந்தரங்கமாய் பேச வேண்டியிருக்கிறது" என்றான்.

"போகலாம் வா" என்று விடையளித்து கல்யாணம் கேசவனை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான்.

"கல்யாணம், உன் சகோதரிக்கு விவாகம் ஆகவில்லையா? நான் இப்படிக் கேட்கிறேனேயென்று என் மேல் தப்பபிப்பிராயப் படாதே. காரணம் இருக்கிறபடியால் நான் கேட்கிறேன்" என்றான் கேசவன்.

"இல்லையப்பா! வனிதா ஒரு கன்னிகை தான். அவள் சரித்திரமே ரொம்ப துயரகரமானது. உனக்கு கேட்க விருப்பம் இருந்தால் கூறுகிறேன்" என்றான் வருத்தத்தோடு கல்யாணம்.

"சொல்" என்றான் கேசவன் ஹீன ஸ்வரத்தில்.

டைய பெற்ருேர்களும் பிரயாணம் செய்து சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கல்யாணம் சென்னையில் நடக்கப் போவதாக இருந்தபடியால் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னரே புறப்பட்டு சென்னைக்குப் பிரயாணமாஞர்கள். அந்தக் கோர ரயில் விபத்தில் சிக்கி உயிரைப் பறி கொடுத்த நூற்றுக் கணக்கான ஜனங்களில் அவர்களுடைய குடும்பமும் ஒன்று. இந்தத் தகவல் எங்களுக்குப் பிறகு தான் நிச்சயமாய் தெரிய வந்தது. கல்யாணம் நின்று போயிற்று! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது வனிதாவின் விஷயத்தில் நன்ருய் பலித்து விட்டது.

"எங்களுக் கெல்லாம் இந்த அதிர்ச்சியை எளிதில் மறக்க முடியவில்லை. பேதைப் பெண் வனிதாவின் துக்கமும் ஏக்கமும் அளவில் அடங்காமலிருந்தது. அன்று முதல் இடிவிழுந்தவள் போல் ஆகி உத்சாகம் சிறிதும் இல்லாமல் காலத்தை ஓட்டி வந்தாள். மறு வருஷம் நாங்கள் எதிர் பாராமலே அவளுக்கு இரண்டொரு தகுதியான இடங்களிலிருந்து நல்ல வரன்கள் வந்தன. வனிதா ஒரே பிடிவாதமாய் தனக்கு விவாகமே வேண்டா மென்றும் தனது வாழ்நாளை கன்னிகையாகவே கழிக்கத் தீர்மானித்து விட்டதாயும் எங்களிடம் தெரிவித்தாள். நாங்களும் அதற்கு மேல் அவளை பலவந்தம் செய்யவில்லை. சிறு வயதிலிருந்தே அவளுக்கு சங்கீதக் கலையில் தெளிந்த ஞானமும் கரை கடந்த ஆர்வமும் இருந்து வந்தபடியால் ஒரு பிரபல வீணை வித்வானிடம் சிக்ஷை சொல்லி வைத்தோம். வெகு சீக்கிரத்திலேயே வீணை வாசிப்பதில் கை தேர்ந்தவளாகி விட்டாள். ஆனல் என்ன பிரயோஜனம்? குடத்திற்குள் ஏற்றிய விளக்குப் போல் தான் இருந்து வருகிறது இன்று வரை அவள் கால ஜோதி! விளம்பரத்திலும், புகழ் அடைவதிலும் அவளுக்கு ஒரு நாளும் விருப்பம் கிடையாது. இதற்கிடையில் எங்கள் பெற்ருேர்கள் காலமாயினர்.

அப்பொழுது முதல் என் அருமைச் சகோதரியை மனம் கோணுமல் நடத்தி பாதுகாக்கும் பொறுப்பு என்மேல் விழுந்து விட்டது. இப்பொழுது வனிதாவுக்கு இருபத்தெட்டு வயதாகிறது. கடந்த நான்கைந்து வருஷமாக என்னுடைய பலவந்தத்தின் பேரில் அகில இந்திய ரேடியோவுக்கு எப்பொழுதாவது சென்று வீணை வாசித்து விட்டு வருகிருள். அதுவும் வெளிப் படையாகச் செய்ய இவளுக்கு இஷ்டமில்லை. மொத்தத்தில் வனிதாவைப் போன்ற பொறுமைசாலி வேறு யாருமே இருக்கமாட்டார்களென்று எனக்குத் தோன்றுகிறது. தன் மனதில் இருக்கும் தீராத வேதனையை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு என்னை ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து கொண்டு கிரகஸ்தனுய் லக்ஷணமாய் வாழும்படி தூண்டிக் கொண்டே யிருக்கிருள். ஆனல் எனக்குத் தான் இந்த எண்ணம் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. ஒரே உதிரத்தில் ஜனித்த உடன் பிறந்த தங்கை, இளம் மங்கை, வாழ்க்கையில் சிறிதும் உத்சாகமோ பற்றுதலோ இல்லாமல் யோகினியைப் போல் வைராக்கியம் கொண்டு காலம் தள்ளி வரும் பொழுது எனக்கு மாத்திரம் கல்யாணமும் காட்சியும் என்ன வேண்டிக் கிடக்கிறது என்ற ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. நானும் ஆயுள் முழு

வதும் பிரும்மசாரியாகவே இருந்து விட உறுதி கொண்டு விட்டேன்'' என்று முடித்தான்.

இது வரையில் ஒரு வார்த்தை விடாமல் கல்யாணம் கூறிய வரலாற்றை யெல்லாம் கவனமாய் கேட்டுக் கொண்டு வந்த கேசவனின் நயனங்களில் கண்ணீர் தளும்பி கன்னங்களில் வழிந்து ஓடின. தழதழத்த குரலில், ''கல்யாண், உன் சகோதரிக்கு நடக்க வேண்டி இருந்த அந்தக் கல்யாணம் அகஸ்மாத்தாய் நின்று போன பிறகு வேறு ஒருவரையும் விவாகம் செய்து கொள்ள மாட்டேன் என்று அவள் பிடிவாதமாய் மறுத்ததின் காரணம் என்னவோ?'' என்று கேட்டான்.

''நாங்கள் யாவரும் அப்பொழுது அவளை அது விஷயமாகக் கேட்கவில்லை. எங்கள் பெற்ருேர்கள் இறந்த பிறகு ஒரு நாள் வனிதா தன் உள்ளத்தை என்னிடம் பகிரங்கமாய் திறந்து காட்டினுள். பேச்சுத் தான் வராதே! எழுத்து மூலமாக தன் மனதில் இவ்வளவு நாட்களாக அடக்கி வைத்திருந்த அந்த ரகஸ்யத்தை என்னிடம் வெளியிட்டாள். அதாவது ரயில் விபத்தில் அகப்பட்டு மாண்டு போன அந்தப் பிள்ளையைத் தான் கண்ணுல் பார்த்திரா விட்டாலுங் கூட அப்பாவின் வர்ணனைகளி லிருந்து தான் அந்த நிமிஷமே அப்புருஷனுக்கு மானசீகமாய் மாலையிட்டு மகிழ்ந்ததாகவும் கூறி கண்ணீர் விட்டழுதாள். இன்றைக்கும் அவள் தான் மானசீகமாய் வரித்த மணமகனை மறக்கவில்லை என்று நான் நிச்சயமாய் கூறுவேன்.''

''கல்யாண், என்னுடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றி அறிய, நீ என்னை சிநேகிதம் செய்து கொண்ட நாளிலிருந்து ஆவலாக இருந்து வருவதை நான் நன்கு அறிவேன். ஆனுல் அதை நான் உன்னிடம் இவ்வளவு நாட்களாக தெரிவிக்காமல் மழுப்பிக் கொண்டே வந்திருக்கிறேன். இன்றைக்கு உன் அருமை சகோதரியின் பரிதாபகரமான சரித்திரத்தைக் கேட்ட பிறகு என்னுடைய வாழ்க்கை வரலாற்றை மறைக்க வேண்டிய அவசியமே இல்லை. மறைப்பதும் சுத்த பிசகாகும். என் சரித்திரத்தின் முன் பாகம் எல்லாம் தான் உனக்குத் தெரியுமே! பிற்பகுதியை மட்டும் ....''

''என்ன! உன் சரித்திரத்தின் முற்பகுதி எனக்குத் தெரியுமா! எப்பொழுது எனக்குச் சொன்ஞய் அப்பா! ஒரேயடியாய் புளுகுகிருயே!'' என்ருன் கல்யாணம் ஆச்சரியத்துடன்.

''தெரியும் அப்பா தெரியும்! பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு உன் தங்கைக்காக நிச்சயிக்கப் பட்டு, அந்த கோர ரயில் விபத்தில் சிக்கி, பெற்ருேர்களை பலி கொடுத்து விட்டு, தான் மட்டும் உயிர் தப்பிய மகா புருஷன் நான் தாண்டாப்பா நான் தான்! விவரமாகச் சொல்கிறேன். குறுக்கிடாமல் கேள். உன் தங்கையை என் பெற்ருேர்கள் வந்து பார்த்து விட்டு ஒப்பியதின் மேல் நானும் அந்த விவாகத்திற்கு ஒத்துக் கொண்டேன். ஆனுல் பெண் ஊமை என்ற விஷயத்தை மட்டும் என் பெற்ருேர்கள் கடைசி வரைக்கும் என்னிடம் சொல்லவே இல்லை. அன்று இரவு நாங்கள் சென்னைக்கு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொழுது என் தகப்பனுர் மெதுவாய் அந்த

தமிழ்நாடு ஆவண

பிரஸ்தாபத்தை எடுத்தார். 'கேசவா, உன்னிடம் ஒரு முக்கிய விஷயத்தை இது வரைக்கும் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தேன். இனிமேலும் சொல்லாமலிருக்க என் மனசு கேட்கவில்லை. உனக்கு வாழ்க்கைப் படப் போகும் பெண், கல்வி, சங்கீதம், குணம், குலம், செல்வம், ரூபம் இவை எல்லாவற்றிலும் மேம்பட்டவளாகத்தான் விளங்குகிறாள். ஆனால் அவள் ஒரு ஊமை! நீ.........' அவர் இன்னும் ஏதோ கூறும் மட்டும் நான் பொறுத்திருக்கவில்லை. ஆத்திரத்தோடு என் இடத்தை விட்டு எழுந்து நின்று, அது ஒரு பொது ஸ்தலம் என்பதையும் மறந்து "என்ன! எனக்கு மனைவியாகப் போகிறவள் ஒரு ஊமையா?" என்று கூவினேன். எங்களுடன் அந்த கம்பார்ட்மெண்டில் உட்கார்ந்திருந்த பிரயாணிகள் எல்லோரும் எங்கள் பக்கம் திரும்பி என்னையும் என் பிதாவையும் வியப்புடன் மாறி மாறிப் பார்த்தனர். அந்த சமயத்தில் ரயில் வண்டி இருளைக் கிழித்துக் கொண்டு ஐம்பது மைல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. எனக்கு ஏதோ சமாதானம் கூற விரும்பியவர் போல் என் தந்தை வாயைத் திறந்தார். அதே வேளையில் எதிர்பாராதது ஒரு கணத்தில் நடந்தேறி விட்டது! பூகம்பம் தான் ஏற்பட்டு விட்டதோ என்று நாங்கள் யாவரும் அஞ்சி நடுங்கும்படி அவ்வளவு பயங்கர சப்தத்துடன் ரயில் வண்டி கவிழ்ந்து மண்ணோடு உருண்டு விட்டது!

"அந்த வண்டியில் உட்கார்ந்திருந்த இருபது பிரயாணிகளில் ஒருவனைத் தவிர பாக்கி அனைவரும் நசுங்கி பிண்டமாகி உயிரை இழந்தனர். எனக்கு மண்டையில் நல்ல அடி. ஆயுசு கெட்டியாக இருந்தபடியால் எப்படியோ பிழைத்து விட்டேன். மாயவரம் ஆஸ்பத்திரியில் சில தினங்கள் இருந்து சிகிச்சை பெற்று வந்தேன். மண்டைக் காயம் ஆறின பிறகும் கூட எனக்கு எங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிப் போக வேண்டுமென்ற விருப்பமே ஏற்படவில்லை. தந்தை தாயைப் பறிகொடுத்த சோகம் ஒருபுறம் என்னை வதைத்தாலும், அந்த ஊமைப் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாக அடையவிருந்த மாபெரும் விபத்திலிருந்து இந்த மட்டும் தப்பினேனே என்ற திருப்தியும் நிம்மதியும் கூட ஒருபுறம் இருந்தது. இப்பொழுதே தூரதேசம் போய்விட்டால், பெண் வீட்டார் நானும் அந்த ரயில் விபத்தில் அகப்பட்டு உயிர் துறந்து விட்டதாகவே எண்ணி விடுவார்கள் என்ற யோசனையுடன் யாரும் அறியாமல் வட இந்தியாவுக்குப் போய்விட்டேன். உத்திர தேசம் போய்ச் சேர்ந்த சில தினங்களுக்கெல்லாம் என் கைவசம் இருந்த சொற்ப பணமும் செலவழிந்து போயிற்று. அதிர்ஷ்ட வசமாய், நான் காலேஜில் பீ. ஏ. வகுப்பில் படித்து வந்த காலத்தில் எங்கள் காலேஜில் ஆசிரியராக வேலை பார்த்து வந்த ஒரு குஜராத்தி பிரபுவை சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் என்னை தம்முடைய பழைய மாணவன் என்று உடனே அடையாளம் கண்டு கொண்டு பிரியமுடன் என்னைப் பற்றி விசாரித்தார். நான் ரயில் விபத்திலிருந்து உயிர் தப்பியதையும், பெற்றோர்களை இழந்ததையும் பற்றி அவருக்குத் தெரிவிக்கவில்லை. வேலையில்லாமல் திண்டாடுவதை மட்டும் கூறினேன். உடனே அவர் என்நிலைமைக்கு இரங்கி ஜான்ஸியில் வசித்து

வந்த ஒரு ஜமீன்தாரிடம் சிபார்சு கடிதத்துடன் என்னை அனுப்பினர். அந்த ஜமீன்தாரும் என்னை அன்போடு வரவேற்று தம்முடைய இளம் குமாரர்களுக்கு கல்வி போதிக்கும்படி என்னை நியமித்துக் கொண்டார். மாதம் அறுபது ரூபாய் சம்பளத்தைத் தவிர சாப்பாடு, இடவசதி எல்லாம் கிடைத்தபடியால் நான் வெகு சௌகரியமாகவே காலம் கழித்து வந்தேன். எனக்கு ஆதிமுதல் தமிழிலும் இலக்கிய வளர்ச்சியிலும் மிகுந்த ஆசையும் ஆர்வமும் உண்டு. ஒழிவு நேரங்களில் உயர்தர தமிழ் இலக்கியங்களை வாசித்து எனது தமிழ் அறிவையும் இலக்கிய ருசியையும் விருத்தி செய்து கொண்டேன். சமயம் வாய்த்த பொழுதெல்லாம் பத்திரிகைகள் மூலம் இலக்கியத் தொண்டும் புரிந்து வந்தேன். இப்படியாக கிட்டத் தட்ட பத்து வருஷ காலம் வெகு சுகமாய் கடத்திவிட்டேன். நான் கல்வி புகட்டி வந்த ஜமீந்தாரின் புதல்வர்களுக்குத் தக்க வயது வந்து விட்டபடியால் அவர்கள் மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றனர். இதற்கிடையில் பெரிய ஜமீந்தாரும் காலமாகி விட்டார். நானும் ஜான்ஸியை விட்டுக் கிளம்பி சென்னை வந்து சேர்ந்தேன். இரண்டு வருஷ காலம் இந்த ஊரில் நிரந்தரமான வேலை ஒன்றுமில்லாமல் சுற்றியலைந்து கொண்டிருந்தேன். பிறகு சென்ற ஆறுமாசமாய்த் தான் இந்தப் பத்திரிகாலயத்தில் உதவி ஆசிரியனாக வேலைக்கமர்ந்தேன். உன்னுடைய சிறந்த கதைகள், கட்டுரைகள் மூலம் உன் நட்பையும் சம்பாதித்துக் கொண்டேன். இன்னொரு அதிசயம் கேள், கல்யாண்! எனக்குக் கிட்டத் தட்ட இப்பொழுது முப்பத்தி நான்கு வயதாகியும் கூட இன்று உன் சகோதரியைப் பார்க்கும் பரியந்தம் எனக்கு ஒரு நாள் கூட விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமோ காதல் உணர்ச்சியோ ஏற்பட்டதே இல்லை'' என்று தன் வரலாற்றைச் சொல்லி முடித்தான் கேசவன்.

கல்யாணம் ஒரே பிரமிப்பில் மூழ்கியவனாய்த் திறந்த வாய் மூடாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு "இதென்ன ஆச்சரியம்! நீ கூறியதெல்லாம் ஒரு கற்பனைக் கதை போல் அல்லவா தோன்றுகிறது!'' என்றான் அளவிலா வியப்புடன்.

"ஆம், கல்யாணம். சில சமயங்களில், உண்மை நிகழ்ச்சிகள் கற்பனைக் கதைகளை விட பன்மடங்கு சுவாரசியமாயும் நம்ப முடியாமலும் அமைந்து விடுகிறது. அது கிடக்கட்டும். இனிமேல் நாம் மேலே நடக்க வேண்டிய காரியத்தை கவனிக்க வேண்டும். உன் முகபாவத்திலிருந்து உனக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை போல் தோன்றுகிறது. பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு உன் தந்தை என்னைப் பார்க்க வந்திருந்த பொழுது, எனக்கு வைர மோதிரம் பண்ணப் போவதாயும் அதற்கு என் கைவிரல் அளவு வேண்டுமென்றும் கேட்டார். நான் உடனே என் கையில் போட்டுக் கொண்டிருந்த ஒரு ரோல்ட் கோல்ட் மோதிரத்தை அவரிடம் கழற்றிக் கொடுத்தேன். அது இப்பொழுது உங்களிடம் இருக்கிறதா?'' என்று ஆவலோடு கேட்டான் கேசவன்.

"அதைத் தான் வனிதா அன்று முதல் கையை விட்டு ஒரு நிமிஷம் கூட கழற்றாமல் போட்டுக் கொண்டிருக்கிறாளே!''

"இதைவிட வேறு அத்தாட்சி வேண்டுமா அப்பா! நீ என் வார்த்தையை நம்பாமல் இல்லை! ஆனால் ஒரேயடியாய் திகைத்துப் போயிருக்கிறாய் அல்லவா? கல்யாண், எழு, இந்த உண்மையை உன் சகோதரியிடம் கூறி அவளுடைய அபிப்பிராயத்தை கேட்டுக் கொண்டு வந்து என்னிடம் சொல்ல வேண்டியது உன் பொறுப்பு, ஊம். எழுந்திரு" என்று கல்யாணத்தைத் தூண்டினான் கேசவன்.

"எதற்கு அவளுடைய அபிப்ராயம்? நீ என்ன சொல்லுகிறாய்?" என்று திருதிருவென் விழித்தபடி கேட்டான் கல்யாணம்.

"என்ன, பெரிய பைத்தியமாக இருக்கிறாயே நீ! பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு உன் தங்கையை நான் ஊமை என்ற காரணத்தினால் மணக்க இஷ்டப் படாமல், ரயில் விபத்தி விருந்து தெய்வாதீனமாய் உயிர் பிழைத்திருந்தும், உங்கள் வீட்டிற்கு வரத்தயங்கி தூர தேசம் போய்விட்டேன். ஆனால் அப்பொழுது எனது அகக் கண்கள் திறக்கவில்லை. இப்பொழுது அவை விசாலமாய் திறந்திருக்கின்றன. உன் சகோதரி இப்பொழுதும் பேச சக்தியற்ற ஒரு ஊமை தான். ஆயினும் அவளுடைய தூய இதயம் ஊமை அல்ல என்பதை நன்கு அறிந்து கொண்டேன். அன்று மானசிகமாய் மாலையிட்ட என்னை அவள் இன்று நிராகரிக்க மாட்டாள் என்றே உறுதியாய் நம்புகிறேன்" என்றான் உணர்ச்சி பொங்க கேசவன்.

க்ல்யாணம் தன் நண்பனைத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டான். தாமதம் செய்யாமல் தன் சகோதரியிடம் ஓடிச் சென்று அவளுக்கு விஷயம் பூராவும் ஆதியோடந்தமாக எடுத்துரைத்தான். வனிதாவும் மௌனமாய் ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள். பிறகு தான் அன்று கேசவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்த பொழுது, இவ்வளவு வருஷங்களாக திடவைராக்கியத்தோடு இருந்த தன் மனது, தன்னையறியாமல் தளர்ச்சியடைந்து, அவன் பால் இழுபட்டதையும், அதற்காக தான் பெரிதும் வெட்கி தன்னையே இவ்வளவு நேரமாகக் கடிந்து கொண்டிருந்ததையும் பற்றி, தன் சகோதரனிடம் ஒளிவு மறைவு இன்றி தெரிவித்தாள்.

ஒரு சுபதினத்தில் கேசவனுக்கும் வனிதாவுக்கும் ஆடம்பரம் எதும் இல்லாமல், தெய்வ சன்னதியில், விவாகம் நடந்தேறியது. பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் ஆகியிருக்க வேண்டிய அதே விவாகம் தான்!

புது தம்பதிகள் கை கோர்த்துக் கொண்டு வந்து கல்யாணத்திற்கு நமஸ்காரம் செய்து எழுந்தனர். அப்பொழுது கேசவன் கல்யாணத்தை அன்புடன் முதுகில் தட்டி "பார்த்தயா, கல்யாணம்? நீ எழுதிய கதை கட்டுரைகள் மூலம் ஆரம்பித்த நம் சினேகம் உன் சகோதரிக்கும் எனக்கும் விவாகத்தில் வந்து முடிந்தது. அடுத்த 'டர்ன்' (முறை) உன்னுடையதாக்கும்!" என்று கண் சிமிட்டிக்கொண்டே சொன்னான்

"அந்தக் கதை கட்டுரை எல்லாம் நான் எழுதியதாக இன்னமும் நினைக்காதேடாப்பா! எல்லாம் உன் அருமை தர்மபத்தினியின் வேலைதான். தன் பெயரை போட்டுக் கொள்ள அவளுக்கு இஷ்டமில்லாத படியால், தான் எழுதியவற்றை எல்லாம் என் பெயரிலேயே பிரசுரிக்கும்படி

கேட்டுக் கொண்டிருந்தாள். அதன்படி நானும் இது பரியந்தம் அந்த இரவல் பெருமையையும் புகழையும் அனுபவித்து வந்தேன். இனிமேல் உன்பாடு வனிதா பாடு.''

உடனே கேசவன் கரை கடந்த பிரேமையும் மகிழ்ச்சியும் பொங்க தன் மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்தான். நூதன தம்பதிகளின் கண்கள் மௌனமாய் சந்தித்து நமக்கெல்லால் புரியாத பாஷையில் ஏதோ ரகஸ்யம் பேசிக் கொண்டன. "கண்ணொடு கண்ணினை நோக் கொக்கின் வாய்ச் சொற்கள் ஏது பயனும் இல' என்பது பொய்யா? அவளுடைய மனதில் என்னென்னவோ சிந்தனைகள் கடல் அலைபோல் பொங்க ஆரம்பித்தது. கடந்த காலம் மெல்லிய பனித்திரைபோல் மெதுவாக விரிந்தது. ஆகா! இன்று ஒவ்வொரு நாளும் அவளுடைய எண்ணங்கள் எங்கெல்லாம் பறந்து சென்று கொண்டிருந்தன. அழகிய நட்சத்திரப் பரப்பும், இயற்கையின் அற்புத வடிவங்களும் முன்பு அவளுக்கு இன்பங் தோய்ந்த ஒரு துன்ப வாதனையே தந்து கொண்டிருந்தது. காரணமில்லாமல் ஏக்கந் தட்டிப்போய் அவள் அசைவற்றிருந்த அந்த நாட்களுக்கும் இப்போது ஒயிலுடன் கூடிய அற்புதநாட்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்? இந்த மனசு இருக்கிறதே, ரொம்ப பொல்லாதது. இல்லாததை எண்ணி ஏமாறுவதும், இருப்பதைக் கண்டு புளகிப்பதும், இயற்கை என்று எப்படிச் சொல்வது? காரணம் இல்லாமல் கண்களில், நீர் நிறையவும் தான் செய்கிறது. ஆனாலும், அதில் கூட ஒரு ஆனந்தம் இருப்பதை மறுக்க முடியுமா?

எதிரே பார்த்தாள். சட்டென்று தலை குனிந்து கொண்டாள். இப்பேர்ப் பட்ட மயக்கமும், மதுரமும் நிறைந்த இன்பத் துடிப்பு, இதற்கு முன் அவளுக்கு ஏற்பட்டதே இல்லை. எல்லாம் கதையாய் பழங்கனவாய் போகும் என்று எண்ணி சலிப்புத் தட்டி இருந்த போது, மலர்மணத்தைச் சுமந்து வந்த தென்றல் போல், எங்கிருந்தோ வந்து சேர்ந்து விட்டானே! கோபியர் கண் கலக்கத்தை நீக்கிய கோபாலனைப் போல் அவன் காட்சி அளித்தான்.

தன் கணவன் முகத்தை மௌனமாய் சில விநாடிகள் ஏறிட்டுப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்த வனிதாவின் வதனம் புதுச் சோபையுடன் பூரித்து மலர்ந்தது.

இதைக் கவனித்த கல்யாணத்தின் உள்ளத்திலும் உவகை ஊற்றுப் போல் சுரந்தது. "அப்பாடா! இந்த மறு மலர்ச்சியைக் காணத் தானே நான் இவ்வளவு காலமாக ஏங்கித் தவித்தேன்!" என எண்ணி நிம்மதியோடு பெருமூச்சு விட்டான்.

★

பௌர்ணமி இரவு

நாரண-துரைக்கண்ணன்

அன்று பௌர்ணமி, எங்கும் அமைதி நிலவிக்கொண்டு இருந்தது. வானத்தில் முழு மதி வெண்ணிலவைச் சிந்திய வண்ணம், உலகையே வெண்மயமாக்கிக் கொண்டிருந்தான்.

அவள் தன் வீட்டின் அறை ஒன்றில் உறங்கிக் கொண்டு இருந்தாள். ஆனால், உண்மையில் அவள் தூங்கிக்கொண்டிருந்தாளா? இல்லை, எவ்விதம் அவள் கண்ணுறங்க முடியும்? அன்றுதானே-அன்று காலையில்தானே—அவள் தன் கணவனை இழந்தாள். காதலன் பிரிவாற்ருது அவள் படுந் துயரை—காணச் சகியாமல் தான் அவளது பெற்றோரும் உற்ருரும் அவளைத் தனியறையில் விடுத்துச் சென்றனர்.

அவள் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். அவளது கண்களிலிருந்து ஊற்று நீர் போல் பெருகி வழிந்து கொண்டிருக்கும் கண்ணீர் தலையணையையும் சேலையையும் நனைத்து விட்டது. சந்திரனது கிரணங்கள் சாளரத்தின் வழியாக அறையினுள் நுழைந்து அவள் தேகத்தின்மீது படர்ந்தன. அவ்விதம் சந்திரிகை தன் மேலே படும்போதெல்லாம் அவளது உடம்பு குலுங்கியது. குளிர்மதியின் நிலவொளியும் அவளுக்கு வெப்பமாயிருந்தது போலும்! பாவம்! அவள் இந்நிலைமையைச் சமாளிக்க முடியாது புரண்டு படுத்து ஜன்னல் வழியாகச் சந்திரனைச் சீற்றத்துடன் நோக்கினுள். "முழு மதியே! உனக்கு ஏன் இச்சிறுமதி? கொடு நெருப்பனைய உன் கிரணங்களை என் மீது கக்கி உடம்பை வெதுப்பி ஏன் வாட்டுகிருய்? நான் உனக்குச்செய்த தீங்குதான் என்ன? ஈரநெஞ்சமென்பது சிறிதுமில்லா உனக்குத் 'தண்மதி' எனப் பெயர் வைத்த மனிதனைக்கண்டால், நான் என்ன செய்வேன் தெரியுமா? என் கண்ணில் படாது மறைந்தொழி! போ! மறைந்துபோ!" என அவள் கோபமாக மொழிந்தாள்.

நட்சத்திரங்களாகிய மனைவியர் புடைசூழ, கலை அழகோடு பிரகாசித்துக் கொண்டிருந்த சந்திரன் இப்பேதைப் பெண்ணைப் பரிகசிப்பவன்போல், மேகங்களிடையே மறைந்து மறைந்து வான வீதியில் மெள்ள உலவிய வண்ணம் இருந்தான்.

இதைக் கண்டு மேலும் ஆத்திரங்கொண்ட அவள் ஜன்னலை ஓசைபடச் சாத்திவிட்டு மீண்டும் படுக்கையில் குப்புற விழுந்தாள். அறைமுழுதும் அந்தகாரஞ் சூழ்ந்தது. தலை

யணையில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டிருந்த அவள் சிறிது நேரமானதும் மெள்ள தலையைத் தூக்கி நோக்கலானுள். அவ்வறை முழுதும் ஒரே இருள் மயமாய் இருப்பதைக் கண்டதும், அவள் மனதில் அச்சமுண்டாயிற்று. அவ்விருளில் எதிரே யாரோ நிற்பதுபோல், அவளது மருண்ட கண்களுக்குத் தோன்றியது. பீதியோடு உற்று நோக்கினுள். ஆம்; அங்கு நிற்பது அவளது காலஞ்சென்ற கணவன்தான்!

இவ்விதம், நிச்சயித்ததும், அவள் பயத்தையெல்லாம் விடுத்து ஆவலோடு படுக்கையைவிட்டு எழுந்து ஓடினுள். ஆ! என்ன ஏமாற்றம்? அவளது கைகள் அவளையேதான் சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்தன. அவ்விடத்தில் அவளது கணவனுமில்லை; ஒன்றுமில்லைநல்லகாலம்,சிறிதுதள்ளிப் போயிருந்தால் சுவரில் முட்டிக்கொண்டிருப்பாள்! ஆனுல் அவள் கண்டதென்ன? பொய்த் தோற்றமா? ஆம், கணவனது உரு வெளித் தோற்றமே அது! அவனை எண்ணியெண்ணி ஏங்கிய நினைவு முதிர்ச்சியால் அவள் பார்க்கும் இடமெல்லாம் காதலனது உருவெளித் தோற்றமே காட்சியளித்து பலமுறை அவளை ஏமாற்ற மடையச் செய்து அலக்கழித்தது. கடைசியாக, அவள் சோர்ந்துபோய் மீண்டும் படுக்கையில் விழுந்து முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழலானுள்.

இந்நிலைமையில், அவளது மனம் சென்றகால வாழ்வைச் சிந்தித்தது. இளமையில் பெற்ளுேரால் அவள் அருமையாக வளர்க்கப் பட்டதுபோக, மங்கைப் பருவமடைந்ததும், அவள் கண்ட இன்பக் கனவுகள், கட்டிய மனக் கோட்டைகள், எண்ணிய எண்ணங்களும் அவள் எதிர்பார்த்தவாறே அழகும், அறிவும் இளமையும் உடைய ஆடவனெருவன் கணவனுக வாய்த்து அனுபவித்த இன்பங்களும் எல்லாம் அவளது நினைவிற்கு ஒன்றன்பின் ஞென்ருக வந்தன. அழகாகவும் ஆடம்பரமாகவும் அலங்கரிக்கப் பட்ட மணப் பந்தலில் பெற்ருேரும் உற்ருரும் மற்ருேரும் புடைசூழ, மேளவாத்தியங்கள் முழங்க, புரோகிதர்கள் மந்திரமோதி மணச் சடங்குகளை முறையே நடத்த கணவன் பக்கலில் கம்பீரமாக அமர்ந்து அவனல் தாலி கட்டப்பட்டதும், பின்னர், அடுத்த நாள் இரவு தனி அறையில் கணவனைத் தனியாக அவள் சந்தித்ததும், இந்த ஒரு வருஷகாலமாக யாதோர் குறையுமின்றித் தங்கள் காதல் வாழ்க்கை இன்பமாக நடைபெற்றதும் ஆகிய சம்பவங்களெல்லாம் அவளது மனக் கண்ணுக்குக் காட்சியளித்தன.

இரண்டு நாட்களுக்கு முன் கூட, அவள் கணவனேடு இனிமையாக உரையாடி இன்புற்றிருந்தாளே! இவ்வளவு சீக்கிரத்தில் — இன்ப வாழ்க்கை

யில் இரண்டொருபடிகளே அடியெடுத்து வைத்துள்ள இவ்வளவு சுருங்கிய காலத்தில் — வாழ்வே பாழாகப் போகும் படியாக இடிவிழுமென்று அவள் எப்படி எதிர் பார்த்திருப்பாள்? காதலனோடு கூடியிருந்த காலத்தில் மகிழ்ச்சியைக் கொடுத்த இரவு இப்போது எவ்வளவு கொடுமையான துயரத்தை யளிக்கிறது? இரவுமட்டுமா! அக்காலத்தில் அவளுக்கு ஆனந்தத்தை யளித்த ஒவ்வொரு பொருளுமே இப்போது துன்பத்தை யுண்டு பண்ணுவதற்கு ஏதுவாயிருந்தன என்றால், அவளது பரிதாப நிலையை என்னென்பது! இம்மண்ணுலகத்திலுள்ள உயிர்களையெல்லாம் உறங்கச் செய்யும் இவ்விரவு தன்னை மட்டும் துயிலவிடாது துன்புறுத்துவதைப் பார்த்தால், தன்னை அது உற்ற துணையாகக் கொண்டுவிட்டதுபோலும் என்றுகூட அவள் எண்ணினாள்.

இனிய இரவில் தான் மட்டும் கண்ணுறங்காது மனதோடு போராடிக் கொண்டிருப்பது அவளுக்குஎன்னவோ போலிருந்தது. எனவே, அவள் மெள்ள எழுந்து கையால் தடவிக் கொண்டே போய்த் தீப்பெட்டியைக் கண்டெடுத்து விளக்கை ஏற்றினாள். அறையின் இப்பக்கமும் அப்பக்கமுமாக அவள் மன நிம்மதியின்றிப் பரபரப்பாக உலாவலானாள். அவ்வாறு உலவி வருகையில் அறையின் நடுவில் இடப்பக்கத்தில் வைக்கப் பட்டிருந்த நிலைக் கண்ணாடியில் அவளது உருவம் பிரதிபலித்தது. அதைக்கண்டு அவள் திடுக்கிட்டு அப்படியே நின்றுவிட்டாள். "என்ன மாறுதல்! எவ்வளவு பெரிய வித்தியாசம்! இக்கண்ணாடியில் காணப்படும் உருவம் என்னுடையதுதானா! என்றால் சிறிதும் நம்ப முடியவில்லையே! என் கண்கள்தான் என்னை ஏமாற்றுகின்றனவா? திருமணம் நடந்த அன்று சர்வாலங்கார சுந்தரியாய்ப் பார்ப்பவர் மயங்கும் வண்ணம் இருந்த கோலம் என்ன! இதே நிலைக் கண்ணாடிக்கு எதிரே நின்று என் உருவத்தை நானே கண்டு களித்துப் பெருமிதங் கொண்டிருந்தேனே! அன்று என் முகத்தில் குடி கொண்டிருந்த அழகு இன்று எங்குபோய்ஒளிந்தது? என் முகம் இப்போது ஏன் வெளிறிப்போய் விகாரமாய்க் காணப்படுகிறது? இம் மாறுதல்களுக்குக் காரணம், உம்; சொல்ல வேண்டுமா? விதி என் தலையில் கையை வைத்துவிட்டது; என் வாழ்க்கையிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணி விட்டு வேடிக்கை பார்க்கிறது" என்று அவள் வாய்விட்டுக் கதறினாள்.

இருகைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு, கண்ணாடியில் தோன்றும் தன் உருவத்தைச் சிறிது நேரம் அவள் வெறித்துப் பார்த்தாள். அவளால் தன் முகவிகாரத்தைக் காணச்சகிக்க முடியவில்லை.

உடனே முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதாள்.

ஆ! இதென்ன! அவளுக் குப் பைத்தியம் பிடித்து விட் டதா என்ன! ஏன்? அவள் இருந்தாற் போலிருந்து துள் ளிக் குதித்து ஓடுகிறுள்? எங்கே ஓடுகிறுள்? வீட்டுப் பின்புறத்திலுள்ள கொல்லைப் பக்கம்தான். அவள் அங்கு "இந்தப் பூந்தோட்டத்தில் வெண்ணிலாவினிலே எத்தனை நாள் இன்பக் கனவிலே என் காதலனுடன் இனிய கீதம் இசைத்திருக்கிறேன். ஆனல் இன்று என்ன? ஐயோ! அதைஏன்நான் நினைத்தேன்? இந்தப் பாழும் எண்ணத்தை யெல்லாம், இறைவனே! என் னைவிட்டு அகலும்படிச் செய்ய மாட்டாயா! இவை என்னைப் பிய்த்துப் பிடுங்குகின்றனவே! இவ்விதம் உயிரோடு சித்திர வதை செய்து வேடிக் கை பார்ப்பதை விட என்னை இவ்வுலகினின்றும் நீக்கி என் கணவன் சென்ற இடத்தையடையச் செய்தால், உனக்கு நான் கோடிதரம் வணக்கஞ் செய்வேன்! — சீ! உன் உதவியையா நான் நாடி னேன்? நீ தானே இக்கோரக் கூத்தை யெல்லாம் செய்து வேடிக்கை பார்ப்பவன்! நீ மகா கொடியவன்; உன்னை வேண்டுவதை விட, மரணத் தை உண்டு பண்ணும் எமதரு மனை வேண்டினல், அவன் என் எண்ணத்தை உடனே நிறைவேற்றி வைப்பான்.

ஆம் அதுதான் போக்கிடம் என்று கதறிய வண்ணமே நிலத்தில் சாய்ந்து விட்டாள்.

பாவம்! பேதைப் பெண்! அவள் வேண்டுகோள் எமன் செவியேற்றுனே, இல்லையோ! மூர்ச்சித்து விழுந்த அவள் பசும் புற்றரையை விட்டு மீண் டும் சூரியோதயமாகியும் எழுந் திருக்கவில்லை. நிலவொளியில் வாடிவதங்கியிருந்த அவளது வதனம் சூரியன் ஒளியால் பிரகாசமுற்று விளங்கியது.

★ புத்தக ஆராய்ச்சி

★

[பெண்கள் சிறுகதைத் தொகுதி: பனிரண்டு பெண் எழுத்தாளர்கள் எழுதியது. பிரசுரம்: தொண்டன் பிரசுராலயம், வேளுக்குடி தஞ்சை.]

இந்தப் புத்தகத்தின் தோற்றத்தைப் பார்த்தாலே கலை அழகு ததும்பி நிற்பதைக் காணலாம். உள்ளே யடிக்க ஆரம்பித்தாலோ ஒன்றைவிட மற்றொரு கதை அழகாகவும், அற்புதமாகவும் இருக்கிறது. பெண்மணிகள் எழுதி இருக்கிறார்கள் என்றால், உணர்ச்சிக்கு மிக முக்கியத்வம் கொடுத்திருப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்? அப்படி யாருக்காவது ஏதாவது சந்தேகம் தோன்றினாலும், ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் அவர்களுடைய முன்னுரை அதைத் தீர்த்து வைத்துவிடும். இப்பேர்ப்பட்ட சிறந்த சிறுகதைகளைத் தொகுத்தவர் யாரென்பதை அறிய ஆவல் உண்டாகிறதல்லவா? அந்த சிறப்புக் குரியவர் ஸ்ரீ ஷரீப் அவர்கள். ஸ்ரீ ஷரீப் கலையுள்ளம் இவ்வித அழகிய கதைக் கொத்தைத் தமிழகத்திற்கு அளித்திருக்கிறது. பதிப்பாசிரியர்கள் பணி மென்மேலும் பெருக நல்ல ஆதரவு கிடைக்குமென நம்புகிறோம்.

●

[முன்னேற்றம் ஹிஜிரி மலர்: பிரசுரம்: "முன்னேற்றம்" காரியாலயம், திருநெல்வேலிப் பேட்டை.]

ஹிஜிரி மலரில் எத்தனையோ ரகமான உணர்ச்சி மிக்க கட்டுரைகள் பொதிந்திருக்கின்றன. கவிதைகள் சுடர் வீசுகின்றன. "மறுமலர்ச்சி" என்னும் கட்டுரையை முக்கியமாக இங்கு குறிப்பிடுவதின் நோக்கம், எல்லா மலர்ச்சிகளையும், அதிலே குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல் "உண்மை"யும் ஒன்று. "உண்மை"யிலே ஆசிரியர் எத்தனையோ உண்மையான விஷயங்களைக் கூறுகிறார். இந்த மலரை நன்றாகத் தயாரித்திருக்கிறார்கள்.

●

கிடைக்கப் பெற்றோம்:

[தமிழ் மக்கள் தந்த செய்தி அல்லது சிறையில் யான் கண்ட கனவு! (ஓர் இனிய தமிழ்க்கவி நூல்) ஆசிரியர் குடியேற்றம்: மு. அண்ணல் தங்கோ. கிடைக்குமிடம்: கோ. கிருஷ்ணசாமி, 133, லாங்கு பஜார். வேலூர். விலை 6 அணா

●

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை: வள்ளலார் மாணவர் இல்லம் 27-ம் ஆண்டு அறிக்கை (1944) விவரம் அறிய விரும்புவோர். வா. தி. மாசிலாமணி, இந்துமத பாடசாலை. வாலாஜாபாத் என்ற விலாசத்திற்கு எழுத வேண்டும்.

கதிர்காம மகத்வம்: விலை அணா 2

ஸ்ரீ பழனி க்ஷேத்திர வரலாறும் பாடல்திரட்டும் விலை அணா 4. பிரசுரம்: பி. நடராஜ பண்டாரம், மலைக் கோவில் அயன் மிராஸ் பழநி.

எழுத்தாளர் சங்கம்

நல்ல நிலத்தில் தான் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கலாம். விளைச்சல் நன்றாக விளைய வேண்டுமானால் பூமியும் அதற்குத் தகுந்தபடி உரம் பெற்றிருக்க வேண்டும். அதே போல் தான் வாழ்க்கை இன்பகரமாய் இருந்தால் அல்லாமல் இலக்கியத்திலே இன்பத்தைக் காண்பது அரிது. இலக்கியம் வாழ்க்கையை பண்படுத்தும்படி இருக்க வேண்டும். வாழ்க்கையும் அப்படியே.

வாழ்க்கையை திருத்தி அமைத்து தருகிறவன் வாழ்க்கைச் சிற்பி. எழுத்தாளன். ஆம், இலக்கியாசிரியன் தான் வாழ்க்கைச் சிற்பி.

இலக்கியத்தை வளர்க்கும் இலக்கியாசிரியன் வாழ்வு எப்படி இருக்க வேண்டும்? சதா சிந்தனையிலே அபூர்வ உலகங்களை நிர்மாணிக்கும் எழுத்தாளன் வாழ்விலே இன்பத்தைக் காண வேண்டாமா? அமைதியும், சாந்தியும் அவன் கண்டால் அல்லவா, அழகுபட அது மலர்ச்சி பெறும்? அப்படி மலர்ச்சி பெற அவன் என்ன செய்ய வேண்டும்? அவனுடைய வாழ்க்கைத் திட்டம் என்ன? முதலில் அவன் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன என்பதையும் ஆராய வேண்டுமல்லவா?

கலைஞர்கள் ஒன்று கூடியிருப்பதே ஆனந்தக் காட்சி. இலக்கியத்தின் பல பகுதிகளைப் பற்றி, சிந்தித்து, விவாதித்து, அவர்கள் முடிவு கட்டுவது தானே, நாகரிகத்தை, கலையை வளரச் செய்கிறது? அற்புதமாக வளப் படுத்துகிறது? ஆம், அதில் துளியும் சந்தேகம் இல்லை.

எழுத்தாளர்கள் ஒன்று பட்டு, உருப்படியான காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வேண்டும் என்ற ஆவல் மேலீட்டினால், கோயமுத்தூர் ஜில்லா எழுத்தாளர்கள் ஒன்று கூடி, கோவை எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கோவைச் சங்கம், தமிழ் எழுத்தாளர் மகாநாடு ஒன்றைக் கூட்ட முயற்சி செய்கிறது. முயற்சி பயனளிக்க ஒவ்வொரு எழுத்தாளரும் உதவ வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்; ஆசையுங் கூட. தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்று சேரும் போது, ஆகா! அந்தக் காட்சியை எப்படி வர்ணிப்பது!

ஆசார்யா
ஸரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

அத்தியாயம் பதின்மூன்று

அந்தச் சன சந்தடியற்ற தெருவை விட்டுக் கிளம்பி ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டார்கள். வண்டியின் சன்னல் வழியாக இருவரும் மௌனமாக தெருவில் போகிறவர்கள் வருகிறவர்களைப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். இருவர் மனதும் பேசும் நிலையில் இல்லை. உபேந்திரன் கவலையுடன் என்னவோ யோசித்துக் கொண்டிருந்தான். 'நாளையே ஊர் திரும்பிவிட வேண்டும். நல்லதோ கெட்டதோ, நாம் இந்தக் காரியத்தில் தலையிடக் கூடாது. ஆனால் ஊருக்குப் புறப்படு முன் ஹாரான் அண்ணவை ஒரு தடவை சென்று வைத்தியம் சரிவர நடக்கிறதா என்று பார்த்து வர வேண்டும். அவ்வளவு தான். எட்டு வருஷமாக விட்டுப் போயிருந்த உறவு அப்படியே போய் விடட்டும்' என்று இவ்விதம் நினைத்தபடி அந்தக் குறுகிய வண்டிக்குள் மறுபுறம் திரும்பி உட்கார்ந்தான். சதீஷைப் பார்த்தான். அவன் வழியின் இரு புறங்களிலுமுள்ள வீடுகளைப் பார்த்துக் கொண்டு வந்தான்.

"சதீஷ்! ஒரு சிகரெட் கொடப்பா; ரொம்பக் குளிராக இருக்கிறது" என்றான் உபேந்திரன்.

சதீஷ் ஒரு சிகரெட்டும் தீப் பெட்டியும் கொடுத்தான். மறுபடி அவனும் பேசாமல் வீதியையே பார்த்துக் கொண்டு வந்தான்.

உபேந்திரன் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு, "உள்ளத்தின் உள்ளே இருக்கும் இருளும் இந்தப் புகையைப் போலவே மறைந்து போகட்டும்" என்றான்.

சதீஷ் மௌனமாகவே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வண்டி 'கடபுடா' வென பல வீதிகளையும், சந்து பொந்துகளையும் கடந்து சென்று கொண்டிருந்தது. சிகரெட்டும் சாம்பலாகி விட்டது. புகையும் ஆகாயத்தில் கலந்து விட்டது. ஆனால் இவ்விருவர்களும் பழையபடியே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். 'சதீஷும், இந்த விஷயத்தைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருப்பான். ஏதோ ஒரு முடிவுக்கும் வந்திருப்பான். இல்லா

விட்டால் பேசாமலிருக்கும் ஆள் அல்ல அவன்' என உபேந்திரன் நினைத்தான். ஆனல் அவன் என்ன யோசித்துக் கொண்டிருக்கிருன் என்பதை அறிய முயற்சிக் கையில் உபேந்திரனுக்கு நடந்த விஷயங்கள் எல்லாம் ஞாபகத் துக்கு வந்தன. அவன் உள்ளூர நடுங்கினன். அவன் மனதிற்குள் ளாகவே, 'அடடா! இந்தப் பாவி வீடு இந்தக் கதிக்கு ஆளாகி விட் டதே' என்று சொல்லிக் கொண் டான். அவன் அங்கு கண்ட தெல்லாம் அவ்வெண்ணத்தையே உறுதிப் படுத்தின.

ஆனல், சதீஷ் ஏன் அந்தக் கதி யற்ற அபலையிடம் கச்சை கட் டிக் கொண்டு சண்டைக்குப் போனன் என்பது விளங்க வில்லை

சதீஷ் அதிகப் படிப்பில்லாதவன் தான்; இருந்தாலும் ஒன்றும் தெரியாதவனல்லவே. சரஸ்வதி தேவி அவனை ஏமாற்றி யிருந்தா லும் லௌகிகம் தெரிந்தவனு யிற்றே. உபேந்திரனுக்கு அவ னைத் தெரியாதிருந்திருந்தால் இவ் வளவு துக்கப் பட்டிருக்க மாட் டான். ஹாரானுடைய உயில் அவனுக்கு வியப்பை அளித்தது. உபேந்திரன் சிறிது நேரத்திற்குள் எவ்வளவோ விஷயங்களை முடிவு செய்து வைத்திருந்தான். உயிரை விட்டுக் கொண்டிருக்கும் இந்த ஏழை நண்பனின் தாயாரையும் மனைவியையும் மரண பரியந்தம் காப்பாற்றுவது என்று எண்ணி யிருந்தான். ஒரு நல்ல கோவில் குளமுள்ள ஊரிலே ஒரு வீடு வாங்குவது. அது மரம் செடி கொடிகள் சூழ்ந்த ஒரு ஆசிரமம் போல இருக்க வேண்டும். இவர் கள் இருவரும் அந்த வீட்டில் சாந்தியுடன் காலத்தைக் கழித்து வரட்டும் என்று அதற்குள் உபேந்திரன் திட்டம் போட்டு வைத்திருந்தான்.

ஆனல் சற்று நேரத்திற்கு முன் கிரணமயி பேசிய குத்தலான பேச் சுக்கள் அவன் கட்டி வைத்திருந்த மன மாளிகையை இடித்து நிர்த் தூளியாக்கி விட்டது.

உபேந்திரனல் பேசாமலிருக்க முடியவில்லை. அவன் சதீஷைக் கூப்பிட்டு, "என்ன யோசித்துக் கொண்டிருக்கிருய்?'' என்ருன்.

சதீஷ், "அண்ணு, நான் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? சிறு வயதில் நான் படித்துள்ள ஒரு நாவலைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கி றேன்'' என்ருன்.

"அது என்ன நாவல்?''

"பெயர் ஞாபகத்தில் இல்லை. ஆசிரியர் பெயர் கூட ஞாபகத்தில் இல்லை. ஆனல் யாரோ ஒரு பிர சித்தி பெற்ற ஆசிரியர் தான். நாவலில் வரும் ஒரு சம்பவத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந் தேன். அது ரொம்ப அழகான சம்பவம்— விசித்திரமானதுங் கூட!''

உபேந்திரன் ஆச்சரியத்துடன் அவனையே பார்த்துக் கொண்டி ருந்தான்.

சதீஷ் ரொம்பக் கிண்டலாக, "அண்ணு, நீ வாழ்நாள் பூராவும் ஆங்கிலத்தையே படித்துக் கொண் டிருக்கிருய். ஒரு நாளைக்காவது தாய் பாஷையைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. தாய்பாஷையில் நல்ல அறிவு மிகுந்த இம்மாதிரியான எத்த னையோ புத்தகங்கள் இருக்கின் றன'' என்று கூறி விட்டு பேசாமல் இருந்தான்.

உபேந்திரன் கோபத்துடன், "முதலில் அந்த நாவல் கதையைச் சொல்லு, அதன் பின் எவ்வளவு அறிவு உதயமாகிற தென்பதைப் பார்க்கலாம்'' என்றான்.

சதீஷ் சிரித்தான். "கோப மடைவதில்லை என்று சொல்?''

"இல்லை, சொல்லு.''

"ரொம்ப அழகான கதை. ஒரு பெரிய ஜமீந்தார் படகில் எங்கோ போய்க்கொண்டிருந்தான். ஒரு நாள் சாயங்காலம் ஆகாயத்தில் மேகங்கள் கூடின. திடீரென புயலும் மழையும் ஆரம்பமாகி விட்டது. அவர் பயந்து போய் கரைக்கு வந்தார். எதிரில் இடிந்துபோன பெரிய மாளிகை ஒன்று இருந்தது. மழைக்கு ஒதுங்குவதற்கு அந்த மாளிகைக் குப்போனார். அந்த மாளிகை இருண்டு கிடந்தது. அங்கே யாரையும் காணோம். மாளிகை முழுதும் தேடினான். கடைசியாக ஒரு அறையில் சிறு விளக்கு ஒன்று எரிவது தெரிந்தது. அந்த அறைக்குள் ஒரு மனிதன் மரணத் தருவாயில் படுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய அழகிய மனைவி தரையில் படுத்து அழுது கொண்டிருந்தாள். அந்தப் பெண் அன்று இரவு ஒரு பயங்கரமான கனவு கண்டிருந்தாள். ஆமாம், உபேந்திர அண்ணா, நீ கனவை நம்புகிறாயா?'' என்றான் சதீஷ்.

"இல்லை. அப்புறம்?''

"அதற்கப்புறம் அவன் அந்த இரவே இறந்து விட்டான். ஜமீந்தார் அந்த அழகிய யுவதியை வீட்டிற்கு அழைத்து வந்து பலவந்தமாகக் கலியாணம் செய்து கொண்டார். நாலா பக்கத்திலிருந்தும் ஏச்சுக்கள் கிளம்பின. இந்தத் துக்கத்தினால் ஜமீந்தாருடைய முதல் மனைவி விஷத்தைத் தின்று இறந்து விட்டாள்''

கதைச் சுருக்கத்திலிருந்து, சதீஷ் 'விஷவிருக்ஷ'த்தைக் கொலை செய்கிறான் என்பதை உபேந்திரன் தெரிந்து கொண்டான். வேறு ஒரு சமயமாயிருந்தால் சதீஷின் ஞாபக சக்தியைக் குறித்து உபேந்திரன் நன்கு சிரித்திருப்பான். ஆனால், இப்போது அவனால் சிரிக்க முடியவில்லை. இந்தக் கதை அவனுடைய மனதிலே அம்பு போலத் தைத்தது. இது சதீஷின் ஞாபகம் அல்ல சந்தேகம் என்று உபேந்திரன் மனதிற்குள்ளாகச் சொல்லிக்கொண்டான். ஆனால் இந்த சந்தேகம் எப்படி உண்டாயிற்று? அவன் ஏன் 'விஷவிருக்ஷ'த்தின் கிளைகளையும், தழைகளையும் ஒடித்து விட்டு மொட்டை மரத்தை கண்முன் கொண்டு வந்து நிறுத்தினான் என்பதை நினைக்கவும் அவனுக்கே மிகுந்த வெட்கமாக இருந்தது.

இருளில், உபேந்திரனுடைய முகம் கருத்துப் போனதை சதீஷ் பார்க்க முடியவில்லை. சதீஷ் மேலும், "விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் விழாதே அண்ணா!'' என்றான்.

உபேந்திரனால் ஒன்றும் பேச முடியவில்லை. வெகுநேரம் பேசாமலிருந்த பிறகு, மெதுவாக, "அந்த நாவல் இருக்கட்டும். நீ என்ன உபதேசிக்க விரும்புகிறாய் என்பதைச் சொல்லு?'' என்றான்

சதீஷ் பலமாகச் சிரித்தான். "பார்த்தாயா, உபேந்திர அண்ணா உனக்குக் கோபம் வந்து விட்டதே. நான் உனக்கு ஒன்றும் உபதேசம் செய்யப் போவதில்லை. நான் உன் காலைப் பிடித்து வேண்டிக்கொள்கிறேன். நீ இனிமேல்

அங்கு போகவேண்டாம். அவர்கள் நல்ல மனிதர்களாக எனக்குத் தோன்றவில்லை." என்ருன்.

"யார்?"

"அண்ணு, கோபித்துக் கொள்ளாதே. பழக்கத்திஞல் மரியாதையாகப் பேசுகிறேன். நான் ஹாரான் பாபுவைப் பற்றிச் சொல்லவில்லை. அவர் நல்லது கெட்டது ஒன்றிலும் சம்பந்தப் பட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. அவருடைய தாயாரை நான் கண்ணுல்கூடக் கண்டதில்லை. நான் மூன்ருமவரைப் பற்றித்தான் சொல்லுகிறேன்"

"மூன்ருவது மனிதர் பேரில் என்ன குற்றம்? இதோ பார் சதீஷ்! உன்னுடைய தகப்பனுர் சொத்து முழுவதையும் வேறு ஒருவருக்கு எழுதிவைத்து விட்டால் நீ சிரித்துக் கொள்வாயல்லவா?"

"வேண்டாம் அண்ணு, அப்பாவுக்கு அந்தமாதிரி புத்தி வரவேண்டாமென்று கடவுளிடம் பிரார்த்தனை செய். நான் அவருக்குக் கெட்ட பிள்ளைதான். என்னுல் அவர் மகிழ்ச்சி அடையப் போவதில்லை. இருந்தாலும் நாளைக்கு அவருக்குக் கொள்ளி வைக்கப் போகிறவன் நான்தான். நான் ஏதாவது தகாத வார்த்தைகளைப் பேசி இருந்தால் மன்னித்துக் கொள். ஹாரான்பாபு திடீரென இந்த முடிவிற்கு வந்துவிடவில்லை. வெகு நாளைய யோசனையின் பேரில்தான் இம்முடிவிற்கு வந்திருக்கிருர்."

உபேந்திரன் மௌனமாக இருந்து கொண்டான். மறுபடியும் சதீஷ், "அண்ணு, ஹாரான் பாபு எல்லா பொறுப்புகளையும் உன்னிடம் ஒப்புவிக்கும்போது மனைவியை மறந்துவிட்டார் என்ருே அல்லது வெட்கத்தால் சொல்லவில்லை என்ருே நினைக்காதே. நீயாகக் கேட்டிருக்காவிட்டால் அவர் வ்ாயே திறந்திருக்க மாட்டார்" என்ருன்.

உபேந்திரன் இதுவரையிலும் பொறுமையாகவே கேட்டுக் கொண்டிருந்தான். ஆனுல் அந்நிய பெண்ணைப் பற்றி இவ்விதம் கேவலமாகப் பேசுவதை அவனுல் பொறுக்க முடியவில்லை. அவன் மிகக் கோபமாக, "சதீஷ், நீ இவ்வளவு கீழுக்குப் போய் விட்டாய் என்பது எனக்குத் தெரியாது. உனக்கு அப்படித்தான் படும்" என்ருன்.

"கீழுக்குப் போய்விட்டேஞ?" ஏன்? கெட்டதைக் கெட்டதென்று சொல்வதாலா?"

"நல்லதோ கெட்டதோ, உனக்கு அவளைப் பற்றிப் பேச என்ன அதிகாரமிருக்கிறது?"

"அதிகாரம் என்று எதைச் சொல்லுகிருய். தாய் பாஷையில் அதற்கு அர்த்தமே கிடையாது. நமது சமூகத்தில் அதிகாரம், அதிகாரமில்லாதது என்ற நுட்பமான விவாதங்களெல்லாம் ஒன்றும் நடக்காது. அநேகர் சிறைத் தண்டனை அடைந்தவனைக்கூட திருடனென்று சொல்லக்கூடாது என்கிருர்கள். ஆனுல் யாரும் சொல்வதுபோல நடப்பதில்லை."

"அது வேறு சங்கதி. திருடனென்று தெரிந்த பிறகுதான் ஒருவனைத் திருடனென்று சொல்வார்கள். திருடன் சிறைக்குப் போகிருன். இதில் உனக்கென்ன ஆதாரமிருக்கிறது?"

"ஆதாரமில்லாமலேயே எத்தனையோ பேர் நீதிபதிகளின் தயவிஞல் சிறைவாசத்தை அனுபவிக்

கிருர்கள். நமக்கு ஸ்ப்டிகம்போல் தெரிவது யோசிப்பவர்களுக்கு மலையைப்போலத் தெரிகிறது. இன்று நமக்குள்ளேயே அப்படித் தானே ஏற்பட்டிருக்கிறது. நான் தவருகப் பேசுகிறேனென்று நினைக்காதே. இவ்வளவு பெரிய உலகத்திலே கடவுள் இருக்கிருர் என்பதற்கு ஆதாரம் சிலருக்குத் தேடினுல்கூடக் கிடைப்பதில்லை. நீ கோபமடைவாய் என்பது எனக்குத் தெரியும். ஏனென்ருல் நீ எப்பொழுதும் நல்லவர்களுட னேதான் பழகி வருகிருய்; நல்ல வர்களைத்தான் பார்த்திருக்கிருய். அதோடு நீயும் ஒரு நல்ல மனிதன். ஆனுல் என்னைப்போல நல்லவர் கெட்டவர் இருவருடனும் பழகி அனுபவப் பட்டிருந்தால் நான் இவ்வளவு தூரம் உனக்குச் சொல்ல வேண்டிய அவசியமே உண்டாகி இருக்காது. நீயாகவே தெரிந்து கொண்டிருப்பாய்.''

உபேந்திரன் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "எல்லா விஷயங்களையும் கண்ணுரக் காண வேண்டுமென்ற அவசியமேயில்லை. அனுபவப்படுவதற்காக உன்னைப் போல அற்பனுகவும், ஆகமாட் டேன். இனி இந்த விஷயத்தை விட்டுவிடு. வண்டி வாசலுக்குள் நுழைந்துவிட்டது. ஒரு விஷயத் தை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள். இன்னும் நீ நன்கு அனுப வப்பட்டு பழுத்த பழமாகும் போது, பழத்தின் விலை என்ன என்பது தெரியவரும்'' என்ருன்.

அடுத்த நாள் காலை உபேந்திரன் நேரம் கழித்து எழுந்தான். சூரிய கிரணங்கள் சன்னல் வழியாக அறைக்குள் நுழைந்து கொண் டிருந்தன. உபேந்திரன் அவசர மாக எழுந்து படுக்கையில் உட் கார்ந்தான். அறையில் சதீஷைக் காணவில்லை. அவன் எங்கு போனுனே? வெளியில் சமையல் காரன் நின்று கொண்டிருந்தான். அவன் உள்ளே வந்து, "சதீஷ் பாபு தோட்டத்தில் குஸ்தி செய் கிருர். கீழே காபி தயாராக இருக்கிறது. ஐயா உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிருர்'' என்ருன்.

உபேந்திரன் உடனே கீழே இறங்கி வந்தான். ஜோதிஷ் ஆச னத்திற்கு அழைத்துக் கொண்டு போனுன். அங்கு ஜோதிஷ் சகோதரி சரோஜினியும் இவர் களை எதிர்பார்த்துக் கொண்டிருந் தாள். அவள் தினசரிப் பத்திரி கையை முன்நீட்டிக் கொண்டு புன் சிரிப்புடன், "நேற்று இரவு பத்துமணி வரையிலும் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந் தோம். யாராவது நண்பர்களைச் சந்தித்திருப்பீர்கள். அவர்கள் உங்களை அழைத்துப் போயிருக்க லாம். ஒரு வேளை இரவு வரமாட் டீர்கள் என்று அண்ணு சொன் ஞன். நேற்று இரவு எத்தனை மணிக்குத் திரும்பி வந்தீர்கள் உபேந்திரபாபு?'' என்ருள்.

உபேந்திரன் சிரித்துக் கொண்டு, "பன்னிரண்டு மணி இருக்கும். ஒரு முக்கிய காரியமாகப் போயி ருந்தோம். எல்லாருக்கும் சிரமத் தைக் கொடுத்து விட்டோம்'' என்ருன்.

"இது எங்களுக்குத் தெரியும். நீங்கள் காரியமின்றி தெருத் தெரு வாகச் சுற்றிக் கொண்டிருந்தீர் கள் என்று சொல்லுகிறேும். சதீஷ் பாபு எங்கே போய் விட் டார்?'' என்ருன் ஜோதிஷ்.

சமையற்காரன் வந்து, "தோட் டத்தில் சதீஷ் பாபு குஸ்தி செய்து கொண்டிருக்கிருர்'' என்ருன்.

சமையற்காரன் போன பிறகு ஜோதிஷ், உபேந்திரனைப் பார்த்து, "குஸ்தியா? அங்கு வேறு யாராவது இருக்கிறார்களா?" என்றான்.

"எனக்குத் தெரியாது, குஸ்தி அல்ல; ஏதாவது கசரத் எடுத்துக் கொண்டிருப்பான். அவனுக்குச் சிறுவயதிலிருந்தே உடல் பயிற்சி செய்யும் வழக்கம் உண்டு. ஏதாவது செய்து வருவான்" என்றான் உபேந்திரன்.

நேற்றுப்பகல் சரோஜினி கண்காக்ஷி சாலைக்குச் சென்றிருந்தாள். மாலை வந்து, உபேந்திரன் ஒரு நண்பருடன் வந்திருப்பதைக் கேள்விப்பட்டாள். ஆனால் அப்போது அவர்கள் பதரியா கட்டடத்திற்குச் சென்றிருந்தார்கள். ஆகையால் அப்பொழுது அவள், "உபேந்திரபாபு, சதீஷ்பாபு யார்? நான் அவரைப் பார்த்ததில்லையே?" என்று கேட்டாள்.

"நேற்று நாங்கள் வரும்போது நீ இல்லை. சதீஷ் எனது பாலிய நண்பன். வயதில் என்னைவிடச் சிறியவன் தான் — அதோபார் அவனும் வருகிறான்" என்றான் உபேந்திரன்.

சதீஷ் அறைக்குள் அடி எடுத்து வைத்தான். அடடா! எவ்வளவு அழகிய உடல்! அவன் நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்துப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அழகிய சிவந்த முகத்தில் தேகாப்பியாசத்தினால் படர்ந்திருந்த ஒரு மினுமினுப்பு உள்ளத்தைக் கவர்வதாயிருந்தது. சரோஜினி அவன் முகத்தைப் பார்த்துவிட்டு கீழே குனிந்து கொண்டாள்.

"சமையற்காரன் நீங்கள் குஸ்தி செய்து கொண்டிருப்பதாகச் சொன்னான். நீங்கள் என்னவோ செய்யுங்கள். உங்கள் தேகத்தைப் பார்க்க எனக்குப் பொறாமை உண்டாகிறது. என்னைப் போல நாலைந்து பேர் சேர்ந்தால் கூட உங்களை ஒன்றும் செய்துவிட முடியாது" என்றான் ஜோதிஷ்.

சதீஷ் சிரித்துக் கொண்டே, "பரிட்சித்துப் பார்க்காமலேயா இவ்வளவு பெரிய நற்சாக்ஷிப் பத்திரம் கொடுக்கிறீர்கள்! கேவலம் சரீர பலத்தினால் என்ன பிரயோசனம்? என்னிடம் வேறு ஒரு பலமும் கிடையாது" என்றான்.

அவனுடைய கடைசி வார்த்தையில் சிறிது துக்கம் தொனித்தது. கோப்பையில் டீயை விட்டுக் கொண்டிருந்த சரோஜினி, ஒரு சமயம் சதீஷ் பாபுக்கு பொருள் வசதி போதாது போலிருக்கிறது என்று நினைத்தாள். ஜோதிஷ் பாபு முதலிலேயே உபேந்திரனிடம் அனைத்தும் கேட்டிருந்ததால் பேசாமலிருந்தான். இதற்குள் டீ கோப்பை நிறைந்தது. சதீஷ் அதைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. அவன் சுவரில் மாட்டியிருந்த ஒரு சித்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"வாருங்கள், சதீஷ்பாபு, எல்லாம் தயாராக இருக்கின்றன" என்றான் ஜோதிஷ்.

சதீஷ் அருகில் வந்து, "நீங்கள் சாப்பிடுங்கள். நான் குளிக்காமல் சாப்பிட மாட்டேன்" என்றான். "அடடா! எனக்குத் தெரியவே தெரியாதே! போங்கள். நேரம் செய்யாதீர்கள்" என்றான் ஜோதிஷ்.

(தொடரும்)

வால் நட்சத்திரம்

ஆர். சரஸ்வதி

பெண்ணைத்தெய்வமென்கிறார்கள். சிலர் அத்தெய்வத்தை தம் இதயக் கோவிலில் வைத்துப் பூஜிக்கிறார்கள். சிலரோ தம் காலின் கீழ்த் தள்ளி இரக்கமின்றி மிதித்துக் கொல்லுகிறார்கள். வாழ்க்கை ஒரு நாடகம் என்று நான் காலேஜில் வாசித்து இருக்கிறேன். ஆனால், அதை அனுபவத்தில் உணர்ந்தபொழுது நான் அடைந்த வேதனை!

அதைத்தான் சொல்லப் போகிறேனே!

எனக்கு இப்பொழுது இருபத்திமூன்று வயதாகிறது. இவ்விருபத்திமூன்று வருடங்களில் நான் அனுபவித்து உணர்ந்ததுதான் என்ன? என் வாழ்க்கையை மூன்று பதங்களில் அடக்கி விடலாம். கனவு! விழிப்பு! ஏமாற்றம்! வாழ்க்கையைப் பற்றி நான் இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன். ஆனால், அதிலிருந்து விழித்துக்கொண்ட பொழுது நான் அடைந்தது மிகக் கசப்பான ஏமாற்றம்தான்.

அப்பா ஒரு வான சாஸ்திரி. அண்ணாவைவிட என்னைத்தான் அவர் அதிகமாக நேசித்தார். ஆனால் பிற்காலத்தில் நான் அன்புப் பிச்சைக்கு ஏங்குவேன் என்று உணர்ந்துதான் அவர் முதலிலேயே என்னிடம் அன்பைச் சொரிந்தார் போலும். அடிக்கடி என்னிடம் "ரோஹிணீ! நீ பிறந்த அதே தினத்தில்தான் நம் ஊரில் முதன் முதலாக வால் நட்சத்திரம் தோன்றியது. அது எப்படி மக்களுக்குக் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கிற்றோ, அதேமாதிரி உன்னாலேயும் பிறருக்குக் கஷ்டங்கள் ஏற்படலாம். நீ வாழ்க்கைப் பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் பார்த்து வையம்மா" என்பார். என்னால் பிறருக்குக் கஷ்டங்கள் ஏற்படுமென்று அப்பா சொன்னார். ஆனால் என்னைக் கேட்டால் பிறர்தான் என்னைத் துன்புறுத்தினார்கள் என்று சொல்லுவேன்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் என்னைப் பெண்கள் கலாசாலையில் சேர்க்க விரும்பினார் அப்பா. ஆனால் தன்னுடன் சேர்ந்து ஆண்கள் கலாசாலையில்தான் படிக்க வேண்டுமென்று அண்ணா பிடிவாதமாக சொல்லி விட்டான். அவன் போக்கே மிக்க விசித்திரமானது. தேச முன்னேற்றம், பெண்களுக்குச் சம உரிமை, விதவா விவாகம், இவை போன்றவைகள் அவனுடைய ஜெப மந்திரங்கள். அவனுடைய வார்த்தையைத் தட்ட முடியாமல் அப்பா என்னை ஆண்கள் கலாசாலையிலேயே சேர்த்து விட்டார்.

பௌர்ணமியன்று சமுத்திரம் கொந்தளித்துப் பொங்குகிறது. சமுத்திரத்தைப் போய்க் காரணம் கேட்டால் அதற்கென்ன தெரியும்? அதே போலதான் பள்ளி வாழ்க்கையில் அமைதியாயிருந்த என் மனம் கலாசாலையில் அரை நிமிஷம்கூட நிம்மதியில்லாமல் தத்தளிக்கத் தொடங்கியது.

அன்று காதம்பரியை நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். அந்தக் காதல் கதையைக் கேட்கக் கேட்க என் மனம் ஒருவித இன்ப வேதனையில் ஆழ்ந்துகொண்டிருந்தது. என்னை அறியாமல் என்னுடைய கண்கள் அடிக்கடி குமாரரை நோக்கியவாறிருந்தன. அவனும் அதை ஆமோதிப்பவன் போல் புன் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஆசிரியர் தம் இடிபோன்ற குரலில் "ரோஹிணீ!" என்றார். என்ன கேள்வி கேட்கப் போகிறாரோ வென்று பயந்து கொண்டே நான் எழுந்திருந்தேன். "கண்கள் எங்கே வட்டமிடுகின்றன?" என்று ரொம்பவும் கோபமாகக் கேட்டார். நான் பளிச் சென்று, "ஆசிரியர் ஆராய்ச்சி செய்வது காதம்பரியையா? அல்லது கண்களையா?" என்று கேட்டேன். வகுப்பில் கொல்லென்று சிரிப்பு. குமார் சிரித்தான். நானும் சிரித்தேன். ஆனால் அண்ணா மட்டும் சிரிக்கவேயில்லை. ஆசிரியர் மேஜையைப் பலமாக தட்டி விட்டு, "அதிகப் பிரசங்கி! உட்கார்!" என்றார்.

அன்று வீட்டிற்கு வந்ததும் அண்ணாவிடம் நான் வாங்கிய வசவு கொஞ்சநஞ்சமல்ல. அண்ணாவுக்கு குமாரரைக் கண்டாலே பிடிக்காது. அண்ணாவின் முற்போக்கான கொள்கைகளுக்கு நேர்விரோதமானவன் குமார். அண்ணா படிப்பைத் தவிர உலக விவகாரங்களில் அதிகமாக மனத்தைச் செலுத்துவான். குமார் ஒரு புத்தகப் புழு. அண்ணாவுக்கு டாம்பீகமான வாழ்க்கையில் அதிகப் பிரியம். குமாரரோ அடக்கமே ஆபரணமாகப் பூண்டவன். மற்றும் அவன் ஒரு கர்நாடகக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பெற்றோரை இழந்த பின்பு தன் தாய் மாமன் வீட்டிலேயே வசித்து வந்தான். எங்களைப் போன்ற பணக்காரன் அல்ல.

குமாரின் அற்புத தேஜஸ் பொருந்திய முகம் என்னை ரொம்பவும் வசீகரித்தது. அண்ணாவுக்கு இஷ்டமில்லாவிடினும் நான் அவனுடன் தாராளமாகப் பழக ஆரம்பித்தேன். அதன் விளைவு கடைசியில் எனக்கு குமார் இல்லாமல் வாழ்வது அரிது என்ற நிலைமைக்குக் கொணர்ந்து விட்டது.

அப்பொழுது தேசத்தில் சுதந்திரப் போராட்டம் மிக மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அண்ணா தேசத்திற்கு உழைக்காத ஜன்மம் என்ன ஜன்மமென்று சொல்லுவான். இந்த இயக்கத்தினால் அவனுக்கு ரொம்ப உற்சாகம் உண்டாகி விட்டது. அவன் போக்கு அதோடு மட்டும் நிற்கவில்லை. கலாசாலையிலும் நெருப்பை மூட்ட ஆரம்பித்து விட்டான்.

அண்ணாவின் வாக்கு சாதுர்யமும், தைரியமும் எல்லோருக்கும் தெரிந்ததே. அவன் என்ன செய்வானோ வென்று ஆசிரியர்களும் பயந்து கொண்டேயிருந்தார்கள். கடைசியில் எதிர் பார்த்தது நேர்ந்துவிட்டது. நாளைக்குப் பரீக்ஷை என்றால் இன்றே மாணவர்களையெல்லாம் தன் பக்கத்தில் சேர்த்துக்கொண்டு ஒரு வரும் பரீக்ஷை எழுதக் கூடாதென்று எதிர்க்க ஆரம்பித்து விட்டான். அவன் கூட்டத்தில் சேராதவர்கள் நான், குமார், இன்னும் சில மாணக்கர்கள்தான்.

குமாருக்குத் தேச சேவையில் வெறுப்பு ஒன்றுமில்லை. அவன் வாழ்க்கை அப்படி அமைந்து விட்

டது. பெற்ருேரை இழந்த அனுதையை தாய் மாமன் சும்மா படிக்க வைத்து விடுவானு? படிப்பு முடிந்து வேலே கிடைத்தவுடன்தான் செலவழித்த அவ்வளவு பணத்தையும் திருப்பித் தந்துவிட வேண்டுமென்று நிபந்தனே போட்டிருந்தான். இந்த வருஷம் தவறி விட்டால் ஒரு வருஷப் படிப்பு வீணுகப் போய்விடுமே என்ற கவலேயினுல்தான் அண்ணுவுக்கு எதிராக பரீக்ஷை எழுதத் துணிந்தான். குமாரின் கொள்கைகளே என்னுடைய கொள்கைகள் என்று கனவு கண்டுகொண்டிருந்த நான் குமாரின் பக்கமே சேர்ந்து விட்டேன்.

தன்னே மீறி யார் கலாசாலேக்குள் நுழைவார்கள் பார்க்கலாமென்று அண்ணு கூறிக் கொண்டிருந்தான். ஆனுல் நானே பரீக்ஷை எழுதப் போகிறேனென்று தெரிந்ததும் அவனுடைய சப்த நாடிகளும் ஒடுங்கிப் போய் விட்டன. அவனுடைய வாழ்க்கையிலேயே அவனடைந்த முதல் ஏமாற்றம் அதுதான். அவன் அவ்வளவு தடுத்தும் கேட்காமல் நானும் குமாரும் பரீக்ஷை எழுதினேம்.

ஆனுல் அண்ணு என்னேக் கோபிக்க வில்லே. எங்களுடன் விரோதம் பாராட்ட வில்லே. அவனுடைய சோகம் நிறைந்த கண்களேப் பார்த்த பொழுது நாம் எதற்காகப் பரீக்ஷை எழுதினேமென்று தோன்றியது. சாந்தமும் அன்பும் ஒரு உருவகமானவன் அண்ணு. அவனுடைய இதயத்தை நான் வெகு காலத்திற்குப் பின்பே உணர்ந்தேன்.

அம்மா என் கல்யாணத்தைப் பற்றி அப்பாவைத் தொந்திரவு செய்து கொண்டேயிருந்தாள். என்னே அப்பா கேட்ட பொழுது என் மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொல்லி விட்டேன். எனக்கும் குமாருக்கும் விவாகம் நிச்சயமாயிற்று. அண்ணுவுக்கு விரோதமாக அப்பா செய்த முதல் காரியம் அதுதான்.

"போயும் போயும் அந்தக் கர்நாடகக் குடும்பத்திலா நம்ம ரோஹிணியைக்கொடுக்கப் போகிறீர்கள் அப்பா! அவன் ஒரு கட்டுப் பெட்டியாயிற்றே!" என்று அண்ணு வாதாடினுன். நான் ஒரே பிடிவாதமாக, "மணந்தால் அவரைத்தான் மணப்பேன்! இல்லாவிடில் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே யிருப்பேன்" என்று சொல்லி விட்டேன்.

என் கல்யாணத்திற்கு முதல் நாள் அண்ணு சத்தியாக்கிரகம் செய்து ஜெயிலுக்குப் போய் விட்டான். இதை அவன் வேண்டுமென்றே செய்தான். எனக்கும் ஆத்திரம் பத்திக்கொண்டு வந்தது. "இவனு நம் கூடப் பிறந்தவன்! இவன் முகத்திலேயே விழிக்கக் கூடா"தென்று தீர்மானம் செய்து கொண்டேன். ஆனுல் பிற்காலத்தில் அவனிடம் தான் சரணடைய வேண்டுமென்று அப்பொழுதே நான் உணர்ந்திருந்தால் அவனுக்கு விரோதமாக அந்தக் கல்யாணத்தை நான் செய்து கொண்டேயிருக்க மாட்டேன்.

* * *

கல்யாணம் நடந்தது. அன்றிரவு அருந்ததி பார்க்க எங்களே வெளியில் கூட்டிக் கொண்டு வந்தார்கள். குமாரை நோக்கி "அருந்ததியைப் பார்த்தாயாவென்று உன் மனேவியைக் கேள்" என்ருர் புரோகிதர். குமார் என்

ளைப் பார்த்துக் கேட்டான். நான் தலை நிமிர்ந்து ஆகாயத்தை நோக்கினேன். என் கண்களுக்குப் பளிச் சென்று தெரிந்தது. ஒரு வால் நட்சத்திரம். "ஐயையோ! வால் நட்சத்திரம் தெரிகிறதே" என்று நான் கிரீச் சென்று கூவினேன் பழைய நினைவில் ஆழ்ந்தவளாய். எல்லோரும் "எங்கே? எங்கே?" என்று கேட்டார்கள். அது வரையில் ஒருவர் கண்ணிலும் படாமலிருந்த அந்த வால் நட்சத்திரம் அதற்குப் பிறகு எல்லோர் கண்களுக்கும் பளிச் சென்று தெரிந்தது. அப்பாவும் அம்மாவும் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

நான் புக்ககம் போனேன். அப்பா எவ்வளவு சொல்லியும் குமார் எங்களுடன் வசிக்க மறுத்து விட்டான். மிகச் சிறிய வீடு. நான்தான் சமையல் செய்ய வேண்டும். குமாரின் மாமா மாமிக்கும் நான்தான் பணிவிடை செய்ய வேண்டும். முதலில் விரும்பியதை நடத்தி விட்டோமென்ற இறுமாப்பில் நான் இதையெல்லாம் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் இவைகள் எனக்குப் புளித்துப்போய் விட்டன.

பணக்காரக் குடும்பத்தில் பிறந்து பட்டுப் பூச்சியைப் போன்ற வாழ்க்கை வாழ்ந்த எனக்கு இந்த எளிய வாழ்க்கை எவ்வளவு நாளைக்குப் பிடிக்கும்? குமாருக்கு ஐம்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு பள்ளிக்கூட வாத்தியார் வேலை தான் கிடைத்தது. அப்பாவின் பேச்சைக் கேட்டிருந்தால் பெரிய வேலை கிடைத்திருக்கும். அவன் தான் ஒரே பிடிவாதமாக மாமனார் கையை எதிர்பார்க்க மாட்டேனென்று சொல்லிவிட்டானே. என்னையும் அதிகமாக பிறந்தகத்திற்குப் போகக் கூடாதென்று சொல்லி விட்டான்.

என்னுடைய புக்ககத்து வாழ்வு இப்படிச் சீர் கெட்டுப் போகுமென்று நான் கனவில் கூடக் கருதவில்லை. எவ்வளவு இன்பக் கோட்டைகள் கட்டினேன்! குமாரின் வெளி வேஷத்தில் மயங்கிப் போனேன். அவனுடைய இதயம் இவ்வளவு கடினமாயிருக்குமென்று நான் எண்ணவேயில்லை.

இதன் நடுவில் அண்ணா ஜெயிலிலிருந்து வந்து விட்டானென்றும் நிர்மலா வென்ற யாரோ ஒரு விதவைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டானென்றும் எனக்குச் செய்தி வந்தது. அண்ணாவைப் பார்க்க வேண்டுமென்று என் உடம்பின் ஒவ்வொரு அணுவும் துடித்தது. குமார் ஒரே பிடிவாதமாக, "மாமா மாமி இருக்கிறவரைக்கும் விதவையை மணந்து கொண்டவன் வீட்டிற்கு நீ போகக்கூடாது" என்று சொல்லி விட்டான்.

"உங்களுடைய மாமா மாமிக்காக நான் என்னுடை வாழ்க்கை இன்பத்தை யெல்லாம் தியாகம் செய்ய வேண்டுமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்" என்று சாந்தமாகச் சொல்லி விட்டு குமார் வெளியே போய் விட்டான். அதற்குப் பிறகு பல நாட்கள் வரை நான் அவனுடன் பேசவேயில்லை.

அப்பா இறந்து விட்டாரென்று தந்தி வந்தது. இப்போழுது தடுக்க முடியாமல் போய் விடவே குமாரும் என்னுடன் கூட

வந்தான். அப்பா என் பேருக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் எழுதி வைத்திருந்தார். அண்ணா என்னைத் தனியாக உள்ளே கூட்டிக்கொண்டு போய் இதைச் சொன்னான். என் மனம் சந்தோஷத்தால் பொங்கியது. அண்ணா என்னை நோக்கி, "ரோஹிணீ! குமாரின் மனம் ரொம்ப விசித்திர மானது. அவனிடம் இதைப்பற்றி இப்போது ஒன்றும் சொல்லாதே" என்று எச்சரித்தான். நான் அவன் வார்த்தையைக் கவனியாமல் குமாரிடம் ஓடிப்போய் சமாச்சாரத்தைக் கூறிவிட்டு அவன் முகத்தை ஆவலுடன் நோக்கினேன். ஆச்சரியம்! நான் நினைத்தபடி அவன் முகம் சந்தோஷத்தினால் பிரகாசிக்கவில்லை! அதற்கு மாறாக சாந்தமாகவிருந்த அவன் முகம் கடு கடுப்பாக மாறியது. என்னை நோக்கி, "ரோஹிணீ! நீ ரொம்பப் பணக்காரியாகி விட்டாய்! என்னைவிட, உன் அண்ணாவைவிட நீ பணக்காரியாகி விட்டாய்! நான் ஏழைதான்! ஆனால் உன் தந்தை அதை இப்படிச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டாம்" என்றுரைத்து அவ்வறையை விட்டு வேகமாக வெளியே போனான்.

இந்தக் குமாரே ரொம்ப விசித்திரமானவன் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

சகிக்க முடியாத துக்கத்தினால் அம்மாவும் பத்து நாளைக்குள் அப்பாவைப் பின் தொடர்ந்து விட்டாள். நினைத்ததற்கு மேல் அதிக நாள் அங்கு தங்கும்படி நேர்ந்து விட்டதால் குமாருக்கு ரொம்பக் கோபம். முன்பு அவனிடமிருந்த சாந்த குணம் எப்படித்தான் மறைந்து போயிற்றோ! இப்பொழுதெல்லாம் என்னிடம் ரொம்பக் கடு கடுப்பாகவே நடந்துகொண்டான்.

நிர்மலா! அவள் எவ்வளவு பாக்கியசாலி! மனம் போல் நடக்கும் கணவன். கணவன், படிப்பு பணம் எல்லாம் பெற்றிருந்தாள். அவள் விதவையாயிருந்தால் என்ன குற்றம்? அவளுக்கிருக்கும் பாக்கியத்தில் கால் பங்குகூட எனக்கில்லை. என் மனம் ஏங்கி ஏங்கித் தவித்தது. அரை மனத்துடன்தான் நான் குமாருடன் புறப்பட்டுச் சென்றேன்.

*　　*　　*

வசந்த காலம், மழைக் காலம், பனி காலம் இவைகள்முறையே வந்து போயின.

ஒரு வருடம் உருண்டுசென்றது. முதலில் மாமாவும் பிறகு மாமியும் இவ்வுலகைத் துறந்து சென்றார்கள். கால் கட்டு விட்டது. இனிமேல் வாழ்க்கை இன்பம் நிறைந்ததாயிருக்குமென்று நான் கனவு கண்டேன். ஆனால் நான் அடைந்தது ஏமாற்றம்தான். என் மேல் அன்பை அள்ளிச் சொரிவான் என்று நம்பியிருந்த குமார் என்னிடம் எவ்வளவு கொடுமையாக நடந்து கொள்ள முடியுமோ அவ்வளவு கொடுமையாக நடந்து கொண்டான்.

காதல் கலியாணம்! எனக்கு வாய்த்த சந்தர்ப்பம் போல இன்னொரு பெண்ணுக்கு வாய்க்குமா வென்பது சந்தேகம்தான். ஆனால் என்னுடைய வாழ்க்கை எப்படியாகி விட்டது? குமாருடன் இரண்டு வருஷம் பழகிய பிறகுதான் நான் அவனை விவாகம் செய்து கொண்டேன். ஆனால் அவனுடைய குணத்தைச் சரியாக அறிந்து கொள்ள முடியாமல்

போய் விட்டது. அவனுடைய மனோ விகாரத்துக்குக் காரணமென்ன வென்பதை அப்பொழுது என்னால் உணரமுடியவில்லை. பிறகு தெரிந்த பொழுது என் நெஞ்சம் இடிந்து போய் விட்டது.

நானும் ஒரு பெண்தானே! எனக்கும் பொறுமையும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தன. குமார்தான் என் பணத்தைத் தொடக்கூடாதென்று உறுதி பூண்டிருந்தான். நான் ஏன் அதை என் சௌகரியத்திற்குச் செலவழிக்கக் கூடாது?

ஒரு சமையல்காரனைப் போட்டேன். மாதர் சங்கத்தில் சேர்ந்தேன். என்னுடைய போக்கு வரவுக்காக ஒரு சிறிய கார் வாங்கிக்கொண்டேன். அண்ணாவின் உதவியைக் கொண்டு இவைகளையெல்லாம் செய்து கொண்டேன்.

ஐப்பசி மாதம். வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்திருந்தன. பளீர் பளீரென்ற மின்னலும் அதைத் தொடர்ந்து கிடு கிடுவென்று இடியும் இடித்துக் கொண்டிருந்தது. ஜன்னலருகில் உட்கார்ந்தவாறு தெருவை நோக்கிக் கொண்டிருந்தேன். அன்று ஏனோ என் மனமும் இருண்டிருந்தது. ஜன சஞ்சாரமற்று தெருவு நிசப்தமாயிருந்தது. கொஞ்ச நேரத்தில் பலமான மழையும் பிடித்துக்கொண்டது. அறையின் மங்கலான வெளிச்சத்தில் எதிர்பக்கத்து சுவரில் விழுந்த என் நிழலைப் பார்த்த பொழுது வானம் என்னைப் பார்த்துதான் ஏதோ சொல்லமுடியாத துயரத்துடன் கண்ணீர் விடுவது போலிருந்தது.

இதே போன்ற ஒரு இரவில் தான் குமாரின் அன்பணைப்பில் நான் இவ்வுலகை மறந்திருந்தேன். ஆனால் இன்றோ? இந்த பயங்கரமான இரவில் தனிமை எனக்கு மிக்க துன்பத்தைத் தருமென்று தெரிந்திருந்தும் குமார் ஒன்பது மணியாகியும் வீட்டிற்கு வரவில்லை. எனக்கு துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. தேம்பித் தேம்பி அழுதேன்.

வாசல் கதவை யாரோ இடித்தார்கள். நான் ஆவலுடன் போய்த் திறந்தேன். அங்கு நான் எதிர்பார்த்த குமார் நிற்கவில்லை. பள்ளிக்கூடத்து வேலைக்காரன் நின்று கொண்டிருந்தான். திகிலுடன், "என்னடா, ஐயா எங்கே?" என்று கேட்டேன். "உங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுக்கச் சொன்னார்," என்று என் கையில் ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுத்து விட்டு அவ்விருளில் வேகமாக மறைந்துபோனான். தன் மனைவி தனியாக இருப்பாளே யென்ற கவலை அவனுக்கு.

என் வலது கண் வேகமாக துடித்தது. நடுங்கும் விரலினால் கடிதத்தைப் பிரித்தேன். மிகச் சிறிய கடிதம்தான் அது.

"ரோஹிணி!

நான் பெரிய பிசகு செய்து விட்டேன். ஆனால் அதை வெகு நாட்களுக்குப் பிறகுதான் உணர்ந்தேன். சம உயரமில்லாத இரு மாடுகள் எப்படி ஒரு வண்டியைச் சேர்ந்து இழுக்க முடியாதோ, அதே போல் சம அந்தஸ்து இல்லாத இருவர் வாழ்க்கை வண்டியை எப்படிச் சேர்ந்திழுக்க முடியும்? நான் அவ்வளவு தூரம் என் மனத்தை திடப்படுத்திக் கொண்டாலும் உனக்குத் தகுந்தவன் நான் இல்லையென்றே எனக்குப் படுகிறது. உனக்கு விடுதலை அளித்து விட்டேன். உனக்கு

ஒரு கணவன் இருந்தான் என்பதையே நீ மறந்துவிடு'' என்றெழுதியிருந்தது.

'உனக்கு ஒரு கணவன் இருந்தானென்பதையே நீ மறந்துவிடு' என்று குமார் எழுதியிருந்தான். ஆனல் நாளைக்கு என் வயிற்றில் இருக்கும் குழந்தை ''என்னுடைய அப்பா எங்கே?'' என்று கேட்டால் நான் என்ன பதில் அளிப்பேன்? தான் ஒரு தந்தையாகப் போகிறுமென்று தெரிந்திருந்தால் குமார் என்னைவிட்டுப் போயிருக்க மாட்டான். ஆனல் அதெப்படி தெரியாமலிருக்கும்? ஐயோ குமார்! நீ இவ்வளவு கோழையா! என்று வெம்பினேன்.

அதே வீட்டில் ஒரு வருஷம் குமாருக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அவன் திரும்பி வரவில்லை. பிறகு என் குழந்தையுடன் அண்ணுவிடம் அடைக்கலமடைந்தேன். நான் போன வேளை அண்ணுவுக்கு ரங்கூனில் பெரிய வேலை கிடைத்தது. நாங்களெல்லோரும் ரங்கூனுக்குப் பிரயாணமானேம்.

* * *

என் பணத்தைத் தொடக்கூடாதென்று அண்ணு சொல்லி விட்டான். எனக்கும் என் குழந்தைக்கும் வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் அவன் பணத்திலேயே செய்து வந்தான். நாம் சொன்னுலும் அந்தப் பிடிவாதக்காரன் கேட்கமாட்டானென்று நான் பேசாமலிருந்து விட்டேன்.

ஆனல் நிர்மலா?

அவள் என்னை விஷம்போல் வெறுத்தாள். அவளுடைய இன்ப வாழ்வில் இடையூருகத் தோன்றிய ஒரு முள்ளென்று என்னை அவள் கருதினுள். போன புதிதில் என்னிடம் அன்பாகத்தான் இருந்தாள். ஆனல் பண விஷயத்தில் அண்ணு காண்பித்த அலக்ஷியத்தைக் கண்டதும் அவள் மனம் மாறி விட்டது; என்னிடம் கடுகடுப்பாக நடக்க ஆரம்பித்தாள். நான் இதை வெளியில் காண்பிக்காமல்தான் இருந்தேன். ஆனல் அண்ணு இதை எப்படியோ தெரிந்து கொண்டு விட்டான்.

அண்ணுவின் கொள்கைதான் மிகுந்த முற்போக்கானவை என்று சொல்லியிருக்கிறேனே. என் விஷயத்திலும் அதைப் பிரயோகிக்க அவன் சிறிதும் தயங்கவில்லை. ஒரு நாள் திடீரென்று என்னை, ''ரோஹிணி! நீ மறுவிவாகம் செய்து கொள்ளுகிருயா?'' என்று கேட்டான்.

நான் அசந்துபோய் விட்டேன். ''என்ன அண்ணு இது? என்னிடமா இந்த வார்த்தையைச் சொல்லுகிருய்?'' என்று சிறிது கோபமாகவே கேட்டேன்.

''ஆமாம்! ரோஹிணி! உன்னிடம்தான்! இந்த அழகையும், யௌவனத்தையும் பாழாக்கப் போகிருயா? குமார் உயிருடன் திரும்பி வருவானென்று கனவு கண்டு கொண்டிருக்காதே! அவன் என்றைக்கோ தூக்குப் போட்டுக்கொண்டு செத்துப் போயிருப்பான்'' என்ருன் கடுமையான குரலில்.

என் உடம்பு நடுங்கிற்று. குமார் இறந்து போயிருப்பானென்று என்னுல் நம்ப முடியவேயில்லை. நடுங்கும் கைகளினல் ஓடிவந்த என் குழந்தையைப் பிடித்திழுத்து மார்புடன் அணைத்துக்கொண்டேன்.

இரண்டு நாள் கழித்து அண்ணு ஒரு சிறிய விளம்பரத்தைக் கொண்டு வந்து காண்பித்தான். அதில், "ஒரு குழந்தையுடைய அழகிய பணக்கார விதவைப் பெண்ணுக்குத் தகுந்த வரன் ஒன்று வேண்டும்" என்று அச்சடித்திருந்தது. அடியில் அண்ணுவின் பெயரும் விலாசமும் இருந்தது. பொங்கி வரும் அழுகையை அடக்க முடியாமல் அவ்விடத்தை விட்டு வேகமாக உள்ளே சென்றேன்.

ஒரே ஒரு பதில்தான் வந்தது. குறிப்பிட்ட ஒரு தினத்தில் என்னை வந்து பார்ப்பதாக அவ்வரன் எழுதியிருந்தான். அவனும் ஒரு தாரத்தை இழந்தவன்தானும்.

அன்று அண்ணு வரனை எதிர்பார்த்துக் கொண்டு வீட்டிலேயே இருந்தான். என்னை அலங்கரித்துக் கொள்ளும்படி ஆனமட்டும் சொன்னுன். நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன்.

வாசலில் அழகிய கார் வந்து நின்றது. ஒரு யுவன் இறங்கி உள்ளே வந்தான். தொப்பியைச் சரித்து வைத்துக் கொண்டிருந்தபடியால் முகம் நன்ருகத் தெரியவில்லை. மெதுவான குரலில் அண்ணுவிடம் ஏதேதோ பேசினுன்.

அண்ணு என்னைக் கூப்பிட்டான். முன்னுல் யோசித்திருந்தபடி குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு ஹாலில் நுழைந்தேன். அண்ணு என்னைக் காண்பித்து, "இவள் தான் ரோகிணி!" என்ருன். அந்த யுவன் நிமிர்ந்து என்னைப் பார்த்தான்.

மீசை வைத்துக் கொண்டிருந்தான். இருந்தாலும் அந்தக் கண்கள் லேசில் மறக்கக் கூடியதா! "ஐயோ! குமார்!" என்றலறினேன். மீசையை எடுத்தெறிந்து விட்டு என்னருகில் வந்து என்னிடுப்பிலிருந்த குழந்தையை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டான்.

அதே சமயம் அபாயச் சங்கு ஊதியது. அண்ணு பரபரப்புடன் "வாசல் பக்கம் ஓடுங்கள்! குழியில் இறங்குங்கள்!" என்று கூவினுன். நாங்களெல்லோரும் வாசல் பக்கம் ஓடினுேம். ஆனுல் குமார் குழந்தையுடன் கேட்டைத் தாண்டி தெருவில் ஓடினுன். "ஐயோ குமார்! குழந்தை! என்றலறினேன். "உனக்கு விடுதலை அளித்து விட்டேன்! பூரண விடுதலை! குழந்தை என்னுடையது!" என்று கூவிக் கொண்டே குமார் ஓடினுன். ஓடி விட்டான். என்னை விட்டு வெகு தூரத்திற்கு ஓடி விட்டான். எங்கேயோ ஒரு குண்டு வெடித்தது.

மறு நாள் இரண்டு சவங்களும் கண்டெடுக்கப் பட்டன. ஈமக் கடன்களை முடித்து விட்டு நாங்கள் ரங்கூனை விட்டுப் புறப்பட்டோம். அந்தக் கடைசிக் கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்ட பொழுது நான் அழவில்லை. எதற்காக அழ வேண்டும்? என் நெஞ்சு உறைந்து போய் விட்டது. அதை உருக்குவதற்காக எங்கிருந்து ஒரு இளஞ் சூரியன் வரப் போகிருன்.

5

சென்னை வந்து சேர்ந்தோம். ரங்கூன் சம்பவத்திற்குப் பிறகு நான் ஒருவருடனும் பேசவில்லை. ஒரு சொட்டுக் கண்ணீரும் சிந்தவில்லை. எங்கே சகிக்க முடியாத துக்கத்தினுல் நான் ஏதாவது

செய்து கொண்டு விடுவேனோ வென்று அண்ணா என்னை விட்டுப் பிரியாமல் என்னுடனேயே இருந்தான்.

அன்று மாலை அண்ணா எங்கேயோ அவசரமாக வெளியில் போனான். ஒரு சிறிய பெட்டியில் எனக்கு வேண்டிய துணி மணிகள் செக் புஸ்தகம் முதலியவைகளை எடுத்து வைத்துக் கொண்டு நான் புறப்பட்டேன்.

நிர்மலாவின் கண்களில் நீர் தளும்பியது. "பயப்படாதே நிர்மலா! அண்ணாவைச் சென்ட்ரலுக்கு வரச் சொல்" என்று சொல்லி விட்டு என்றென்றைக்கும் அவளிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

முதல் மணி அடித்தது.

வெளுத்த முகத்தோடு பரபரப்புடன் என் 'பெட்டி'யை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான் அண்ணா. அதே சோகக் கண்கள். விழிக் கடையில் முத்துப் போன்ற இரண்டு கண்ணீர்த் துளிகள்.

என் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒத்திக் கொண்டான். "ரோகணீ! இனி உன் வாழ்க்கையில் நான் குறுக்கிட மாட்டேன். எங்கே போகிறாய் என்று மட்டும் சொல்" என்றான் நடுங்கிய குரலில்.

"கல்கத்தாவுக்கு"

இரண்டாவது மணி அடித்தது.

"கல்கத்தாவில் எங்கே ரோகணீ?"

"சாந்தி நிகேதனுக்கு!"

வண்டி நகர்ந்தது. தூரத்தில் கண்ணீர் ததும்ப நின்ற அந்த முகம், தேய்ந்த நிலாவைப் போல் காட்சி அளித்தது.

புதுக் கதை:

கல்யாணியின் கனவு

(கே. விஜயராகவன்)

'கல்யாணி, உனக்கு என்றைக்குக் கலியாணம்' என்று வேடிக்கையாக என்னைக் கேட்பார்கள். 'என் பேரே கல்யாணியாச்சே எனக்கு எதுக்குக் கலியாணம்' என்று பதில் சொல்லுவேன். அப்போது நான் சிறு பெண்.

"பாவம்! கல்யாணியைப் பாருங்கள். இன்னும் கலியாணமே இல்லை. பெற்றவர்கள் இருந்தால் அவளுக்கு இன்னுமா கலியாணம் செய்யா திருப்பார்கள். வயசு ஆச்சோ இல்லையோ. அவள் தலை விதி. யாரைநோவது." இந்த வார்த்தைகளைக் கேட்கும் போதெல்லாம் என் நெஞ்சையே பிழந்த மாதிரி இருக்கும். இப்போது நான் சிறு பெண் இல்லை.

என் வயதுள்ள பெண்கள், என்னோடு ஓடியாடித் திரிந்த பெண்கள், என்னை விட வயதில் குறைந்த பெண்களெல்லாம் கலியாணம் செய்து கொண்டு விட்டார்கள். அவர்கள் குழந்தையும் கையுமாய்த் திரிவதைப் பார்த்தால் எனக்கே வெட்கமாயிருக்கும். என் பன்னிரண்டாவது வயதில் என் பெற்றோர்கள் என்னை விட்டுப் பிரிந்து விட்டார்கள். என் தந்தை தன் பங்குக்கு வந்த செல்வத்தை யெல்லாம் தலைகால் தெரியாமல் செலவு செய்து அழித்து விட்டார். கொஞ்சமாவது மீதி இருக்க வில்லை.

அதுமுதல் நான் என் பெரியப்பா வீட்டில் தான் வளர்ந்து வந்தேன். அங்கு எனக்குத் 'துடைகாலி' என்பது பெயர். நான் பிறந்ததால் தான் என் பெற்றோர்கள் செல்வத்தையும் இழந்து உயிர் துறந்தார்கள் என்பது பெரியம்மாளுடைய அபிப்பிராயம். என் பெரியப்பா வீட்டில் நான் ஒரு பணிப்பெண்ணைப் போலத் தான். சொந்த வீட்டில் பெற்றோர்கள் ஆதரவில் செல்வமாய் வளர்வதற்கும் இன்னொருவர் வீட்டில் இருப்பதற்கும் வித்தியாசம் இல்லையா? என் பெரியப்பா கிராமத்திலேயே பெரிய பணக்காரர். அவர் செட்டும் கட்டுமாக வாழ்பவர். அவருக்கு என் பெரியம்மா வழியில் அளவற்ற செல்வம் கிடைத்தது. அவரை மிராசுதார் கிருஷ்ணசாமி நாயுடு என்று சொல்லுவார்கள். என் பெரியப்பாவுக்கும் ஒரு பெண் உண்டு. என்னை விட வயதில் சிறியவள் தான். லக்ஷ்மி என்று அவளுக்குப் பெயர். ஒரே பெண் ஆனபடியால் அவளைச் செல்லமாக வளர்த்தார்கள். அவளால் நான் பல தடவைகளில் உதையும் பட்டிருக்கிறேன். என் தாய் வழியில் யாராவது இருந் திருந்தால் கூட நான் என் பெரியப்பாவை விட்டு அகன்றிருப்பேன். அப்படியும் யாரும் இல்லை. என்னைப் போலவே என் தாயும் அனாதை.

என் பெரியப்பா மகள் எனக்குத் தங்கை தானே. என் தங்கை என்னை விட அழகுடையவள் அல்ல. நான் அழகி தான். சந்தேகமே இல்லை. வேலை செய்து செய்து என் உடல் கட்டுக் குலையாமல் பளபளப்பாக இருந்தது. என் அங்கங்கள் எல்லாம் கடைசல் பிடித்தது போலவே இருக்

கும். என்ன இருந்தும் என்ன பயன்? எனக்குக் கலியாணம் ஆகாமல் இருந்தது ஒரு குறை தான். என் பெரியப்பாவும் என் விஷயத்தில் அசட்டையாகவே இருந்தார். என் பெரியம்மா ளுக்கு என் விஷயத்தைப் பேசவே பிடிக்காது. பெரியப்பா அவள் சொன்னபடி தான். இவர்கள் என் விஷயத்தில் அக்கரை கொண்டால் தானே யாராவது பெண் கேட்க வருவார்கள். ஆரம்பத்தில் இந்தச் சிந்தனையே இல்லாமல் வேலையுண்டு நானுண்டு என்றிருந்தேன். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் என்னைக் கிளறுவார்கள். அதையும் பொருட்படுத்தாமல் தான் இருந்தேன். ஆனல் என் வயதுள்ள இளைய பெண்களெல்லாம் தங்கள் கணவரோடு திரிவதைக் காணும்போதெல்லாம் என் உள்ளம் வேதனை அடைய ஆரம்பித்தது. வயது ஆகஆக இந்த ஏக்கம் அதிகரித்து வந்தது.

என் உள்ளத்தை உள்ளபடி அறிந்து செய்ய என் பெற்றோர்களா இருக்கிருர்கள்! என் மனம் ஊஞ்சலாடத் தொடங்கி விட்டது. என் மன ஓட்டத்தைக் கட்டுப் படுத்தவே முடியவில்லை. அது கனவு லோகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்தது. அழகான ஒரு கணவனைக் கற்பனை செய்து கொண்டு கொஞ்சிக் குலாவ ஆரம்பித்து விட்டது. தூங்கும் போதும் இதே கனவுதான். வேலை செய்யும் போதும் மனம் அடிக்கடி கற்பனு லோகத்திற்குப் போய் விடும். வேலையிலும் உற்சாகங் குறைந்து அடிக்கடி வசவுகளும் குறைவில்லாமல் கிடைத்தது. ஒரு சமயம் வாலிபர்களைக் கண்டால் ஓடி ஒளிவேன். அல்லது தலையைக் குத்திக் கொண்டு நடப்பேன். இப்போது அவர்களைத் தலை நிமிர்ந்து பார்ப்பது இன்பமாகப் பட்டது. அவர்களோடு பேசவும் என் மனம் என்னைத் தூண்டியதுண்டு. சீதை, நளாயினி, சாவித்திரி போன்ற உத்தமிகளின் கதைகளைப் படித்தும், சொல்லவும் கேட்டிருக்கிறேன். அவர்களைப் போல் வாழ வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு.

நான் லட்சிய வாழ்க்கை நடத்தவே விரும்புகிறேன். அதற்கு ஒரு கணவன் வேண்டும். ஒரு பெண் கலியாணமின்றி மனித சமூகத்தில் பழகுவது அவ்வளவு சுலபமல்ல என்பது எனக்குத் தெரியும். கிராமத்தில் எத்தனையோ இளங் காளைகள் என்னைக் கவனிக்கிருர்கள். என்னேடு பேசவும் ஆசைப்படுவதாகக் காட்டிக் கொள்கிருர்கள். ஆனல் என்னைக் கலியாணம் செய்து கொள்ளும் எண்ணம் ஒருவனுக்காவது இருப்பதாகத் தெரியவில்லை. பின் இந்த உறவு ஏனே? என்னை விரும்பினல் என் பெரியப்பாவிடம் கேட்டு தைரியமாகக் கலியாணம் செய்து கொள்ள முன் வரட்டுமே! எனக்கு ஒருவர் மீதும் ஆசை உண்டாகவில்லை. என்னை மணப்பவரை நான் நேசிப்பேன். அவரை தெய்வமாக வணங்குவேன். இது என் வைராக்கிய சிந்தை. இதுவும் சில சமயங்களில் கலைந்து தவருன வழியில் கனவு காண்பதும் உண்டு. வெறும் கனவுதானே. அதற்காகத் தெய்வம் என்னை மன்னிக்கும் என்பது என் திடமான நம்பிக்கை. இளமையைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல என்பது அனுபவத்தில் தான் தெரிகிறது.

என் தங்கை லக்ஷ்மிக்கு விவாகத்துக்கு ஏற்பாடு ஆயிற்று.

மாப்பிள்ளை வீட்டார் பெரும் பணக்காரர்கள். எங்கோ தூரத்திலிருந்து ஒரு நாள் திடீரென வந்து குதித்தார்கள். நிச்சய தாம்பூலம் எல்லாம் ஆயிற்று. கலியாண தினமும் வந்தது, என் உள்ளத்தில் அன்று ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. கலியாண தடபுடல்களும் ஆரவாரங்களும் சொல்லி முடியாது. என் தங்கையைக் குளிப்பாட்டவும், சிங்காரிக்கவும், ஆடவும் பாடவும் என்னென்னவோ செய்தார்கள். நான் எதிலும் கலந்து கொள்ள வில்லை. ஆனால் என் விதி இதில் சம்பந்தப் பட்டிருந்தது. அதைச் சொல்லுமுன் என் தங்கையின் கலியாண விமரிசைகளையும் சொல்லித்தான் ஆக வேண்டும். இல்லா விட்டால் என் விதி எப்படிக் குறுக்கே வந்தது என்பது தெரியாது.

*　　*　　*

அன்று ஊரெல்லாம் அமளி துமளியாக இருந்தது. இரவு பனிரண்டு மணியாகியுங் கூட ஜன நடமாட்டம் வழக்கத்துக்கு அதிகமாகவே இருந்தது. வீதிகளெல்லாம் இரண்டு ஓரங்களும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வெட்டப் பட்டு இருந்தன. அங்கங்கே வீதியின் குறுக்கே பசுமையான மாவிலைத் தோரணங்கள். கலியாண வீட்டுக்கு முன்னும், மாப்பிள்ளை விடுதிக்கு முன்னும் பச்சைத் தென்னந்தடுக்குகளைக் கொண்டு பெரிய பெரிய பந்தல்கள் அமைத்து வாழை, கமுகு, மாவிலைத் தோரணங்கள், இளநீர், தென்னம்பாளைகள் முதலியன கட்டி அலங்காரம் செய்திருந்தார்கள். காஸ் லைட்டுகள் அங்கங்கே எரிந்து கொண்டிருந்தன. பந்துக்கள் இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே வந்து குழுமியிருந்தார்கள். ஊருக்குள்ளேயும் எல்லாருடைய வீடுகளிலும் இரண்டு தினங்களாக அடுப்பு மூட்டப் படவில்லை. எல்லாருக்கும் கலியாண விருந்து. ஒரே அமர்க்களம். பெரிய களந்தை பெரியசாமி, அவன் தம்பி சின்னசாமி இரட்டை நாதஸ்வரம். கோடையிடி குப்புசாமி தவுல். நாதஸ்வரக் குழாயிலிருந்து ஸ்வர வரிசைகள் அலை அலையாகக் கிளம்பி வந்து கொண்டிருந்தன. தவுல் வாத்தியத்தின் இடிகளும் அடிகளும் பந்தலையே ஆட்டிக்கொண்டிருந்தன. நிசப்தமான அந்த நடு இரவிலே அந்த ஊதலும், இடியும் வெகு தூரம் பரவி அக்கம் பக்கத்துக் கிராம வாசிகளின் தூக்கத்தையும் கலைத்திருக்கும்.

கலியாண வீட்டின் ஒரு பக்கத்திலே

பெரியப்பாவும் இன்னும் நெருங்கிய பந்துக்களும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தார்கள். அவர்களுடைய முகத்தில் ஏன் இவ்வளவு கலவரம்? எத்தனை ஆடம்பரமான ஏற்பாடுகள். இரண்டு நாட்களாக பந்துக்களின் கொட்டம். ஊரெல்லாம் கலியாணப் பேச்சு. கலியாணச் செலவு விவரங்கள், விருந்து வகைகள், சதிர் கச்சேரி ஏற்பாடுகள் இதைப் பற்றி இராப் பகலாக கிராமவாசிகள் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் குழப்பம் எப்படி வந்தது? ஆனால் விஷயம் அம்பலத்திற்கு வர அதிக நேரம் பிடிக்க வில்லை.

இரவு எட்டு மணிக்கே வர வேண்டிய மாப்பிள்ளை இரவு பனிரண்டு மணியாகியும் வரவில்லை. காலை ஐந்து மணிக்குள்ளாக முகூர்த்தம் நடந்தாக வேண்டும். மாப்பிள்ளை வந்து விடுவார், வந்து விடுவார்...... என்று எதிர் பார்த்தார்கள். சும்மா இருப்பவர்கள் அதோ வந்து விட்டார் இதோ வந்து விட்டார் என்று வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் குழப்பம் எல்லாருக்கும் பரவி விட்டது. பெரியசாமி பிள்ளை வகையரு தங்கள் குழாய்களையும் சாமான்களையும் பையில் போட்டுக் கட்டி வைத்து விட்டுத் தங்கள் விஷயத்தைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். இவ்வளவு பெரிய கூட்டத்தில் தங்கள் திறமையைக் காட்ட எங்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற வருத்தமும் கூட அவர்களுக்கு.

கலியாண வீட்டுக்கும் ஊர் எல்லைக்குமாக ஜனங்கள் சங்கிலி கோத்தது போல நடந்த வண்ணமாக இருந்தார்கள். அன்று நல்ல மழைக்கால் இருட்டு. ஆகையால் தீவட்டிகளின் உதவியால் அங்கு மிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். தூரத்தில் ஏதாவது மினுக்கென்று வெளிச்சம் தெரிந்தாலும் 'அதோ மாப்பிள்ளை வந்து விட்டார்' என்று எல்லோரும் கவனிப்பார்கள். பெரியப்பாவுக்கு அளவில்லாத ஏமாற்றம். பெரிய இடம் என்று தூரத்தைக் கூடக் கவனியாது கலியாணத்திற்கு அவசரப்பட்டு ஏற்பாடு செய்து விட்டார். மாப்பிள்ளை ரொம்ப தூரத்திலிருந்து வர வேண்டும். சவாரி வண்டிகள் ஆதிக்கம் பெற்றிருந்த காலம் அது. இப்போது போல மோட்டார் வண்டிகள் கிடையாது. தூரத்தில் ஒரு வண்டி 'ஜல் ஜல்' என்ற சலங்கை ஒலியோடு வந்து கொண்டிருந்தது. 'அதோ மாப்பிள்ளை வண்டி வருகிறது.' 'அதோ, அதோ' என்று எல்லோரும் ஏகமாகக் கத்தினர்கள். 'மற்ற வண்டிகள் பின்னால் வந்து கொண்டிருக்கும்' என்றது பதில் குரல். அந்த வண்டி பக்கத்தில் வந்த போது அது பெண் வீட்டைச் சேர்ந்த ஒரு வண்டியாக இருந்தது, எல்லாருடைய முகங்களிலும் அசடு வழிந்தது.

மணியோ ஏறிக் கொண்டே போகிறது. மாப்பிள்ளை வர வேண்டிய திசையில் வண்டியும் ஆட்களும் அனுப்பப் பட்டார்கள். மாப்பிள்ளைக்கு என்னவோ? ஏதோ? திருட்டுக் கொள்ளை நடந்திருக்குமோ என்னவோ? ஒருவிவரமும் தெரியவில்லை.

இடையில் புரோகிதர் வேறு அவசரப் படுத்திக் கொண்டே இருந்தார். திடீரென்று மாப்பிள்ளை வந்து விட்டால் என்ன செய்வது என்று, அவர் முகூர்த்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டிருந்தார். முகூர்த்த மேடைக்குப்

பக்கத்தில் அமர்ந்து ஏதேதோ மந்திரங்களை வாய் விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். எங்கே கலியாணமே நின்று விடுகிறதோ என்ற கவலையால் மந்திரங்களைக் கூட தவறுதலாகச் சொல்லிக் கொண்டிருந்தார். இடையிடையே முகூர்த்த காலத்தில் இருக்க வேண்டிய சாமான்களுக்கு உத்திரவுகள் போட்டு அவற்றை நிறை வேற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அப்போது பெரியப்பா அந்தப் பக்கம் வந்தார்.

"கிருஷ்ணசாமி இங்கே வா அப்பா!" என்று புரோகிதர் கூப்பிட்டார்.

பெரியப்பா கவலை நிரம்பிய முகத்தோடு அவருக்கு எதிரில் நின்றார்.

"என்ன யோசனை?" என்றார் புரோகிதர்.

"நீங்கள் தான் சொல்ல வேண்டும்!"

"முகூர்த்தத்தை குறித்த காலத்தில் நடத்தியாக வேணும்!"

"மாப்பிள்ளை யில்லாமல் எப்படி நடத்துவது?"

"கிருஷ்ணசாமி, நான் சொல்வதைக் கேளு. இந்த முகூர்த்தம் நின்றால் ஏதோ அபசகுனம் ஏற்பட்ட மாதிரி. உன் குடும்பத்துக்கே அனர்த்தம் உண்டாகும். எப்படியாவது நடத்தி விடு!"

"அதைத்தான் எப்படி நடத்துவது?"

"வேறு மாப்பிள்ளை யில்லையா?"

"அடராமா, அந்த மாப்பிள்ளையைப் பற்றிய முடிவு தெரியாமலா? சுத்தப் பைத்தியக்கார யோசனை!"

"அப்படியல்லப்பா நான் சொல்வது, அதாவது இந்த முகூர்த்தத்தில் வேறு ஒரு முகூர்த்தத்தை நடத்திவிடுவது"

"யாருக்கு நடத்துவது?

"யாராவது இரண்டு பேரை வைத்துத் தான்."

"என்னை வைத்துத் தான் நடத்த வேண்டும்" என்றார் எரிச்சலோடு.

"அப்பா, லக்ஷ்மி உன் ஒரே பெண், மகா லக்ஷ்மி மாதிரி. அவளுக்காகத் தான் இவ்வளவு தடபுடல்களும். அதற்கு விக்கினம் ஏற்பட வேண்டாம், அவ்வளவு தான்."

பெரியப்பாவுக்கு இப்போது கவலை அதிகமாகி விட்டது. இவ்வளவும் செய்த பின் கலியாணமே நின்று விட்டால் தற்கொலை செய்து கொள்ள வேண்டியது தான். அவருடைய மூளையே குழம்பியிருந்தது. நிலையின்றி அலைந்து கொண்டிருந்தார்.

கலியாணத்துக்கு வந்திருந்தவர்கள் ஒரு பக்கத்தில் நிச்சிந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் மறு நாள் நடக்கப் போகும் விருந்து சதிர்கச்சேரிகளைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். எந்த விதமான விசாரமும் இல்லாத ஒரு கூட்டம் சீட்டாட்டத்தில் முனைந்திருந்தது. இன்னொரு கூட்டம் அதை வேடிக்கை பார்ப்பதில் உற்சாகம் கொண்டிருந்தது. பெண்களெல்லாம் இன்னொரு விசாலமான கூடத்தில் தூங்கிக் கொண்டிருந்தார்கள், அழுது கொண்டிருந்த குழந்தைகளை சிலர் அதட்டியும், பாடியும் தூங்க வைத்துக் கொண்டிருந்தார்கள். சில கிழங்கள் காலை நீட்டி வெற்றிலை மென்றபடியே ரசமா

கப் பேசிக் கொண்டிருந்தார்கள். மணப் பெண்ணின் அறையில் இளம் பெண்கள் கூட்டமாக நித்திரையின்றி ஒரே கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். மாப்பிள்ளை வராத செய்தி கேட்டு மணப் பெண்ணுக்கு மயக்கம் வந்து விட்டது. எல்லோருமாகச் சேர்ந்து அவளுடைய மயக்கம் போக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

*　　*　　*

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த
பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து—
என்னைக்
கைத்தலம் பற்றக் கனுக் கண்டேன்
தோழீ நான்

தன் தெய்வீகக் கணவன் வந்து தன் கையைப் பற்றிய கனவை ஆண்டாள் தன் தோழியிடம் சொல்லி ஆனந்தப் பட்ட பாசுரத்தின் வரிகள் என் நினைவில் வந்து மோதியது. ஸ்ரீ ஆண்டாள் தெய்வப் பிறவி. நான் சாதாரணப் பெண்தானே. என் மனதில் உருவான ஒரு அழகிய நாயகனைக் குறித்துத்தான் நான் கனவு கண்டு கொண்டிருந்தேன், ஆசையோடு என் கணவன் என் கைபற்ற என் உள்ளத்தில் பொங்கிய ஆனந்தத்தை............

'கல்யாணி, கல்யாணி!' என்று யாரோ பலமாகக் கூப்பிடுவதைக் கேட்டு என் கனவு கலைந்தது. திடுக்கிட்டு எழுந்தேன்.

என் பெரியப்பா எதிரில் நின்றூர்.

"கல்யாணம் செய்து கொள்ளுகிருயா கல்யாணி?" என்று அவர் கேட்டார்.

நான் குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தேன், மௌனம் சம்மதம் என்று அவர் போய் விட்டார் போலிருக்கிறது. அடுத்த கணம் பல பெண்களுக்கு மத்தியில் நான் இருந்தேன்.

நான் ஒருத்தி இருப்பதாக அவர்களுக்கு அதுவரை தெரியாமல் இருந்தது. 'அதிர்ஷடத்தைப் பாரு அதிர்ஷடத்தை, கலியாணிக்கு வந்த அதிர்ஷடத்தை' "கலியாணி, உனக்குத் தான் இப்போது கலியாணம். உன் தங்கை புருஷன் இன்னும் வரவில்லை. அதற்கு முந்தி உனக்குச் செய்யப் போகிறூர்கள். தூங்காதே, கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரம்மா!" என்று என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள். என்னை ஒரு பொம்மை மாதிரி அவர்கள் நினைத்துக் கொண்டார்கள் போலிருக்கிறது. என்னை அப்படியே தூக்கிக் கொண்டு போய் குளிப்பாட்டி ஆடை அணிகள் பூட்டி அலங்காரம் செய்து தலைவாரி ஜடை போட்டார்கள். நெற்றிக்குத் திலகமிட்டு, கையில் கண்ணாடியைக் கொடுத்து 'பாரம்மா கல்யாணி, உன் அழகைப் பார்! என்று வேடிக்கை செய்தார்கள். அவர்கள் பேச்சும் செய்கையும் என்னை உன்மத்தமாக்கி விட்டது. என்னை மணையில் அமர்த்தி ஏதோ இரண்டொரு சீர்களெல்லாம் செய்தார்கள்.

மணையில் மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் என்னை உட்கார வைத்த போதுதான் சுய நினைவு கொஞ்சம் வந்தது.

தலையை சற்று உயர்த்திப் பார்த்தேன். என்னைச் சுற்றிலும் ஒரே கும்பல். கொட்டு மேளமும், நாதஸ்வரமும் என் காதைத்

துளைத்தது. என் அருகில் ஒருவர் அமர்ந்திருந்தார். கனவு இல்லை உண்மைதான் என்று எனது மன துக்குப் பட்டது. எனக்குக் கணவராக வந்த அந்த உத்தமரைக் கண்ணெடுத்துப் பார்க்க நான் வெட்கப்படவில்லை. நான் என் கனவில் கண்டது போலவே அவர் என் அழகுக் கணவராகத் தான் இருந்தார். அவ்ருடைய கம்பீர மான தோற்றமும், புன்னகை தவழும் முகமும் என் உள்ளத்தை அந்த நிமிஷத்திலேயே ஆட்கொ ண்டு விட்டன. அவரை முன் பின் நான் பார்த்ததில்லை. அவர் யாரோ, நான் யாரோ? என் இனத்தவராகத் தான் இருக்க வேண்டும், சந்தேகமில்லை. இல் லாவிடில் பெரியப்பா இணங்கு வாரா? யாராயிருந்தால் என்ன, என் வாழ்க்கைக்கு, கை கொடுத் துதவிய மஹான் அவரே. என் தெய்வம்.

"கல்யாணி, வெட்கமில்லை உனக்கு? புருஷனை இப்பவே அப்படிப் பாக்கறயே கண் கொட்டாமே!" என்று யாரோ சொல்வதைக் கேட்டுத்தான் தலை குனிந்தேன். புரோகிதரின் அர்த்தமாகாத மந்திரங்களுக்கு இடையே என் கழுத்தில் மாங் கல்யம் கட்டியாகி விட்டது. பெண்ணும் மாப்பிள்ளையும் கை கோர்த்துக் கொண்டு மணவறை யைச் சுற்றி வரவேண்டும். மாப் பிள்ளையின் கையை நான் பற்ற வேண்டும் என்று மாப்பிள்ளையின் சார்பில் சில பெண்கள் வாதாடி னார்கள். மாப்பிள்ளைதான் என் கையைப் பற்றி என்னை அழைத் துச் செல்ல வேண்டும் என்று என் சார்பில் சிலர் வாதாடினார் கள். நான் வெட்கத்தால் ஒன் றும் செய்யாது தவித்தேன். என் கட்சி வலுவாக இருந்ததால் அவரே என் கையைப் பற்றினார். அப்பப்பா! அவர் கைப் பற்றிய அந்த நிமிஷத்தில் என் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கியதை அவர் தான் அறிந்திருக்க முடியும். மின்சாரத்தைப் போன்ற ஒரு உணர்ச்சி என் தேகமெல்லாம் பரவி என் உடம்பே வியர்த்துக் கொட்டியது. நான் ஒரே இன்ப லாகிரியில் மூழ்கி விட்டேன். அவர் என்னைத் தொட்டு மாங்கல் யம் கட்டும் போது கூட அந்த உணர்ச்சி ஏற்படவில்லை. அப் போது நான் கட்டையைப் போல உணர்ச்சியற்று இருந்தேன். எனக்கு முன்பக்கத்தில் புரோகிதர் பெரிய ஓமகுண்டத்தை வளர்த்து புகையைக் கிளப்பி என்னைத் திணற அடித்துக்கொண்டிருந்தார்.

என் விதி இப்போது தீர்மானிக் கப்பட்டு விட்டது. அதுவும் பல பேர்களுக்கு மத்தியில். இனி விதி விட்ட வழிதானே செல்ல வேண்டும்! கலியாணத்திற்கு வந்திருந்த அனைவரும் எங்களை ஆசீர்வதித்தார்கள்.

என் கணவர் எல்லோரையும் போலவே கலியாணத்துக்கு வந்தி ருந்தவர். அவருடைய குடும்பத்தில் என் மாமியும் அவரும் இரண்டே பேர்தான். என் பெரியம்மாவுக்கு சகோதர வழியில் பந்தத்துவம் உடையவர். சுக ஜீவனம் நடத் தக் கூடிய அளவுக்கு அவருக்கு செல்வம் இருக்கிறது என்பதை யெல்லாம் பின்னால் தான் அறிந்து கொண்டேன். என் பெரியம்மா வின் விருப்பப்படி தடைபட்ட அந்த முகூர்த்தத்தில் அவர் என்னை விவாகம் செய்யச் சம்மதித்து அதை நிறைவேற்றினார். இல்லை, அவர்களுடைய மானத்தைக் காப் பாற்றினார். என் கலியாண வைபவம் முடிய மறுநாள் காலை

எட்டு மணியாயிற்று. எல்லோரும் தங்கள் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு என் கலியாணத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

சுமார் பத்து மணியிருக்கும் என் தங்கையின் மாப்பிள்ளை அவருடைய பரிவாரங்கள் சூழ வந்து சேர்ந்தார். அவர்கள் இரவுக்கிரவு வரும்போது எதிர்பாராதபடி மழை வந்ததையும் வழியில் இருந்த ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டபடியால் குறித்த காலத்தில் வரமுடியவில்லை என்பதையும் கதையாகச் சொன்னார்கள். மறுநாளும் முகூர்த்த நாளாக இருந்தபடியால் என் தங்கையின் கலியாணம் வெகு சிறப்பாகவே நடைபெற்றது. எல்லாருக்கும் திருப்தி.

என் பெரியப்பா மட்டும் "மூத்த பெண் இருக்க, இளையவளுக்கு கலியாணம் செய்வது அடுக்குமா? தெய்வத்துக்கே இஷ்டமில்லை. கல்யாணி வருத்தப்படாதே" என்று பச்சாதாபப்பட்டார். இப்போது அவர்மேல் எனக்கு என்ன வருத்தம்? நான் என் கணவரோடு ஊருக்குப் புறப்பட்டபோது எனக்கு ஏராளமாகச் சீர்வரிசைகளும், நகைகளும் கொடுத்து அனுப்பினர்.

சென்றதைக் குறித்து நான் வருந்தவில்லை. அப்பாவையும் அம்மாவையும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து விடை பெற்றேன்.

*　　　*　　　*

'கல்யாணி' என்று யாரோ பரிவோடு கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பினேன்.

அவர்தான்.

அப்போதே என் வயது பத்துக் குறைந்து விட்டது.

மலர்மணம்

முகப்புப் படம் :

கனகசபைப் பிள்ளை அவர்கள்

தமிழ் அறிஞர் திரு. கனகசபைப் பிள்ளை அவர்கள் தமிழுக்கு அரிய தொண்டு செய்த தமிழ்ப் பெரியார். திரு. பிள்ளை அவர்களைப் பற்றி தமிழ் ஆராய்ச்சியிலே பெரிதும் ஈடுபட்டுள்ள அன்பர் அ. கி அவர்கள் கட்டுரை உதவி இருக்கிறார்.

'மங்கியதோர் நிலவினிலே' தாம் கண்ட சுந்தரக் கனவையும், பொங்கி வரும் புன்னகையின் வெள்ளத்தையும், அதிலே மெய்யிழந்து நின்ற இன்ப வாதனையையும், ஒரு இனிய கவிதையைப் போன்று இயற்றி இருக்கிறார் நமது ரா. நா.

பழந்தமிழ் வேந்தர்கள் வாழ்வை எண்ணினாலே இன்ப ரசம் ஊற்றெடுக்கிறது. தமிழ்ச் சரிதம் விரிய ஆரம்பிக்கிறது. வித்துவான் அ. கிருஷ்ணமூர்த்தி உணர்ச்சி மிக்க நடையிலே வீர லட்சுமி கொலு வீற்றிருக்கும் அற்புதமான காட்சிகளைச் சித்திரித்திருக்கிறார்.

இந்த இதழில் "இசை" எனும் இனிய பெயர் சூடிய கலைஞர், அளித்துள்ள கவிதை, "ஆனந்தம்"

இப்போது எங்குமே கதைகள் குவிந்திருக்கின்றன. ஆனால் கதை ஆராய்ச்சி அதாவது கலை ஆராய்ச்சி, பொதுவில் இலக்கிய ஆராய்ச்சி என்றுதான் சொல்வோமே, அதிகமாக வெளிவர வேண்டும். நல்ல தெளிவு ஏற்பட வேண்டும். காவியம் ஓவியம் சங்கீதம் முதலியவற்றிலே உளங் கனிந்த ஸ்ரீமதி சாஸ்திரி அவர்கள் அருமையாக கலை விளக்கம் தந்திருக்கிறார்கள். திரு. கோதண்டராமன் கலைஞனையும் சமூகத்தையும் கலைக் கண்களோடு படம் பிடித்திருக்கிறார்.

"திருலோகன்" சின்னஞ்சிறு கடிதத்திலே மகத்தான உண்மைகளை ரொம்ப லேசாக வெளிப்படுத்துகிறார். அதே சமயம் அது 'பொழுது போக்கு' என்பதையும் அவர் மறந்துவிடவில்லை. நாட்டின் இலக்கிய வளத்திற்கு இது பெரிதும் உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.

குழந்தை உள்ளத்தை ஸ்ரீமதி அபயம் குழந்தை உள்ளத்தோடு வர்ணிக்கிறார். கமலா பத்மநாபன் அழகான சிறுகதையைத் தந்திருக்கிறார். வழக்கம்போல் ஸ்ரீமதி சரஸ்வதியின் கற்பனை ரொம்ப அபாரமாக இருக்கிறது. பெண் உள்ளத்தின் விதவித விந்தைப் போக்குகளை இளவேனிலின் இன்பம் போன்று எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நாரண—துரைக்கண்ணன் புகழ்பெற்ற எழுத்தாளர். பெண்ணுக்கிழைக்கும் பெரும் பிழையைக் காணச் சகியாத துரைக்கண்ணன் 'பௌர்ணமி இரவி'லே படம் பிடித்துள்ள சித்திரத்தைப் பாருங்கள்.

— ஆசிரியர்

THE
COCHIN TEXTILES

(Proprietors : The west coast Agencies Limited)
[Incorporated in COCHIN STATE]

MANAGING DIRECTOR:

RM. ALAGAPPA CHETTIAR,

M. A., BAR-AT-LAW, D. LITT.

TELEGRAM:
' TEXTILES, TRICHUR

TELEPHONE
TRICHUR 40.

PUDUKAD MILLS POST. COCHIN STATE

Working Spindlage
29880 Spindles

★

MANUFACTURERS OF

BEST QUALITY SWADESHI YARN IN FINER COUNTS 40s. 60s. & 80s. TO SUIT THE REQUIREMENTS OF THE CONSTITUENTS.

★

Also manufacturers of the Cheese, Cone and Doubled Yarn.

இரண்டாம் போர் முனை

தொடங்கி விட்டது

பலமைல்களுக்கப்பால் அது நடைபெறுகிறது

என்ருலும்

சென்னையிலுள்ள நாம் மே. த. கவர்னர்யுத்த

நிதிக்குத் தாராளமாய்ப் பணம் கொடுத்து

அதற்கு உதவலாம்

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

சகல பண்டங்களுக்கும் போக்குவரத்து சாதனங்கள்

கீழ்க் கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் வியாபார, விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க வசதிகள் இருக்கின்றன.

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்

போன்: மதராஸ் "8536" : : தந்தி: "ROAD HAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1 செரி ரோடு, சேலம்
2 ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்
3 கண்டோன்மெண்ட், திருச்சினுப்பள்ளி
4 கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, மதுரை
5 ஸ்ரீ நரசிம்ம ராஜாரோடு, பெங்களூர்

மார்க்கங்கள்

1 மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2 மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3 மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4 கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5 கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6 சேலம் — நாமக்கல் — திருச்சினுப்பள்ளி

உங்களது பணியைச் செய்ய எப்போதும்

காத்துள்ளோம்.

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்;

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளின், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

சென்னை 600 008

199796

★

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam

போன் 218 A

தந்தி "ராஜா"

அபூர்வ ஆபரணங்கள்!

வனப்புள்ள வைரங்கள்!!

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

கடைத்தெரு : கோயமுத்தூர்

—: தபால் பெட்டி 139 :—

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியா
விலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம்
தமிழ்ப் படங்களைத் தயாரித்த இணையற்ற
ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகி வரும் படங்கள்.

★

ஹரிதாஸ் — ராயல் டாக்கீஸ்
வால்மீகி — சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
சாலிவாகனன் — பாஸ்கர் பிக்சர்ஸ்

★

மற்றும் இரு அற்புதமான தமிழ்ப் படங்கள்

★